# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20
பக்கங்கள்: 28

சுடர் 33 கதிர் 221 ஆனி 21ஆம் நாள் வியாழக்கிழமை 05 ஜூலை 2018 வள்ளுவர் ஆண்டு 2049


## வடக்குக் கடலில் 'வயலர்ஸ்' கருவி பயன்படுத்த தடையில்லை

இராணுவத் தளபதி தெரிவிப்பு » 25

# ஒற்றையாட்சி, பௌத்தத்துக்கான முன்னுரிமையைப் பாதுகாப்போம்

### விஜயகலா விவகாரத்தில் உரையாற்றும்போது தலைமை அமைச்சர் ரணில் உறுதிபடத் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 5
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை நாம் தடை செய்துள்ளோம். அந்தத் தடையை மீறி விடுதலைப் புலிகளை மீள் உருவாக்க வேண்டிய அவசியமில்லை. நாட்டின் ஒற்றையாட்சியையும், பௌத்த மதத்துக்கான முன்னுரிமையையும் நாம் பாதுகாப்போம். இந்தக் கொள்கையின் பிரகாரம் நாம் செயற்படுவோம். மூவின மக்களும் எதிர்பார்க்கும் அரசியல் தீர்வின் ஊடாக மனித உரிமையையும் பாதுகாத்து அதிகாரத்தைப் பகிர்ந்து தீர்வு வழங்குவோம். இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் நேற்றுத் » 06

## கரடி தாக்கியதில் இருவர் காயம்

வவுனியாவில் சம்பவம்

வவுனியா, ஜூலை 5
கரடி தாக்கியதாகத் தெரிவித்து படுகாயமடைந்த நிலையில் வவு » 04

## கோத்தாவின் வழக்கை விசாரிக்க தடை

*மேன் முறையீட்டு நீதிமன்றம் விதித்தது*

கொழும்பு, ஜூலை 5
எவன்கார்ட் நிறுவனத்துக்கு மிதக்கும் » 04

## புலிகளின் காலத்தில் அனைத்து குற்றங்களையும் அவர்களே செய்தனர்

அமைச்சரவைப் பேச்சாளர் குதர்க்கம்

கொழும்பு, ஜூலை 5
தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில் குற்றச் செயல்கள் இடம்பெறவில்லை என்று திருமதி விஜயகலா மகேஸ்வரன் கூறியமை ஒருவகையில் சரியாகத்தான் இருக்கின்றது. புலிகள் காலத்தில் அனைத்துக் குற்றச் செயல்களையும் புலிகளே செய்தனர். ஏனையவர்கள் » 04

## தெற்கின் எதிர்ப்புக்கள் கலாவுக்கு எதிரானதல்ல

தமிழர் மீதான பயத்தின் பிரதிபலிப்புக்களே என்கிறார் விக்கி

யாழ்ப்பாணம், ஜூலை 5
இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனுக்கு எதிரான தெற்கின் நடவடிக்கைகள் அவருக்கு எதிரானது அல்ல. தமிழர் மீதான சந்தேகம், வெறுப்பு, பயம் யாவற்றையும் அது பிரதிபலிக் » 06

## விஜயகலாவின் பின்னணியில் நான் இல்லை

*மகிந்த ராஜபக்ச தெரிவிப்பு*

கொழும்பு, ஜூலை 5
இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனின் செயற்பாட்டின் பின்னால் மகிந்த உள்ளதாகச் சிலர் என் மீது குற்றச் » 06


see more news in
newuthayan.com


டெனீஸ்வரன் விவகாரம்:

## வடக்கு ஆளுநர் மற்றும் முதல்வருக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தயாராகிறது

யாழ்ப்பாணம், ஜூலை 5
மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய இடைக்காலத் தீர்ப்பை இதுவரை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனத் தெரி » 25



## விஜயகலாவின் உரைக்கு விசிலடித்த அரச பணியாளர்கள் மீது விசாரணை

மாவட்டச் செயலர் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 5
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் மற்றும் அயலுறவுத்துறை அமைச்சர் கலந்து கொண்ட நிகழ்வில் அநாகரிகமாக நடந்து கொண்ட அரச பணியாளர்கள் தொடர்பில் விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு பிரதேச செயலர்களுக்கு யாழ்ப்பாண மாவட்டச்செயலர் கடிதம் » 06

வடக்கு - கிழக்கு

## அபிவிருத்தி அதிகார சபை நிறுவ விக்கியுடன் பேச்சு

*சபையில் ரணில் அறிவிப்பு*

கொழும்பு, ஜூலை 5
வடக்கு-கிழக்கு அபிவிருத்தி அதிகார சபை நிறுவுவது தொடர்பாக வடக்கு மாகாண முதலமைச்சருடன் பேசுவதற்கு தயாராக உள்ளேன். இது தொடர்பாக சட்டவரைவை நிறைவேற்றுவதற்கு மாகாண » 04

## ஆசிரியர்களின் ஆர்ப்பாட்டத்தில் திடீர் குழப்பம்

ஒருவர் காயம்

கொழும்பு, ஜூலை 5
கல்வி அமைச்சுக்கு முன்பாக கல்வியைப் பாதுகாப்பதற்கான தொழிற்சங்க ஒன்றியத்தால் நேற்றுப் புதன்கிழமை முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் திடீரெனக் குழப்பம் ஏற்பட்டது. ஒருவர் காயமடைந்தார். அவர் தலங்கம ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.
ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு இடையிலான முரண்பாடு காரணமாகக் குழப்பம் ஏற்பட்டது. மயக்கமடைந்து வீழ்ந்த நபர் காயத்துக்குள்ளாகியுள்ளார் » 06

## விஜயகலாவை விசாரிக்கும் பொறுப்பு பிரதிப் பொலிஸ்மா அதிபர் லதீபிடம்

கொழும்பு, ஜூலை 5
தமிழீழ விடுதலைப் புலிகளை மீண்டும் உருவாக்க வேண்டும் என்பதே தமது முக்கிய நோக்கம் என்று இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்த சர்ச்சைக்குரிய கருத்துத் தொடர்பில் விசாரணை செய்யும் » 06

எம்மை மறுவாழ்வுக்கு அனுப்ப முன்னர்

## வடக்குக்கு வாருங்கள் நிலமையை பாருங்கள்

பிரதியமைச்சர் ரஞ்சனுக்கு அழைப்பு விடுக்கிறார் விக்கி » 04

## வடக்குப் பாடசாலைகள் வழமைபோல் இயங்கின

யாழ்ப்பாணம், ஜூலை 5
அரசியல் பழிவாங்கல்களுக்காகக் கல்வித்துறையில் மேற்கொள்ளப்படும் முறையற்ற செயற்பாடுகளை நிறுத்துமாறு கோரி நாடு முழுவதும் கல்வித்துறையினர் நேற்றுச் சுகவீனவிடுமுறைப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். வடக்கு மாகாணத்தில் சுகவீனவிடுமுறைப் போராட்டம் பெரியளவில் வெற்றியளிக்கவில்லை. » 06

முகமூடிக் கும்பல் அட்டகாசம்

## வாள்வெட்டில் மாணவன் உள்ளிட்ட இருவர் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 5
முகமூடி அணிந்த வாள்வெட்டுக் கும்பலின் இருவேறு தாக்குதலில் பாடசாலை மாணவன் உள்ளிட்ட இருவர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இலக்கத் தகடற்ற உந்துருளியில் முகமூடி அணிந்து வந்த இருவர், கொக்கு » 04

## வன்முறைகளைக் கட்டுக்குள் கொண்டுவர யாழ்ப்பாணத்துக்கு மேலதிக பொலிஸார்

வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 5
யாழ்ப்பாணத்தில் திடீரென அதிகரித்துள்ள வன்முறைகள் மற்றும் குற்றச்செயல்களை முழுமையாகக் கட்டுப்படுத்தும் நோக்கிலும், அடையாளம் காணப்பட்டுள்ள ஆவாக் குழுவை முற்றாக ஒழிக்கும் நோக்கிலும் சிறப்புப் பொலிஸ் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பொலிஸாரின் விடுமுறைகள் எதிர்வரும் 18ஆம் திகதி வரை இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன், மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களிலிருந்து பொலிஸார் மேலதி » 06

## மகிந்த சிந்தனையை முன்னெடுப்போம் அடுத்த அத்தியாயத்துக்கு தயாராகுங்கள்

அறைகூவல் விடுக்கிறார் மகிந்த

கொழும்பு, ஜூலை 5
பெப்ரவரி பத்தாம் திகதி கிடைத்த வெற்றியின் இரண்டாம் அத்தியாயத்துக்கு தற்போது நாம் வந்துள்ளோம். அதை விளையாடுவதற்கு தயாராகுமாறு கேட்டுக்கொள்கின்றேன். இரண்டாம் அத்தியாயமே வெற்றி அத்தியாயமாக அமையவுள்ளது. அதன் பின்னர் நாம் » 06



## கல்விக் கண்காட்சி

மட்டக்களப்பு.ஜீலை 5
மட்டக்களப்பு சிவாநந்தா தேசிய பாடசாலையின் ஆரம்பப் பிரிவும் சிவாநந்தா பழைய மாணவர்களின்ஆற்றல்கல்விக்கண்காட்சி நேற்று முன்தினம் இடம்பெற்றது.
கண்காட்சியில்மாணவர்களின்முயற்சியில் உருவாக்கப்பட்ட கைவினை மற்றும் கைப் பணிப் பொருள்கள் காட்சிபடுத்தப்பட்டன.
இதில் 5000 க்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர். (ந.ரி4)

## அதிகாலை வீடு புகுந்து திருடர்கள் கொள்ளை

மட்டக்களப்பு.ஜீலை 5
பெரியகல்லாறிலுள்ள வீடொன்றில் 15 பவுண் நகைகள் கொள்ளையடிக்கப்பட்டன.
இந்தச்சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றது எனப்பொலிஸார் தெரிவித்தனர். வீட்டின் உரிமையாளர்கள் உறக்கத்தில் இருந்த போது வீட்டினுள் புகுந்த திருடர்கள் பெண்ணின் கழுத்தில் இருந்த தாலிக்கொடியை அறுத்துள்ளனர். நித்திரை கலைந்த பெண் சத்தமிட்டதையடுத்து திருடர்கள் தப்பிச் சென்றனர் எனக் கூறப்பட்டது.
இது தொடர்பாக வீட்டின் உரிமையாளரால் களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டது.
இதனைத் தொடர்ந்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.
பெரியகல்லாற்றில் இனத்தெரியாதவர்களின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுகின்றது. இதனால் மக்களிடையே அச்ச உணர்வு காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ந.ரி4)

## முதியவரின் சடலம் மீட்பு

கொழும்பு.ஜீலை 5
வேயங்கொடயிலுள்ள வாய்க்கால் ஒன்றிலிருந்து முதியவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. வதுரவத்தையைச் சேர்ந்த 85 வயதுடைய முதியவரே சடலமாக மீட்கப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
சடலமாக மீட்கப்பட்டவரின் உடலில் சிறியகாயங்கள் காணப்பட்டது எனக் கூறப்பட்டது.
கடந்த 15 வருடங்களாக அயலவர்களின் உதவியுடன் அந்தப் பெண் தனிமையில் வாழ்ந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.
மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ந.ரி4)

## இரத்தினக் கற்களுடன் சீன நாட்டுப் பெண் கைது

கொழும்பு.ஜீலை 5
சட்டவிரோதமான முறையில் இரத்தினக்கற்களைநாட்டுக்குள்எடுத்துவந்தசீனநாட்டுப்பெண் கைதுசெய்யப்பட்டார். சந்தேகநபர்கட்டுநாயக்கா வானூர்தி நிலையத்தில் கைதுசெய்யப்பட்டார் எனப் பெலிஸார் தெரிவித்தனர்.
இவரிடமிருந்து 48 இலட்சம்பெறுமதியான இரத்தினக்கற்கள்மீட்கப்பட்டன. மேலதிகவிசாரணைகளைப்பொலிஸார் மேற்கொண்டனர். (ந.ரி4)



## மன்னார் சதொச வளாகத்தில் 27 ஆவது நாளாக அகழ்வுப் பணி

மன்னார், ஜூலை 5
மன்னார்நகரநுழைவாயிலுக்கு அண்மையிலுள்ள சதொச விற்பனை நிலைய வளாகத்தில் அகழ்வு பணிகள் நேற்று 27 ஆவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டன.

மன்னார்நீதிவான்ரி.ஜே.பிராபாகரன் மேற்பார்வையில் சிறப்புசட்டமருத்துவநிபுணர் டபல்யூ. ஆர். ஏ.எஸ்.ராஜபக்ஸதலைமையில்அகழ்வு பணிகள் இடம்பெற்றுவருகின்றன.
அவருடன்இணைந்துகளனி பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ராஜ் சோம தேவா மற்றும் அவரின் குழுவினரும் அகழ்வு பணியை மேற்கொண்டு வருகின்றனர்.
இந்த அகழ்வுப் பணிகள் தற்காலிகமாக குறைக்கப்பட்டுள்ளன.
அகழ்வில்கண்டுபிடிக்கப்பட்டது. பகுதி அளவு மற்றும் முழு மனித எச்சங்களை அப்புறப்படுத்தும்பணிகள்தற்போதுநடைபெறுகின்றன.
அதேவேளை, அப்புறப்படுத்தல்பணிகளைஅறிக்கையிட செல்லும் ஊடகவியலாளர்களுக்கு அங்கு பணியாற்றும் உத்தியோகத்தர்களால்இடையூறு விளைவிக்கப்படு கின்றதுஎன்றுதெரிவிக்கப்பட்டது.
நேற்று அகழ்வு பணி தொடர்பில் செய்தி சேகரிக்கச்சென்ற ஊடகவியளாலர்கள் செய்தி சேகரிப்பதற்கு இடையூராக பொலிஸார் செயற்பட்டுள்ளனர்.
இதனால்அங்குகுழப்பநிலை ஏற்பட்டது எனக் கூறப்பட்டது.
ஊடகவியலாளர்கள் இந்த விடயத்தைஅகழ்வுபணிக்கு பொறுப்பதிகாரியான சட்ட மருத்துவநிபுணரின்கவனத்துக்கும் காணாமல் ஆக்கப்பட்டோரின் சார்பில் முன்னிலையாகி இந்த அகழ்வுப் பணியை கவனித்து வரும் சட்டத்தரணிகளின்கவனத்துக்கும் கொண்டு சென்றனர் என்றும்தெரிவிக்கப்பட்டது. (ரி4,60,56)

## கொள்ளையில் ஈடுபட்ட சந்தேகநபர்கள் கைது

மட்டக்களப்பு.ஜீலை 5
களுவாஞ்சிக்குடியில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்று கூறப்படும் மூன்று சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டன. கடந்த 29 ஆம் திகதி களுவாஞ்சிக்குடியிலுள்ள வீடொன்றில் 23 இலட்சம் ரூபா பெறுமதியானதங்கநகைகளும்பணமும்கொள்ளையடிக்கப்பட்டன.
இதுதொடர்பாக களுவாஞ்சிக்குடி பொலிஸ்நிலையத்தில் வீட்டின்உரிமையாளரினால்முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டது.
இதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போதே சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர். சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ரி4)



## ஒரே இலக்கங்களுடன் இரு மோ. சைக்கிள்கள் சந்தேகநபர்கள் கைது

மட்டக்களப்பு.ஜீலை 5
சட்டவிரோதமான முறையில் ஒரே இலக்கத்தில் இரு மோட்டார்சைக்கிள்களைப் பாவனையில்வைத்திருந்த இரண்டு சகோதரர்கள் கைதுசெய்யப்பட்டனர்.
காத்தான்குடி பிரதான வீதியில் ஒரு மோட்டார் சைக்கிளும், ஏறாவூரில் மற்றொரு மோட்டார்சைக்கிளும்நேற்றுக் கைப்பற்றப்பட்டது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
இந்த ஒரே இலக்கங்களைக் கொண்ட மோட்டார் சைக்கிள்கள்கடந்தஆண்டு கொள்வனவு செய்யப்பட்டுள்ளது எனக் கூறப்பட்டது. சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்து வதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ரி4)



## சிறுவர் பிரிவு விரிவாக்கல் சேவை நிகழ்வு

மட்டக்களப்பு.ஜீலை 5
மட்டக்களப்பு கோறளைபற்று மேற்கு பிரதேசபையின்கீழ்நிர்வகிக்கப்படும்மீராவோடை பொதுநூலகத்தில் சிறுவர் பிரிவு விரிவாக்கல் சேவை ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.
நீண்டகாலாமாக அந்தச்சேவைசெயற்படவில்லை இந்தச்சேவைஆரம்பிக்கப்பட்டதனால் முன்பள்ளி மாணவர் தொடக்கம் அனைத்து சிறுவர்களும் பயனடைய வாய்ப்பு ஏற்படுத்தி கொடுக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ரி4)

## அம்மன் ஆலய சிலை திருமலையில் எரிப்பு

திருகோணமலை,ஜீலை 5
திருகோணமலை முட்டுச்சேனையிலுள்ள குளக்கட்டு அம்மன் ஆலயத்தின் சிலைகள் எரித்துச் சேதமாக்கப்பட்டன.
இந்தச்சம்பவம்நேற்றுமுன்தினம் இடம்பெற்றதுஎனப்பெலிஸார் தெரிவித்தனர். கிராமிய முறையில் வழிபட்டு வரும் ஆலயம் இனம்தெரியாதோரால்எரிக்கப்பட்டதுஎனவும் சிலைகள், உண்டியல் மற்றும் அங்கிருந்த சிலபெருள்களும் உடைத்துச்சேதமாக்கப்பட்டது எனவும் கூறப்பட்டது. மேலதிக விசாரணைகளைப் பொலிஸார்மேற்கொண்டனர். (ந.ரி4)



## வாகன விபத்தில் ஒருவர் படுகாயம்

திருகோணமலை,ஜூலை 5

திருகோணமலை இலங்கைத்துறைமுகத்துவாரம் கடற்படை முகாமுக்கு அருகில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார். இந்தச்சம்பவம்நேற்றுமுன்தினம்இடம்பெற்றது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கெப் ர.க வாகனமும் மோட்டார் சைக்கிளும் நேருக்குநேர் மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றது எனக் கூறப்பட்டது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த சீனன்வெளியைச் சேர்ந்த 40 வயதுடைய நபரே படுகாயமடைந்தநிலையில்திருகோணமலைபொதுமருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

விபத்துத்தொடர்பில்மேலதிகவிசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ரி4,40)

## உந்துருளி விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

பதுளை,ஜூலை 5

பதுளை பிபிலையில் இடம்பெற்ற வாகன விபத்தில்ஒருவர்உயிரிழந்ததுடன்மூவர்காயமடைந்தனர். இந்த விபத்து நேற்று இடம்பெற்றது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இரண்டுஉந்துருளிகள் ஒன்றுடன் ஒன்று மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றது எனக் கூறப்பட்டது.

விபத்துக்குள்ளானவர்கள் பதுளை அரசினர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சைபயனின்றிஒருவர்உயிரிழந்தார்எனத் தெரிவிக்கப்பட்டது.

புத்தலைபொலிஸ்நிலையத்தில்கடமையாற்றிய 32வயதுடையபொலிஸ்அதிகாரியே இவ்வாறு உயிரிழந்தார். மேலதிக விசாரணைகளைப் பொலிஸார்மேற்கொண்டனர். (ரி4)

## மீன்களை திருடியவருக்கு விளக்கமறியல்

திருகோணமலை,ஜூலை 5

மீன்களைத் திருடிய குற்றச்சாட்டில், கைதானவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

திருகோணமலை, தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மீனவர் ஒருவரின் 10 கிலோகிராம் மீன்களைத் திருடிக் கொண்டு சென்ற போதே, சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை நீதிவான் முன்னிலையில் முற்படுத்திய போதே, சந்தேக நபரை 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, திருகோணமலை நீதிமன்ற பதில் நீதிவான் ஏ.எம்.அன்பாஸ், உத்தரவிட்டார்.

திருக்கடலூர் பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய நபரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ற,ரி2)

# விதாதா வள நிலையங்கள் அமைத்து வேலைவாய்ப்பு

### யாழ்ப்பாணத்துக்கு நேற்று வந்த அமைச்சர் சரத் அமுனுகம தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஜூலை 5**

**யாழ்.மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலகங்களிலும் விதாதா வள நிலையங்கள் அமைக்கப்பட்டு அவற்றின் ஊடாக இளைஞர், இளம் பெண்களுக்கு பன்னாட்டு ரீதியில் வேலைவாய்ப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**

இவ்வாறு விஞ்ஞான தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்தார்.



யாழ்.மாவட்டத்தில்பலசெயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக நேற்று வந்திருந்த தொழில்நுட்ட மற்றும் ஆராய்ச்சி அமைச்சர் சரத் அமுனுகம யாழ். மாவட்ட செயலகத்தில் யாழ்.மாவட்ட செயலர் நா. வேதநாயகன் உட்பட பிரதேச செயலாளர்கள் மற்றும் யாழ்.மாவட்ட செயலக உத்தியோகத்தர்களுடன்சந்தித்துக்கலந்துரையாடினார்.

இதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதேஅவர் இவ்வாறுதெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

யாழ்.மாவட்டத்தில்பலசெயற்றிட்டங்களை முன்னெடுக்கும்நோக்குடன்வந்துள்ளேன்.

யாழ்.மாவட்டத்தில்உள்ளஇளைஞர்யுவதிகளுக்கானதொழில்கற்கைகளைஆரம்பிக்கும்நோக்கில்விதாதாவளநிலையங்களில் வேலை வாய்ப்புப் பெறக்கூடிய 8 கற்கை நெறிகள் நடத்தப்படுகின்றன.

அந்தபயிற்சிநிலையங்களில்உள்ளகுறைகளை நிவர்த்தி செய்யும் வகையில் மாணவர்கள் வேலை வாய்ப்பைப் பெறுவதற்கு விதாதாவளநிலையங்களில்தொழில்பயிற்சிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளையேமுன்னெடுக்கதீர்மானித்துள்ளோம்.

விதாதா வள நிலையத்தில் பயிற்சி பெரும் மாணவர்களுக்கு ஆங்கில மொழியைக் கட்டாயமாக படிப்பதற்கான ஏற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளோம்.

வறிய மாணவர்களுக்கு ஆங்கில மொழியையும் தொழில்நுட்ப பாடமும் படிப்பதற்கான வாய்ப்புக்கள் கிடைப்பதில்லை. ஆனால் வசதி படைத்த மாணவர்களுக்கு ஆங்கிலமொழி மற்றும் தொழில்நுட்ப பாடங்களைபடிப்பதற்கானவசதிகள்கிடைக்கின்றன.

இவ்வாறான கற்கைகளைப் படிப்பவர்கள், தொழில் வாய்ப்பையும் பெற்றுக்கொள்ள முடியும். தாதியப் பயிற்சிகள் மற்றும் தொழில்நுட்பம், ஆங்கில கற்கைகள் உள்ளிட்டபலபாடநெறிகளை ஒரேவிதாதாவள நிலையங்களில் கற்பிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அனைத்துப் பிரதேச செயல்கங்களிலும் உள்ள விதாதா வள நிலைய்ங்களில் ஒரே மாதிரியான வசதிகளை எதிர்பார்க்க முடியாது. சில விதாதா வள நிலையங்களில் ஆசிரியர்பற்றாக்குளைகள்நிலவும். அதற்கு ஏற்றவாறு ஒரு விதாதா வள நிலையத்தில் அனைத்து வசதிகளையும் ஏற்படுத்த எதிர்பார்க்கின்றோம்.

விதாதாவளநிலையங்களில்கற்கும்மாணவர்களுக்கு பன்னாட்டுக்கு ஒப்பான சான்றிதழ்களைவழங்கமுடியும். அந்தசான்றிதழ்களைப் பயன்படுத்தி உள் நாட்டிலும் சரி, வெளிநாட்டிலும் சரி வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பாக அமையும். என்றார். (ரி4,106)



அமைச்சர் சரத் அமுனுகம நேற்று கிளிநொச்சிக்குச் சென்றார். கிளிநொச்சி அறிவியல்நகரில் அமைந்துள்ள ஜேர்மன் ரெக்குக்குச் சென்ற அமைச்சர் அங்கு இடம்பெறும் கற்றல் செயற்பாடுகள் தொடர்பில் கேட்டறிந்தார். ஜேர்மன் நாட்டின் உதவியுடன் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வந்துள்ள மாணவர்களின் தொழிதுறைசார் பயிற்சிகள் தொடர்பிலும் அவர் கேட்டறிந்தார். ஜேர்மன் ரெக் முதல்வரினால் அவை தொடர்பில் அமைச்சருக்கு விளக்கமளிக்கப்பட்டது. (ற,6,35)



## குருதிக் கொடை முகாம்

திருகோணமலை,ஜூலை 5

திருகோணமலை கப்பல்துறை ஆயுள்வேத தள மருத்துவமனையின் 14ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு குருதிக்கொடைமுகாம் நேற்று இடம்பெற்றது.

இதில் கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தின் ஆணையளர் மருத்துவர் ஶ்ரீதர், மருத்துவமனை அத்தியட்சகர் மருத்துவர்தவச்செல்வன், மதகுருமார், மருத்துவர்கள் மற்றும் இராணுவ சிப்பாய்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ரி4,40)

## ஐ.நாவின் முன்பாக தனிமனிதப் போராட்டம்

ஜெனீவா,ஜூலை 5

இலங்கையில் இயங்கும் அடிப்படைவாத குழுக்களுக்கு எதிராக மனித உரிமை மற்றும் ஊடக சுதந்திரத்தைக் காப்பதற்கான முஸ்லிம் மனித உரிமைகள் அமைப்பின் செயலர் ஆசுக் றிம்ஜான் தனிமனிதப் போராட்டம் ஒன்றை ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை சபையின் முன்றலில் நேற்று முன்தினம் முன்னெடுத்தார்,

இதன்போது, அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இலங்கை தவ்ஹீத் ஜமாஅத், பொதுபலசேனா, சிவசேனா, சிங்களராவய, உள்ளிட்ட மதரீதியான கடும்போக்குஅமைப்புகளை இலங்கையில் தடைசெய்வதன் மூலம் இனவாதச் சம்பவங்களைத் தடுக்க முடியும்.



இதற்கான போராட்டத்தைதான் இலங்கையிலே ஆரம்பித்தேன்.

இதுபற்றி ஊடகங்களுக்குத் தெளிவுபடுத்தினேன். அதனடிப்படையில் . ஐக்கிய நாடுகள் சபை வரை இப் போராட்டத்தை எனதுஅமைப்புகொண்டுவந்திருக்கிறது.

அனைத்து பிரச்சினைகளுக்கும் மதரீதியான அமைப்புகளே காரணம்.

இது தொடர்பில் அறிக்கைகள் அடங்கிய குறிப்பேடு ஐ.நா மனித உரிகைள் மன்றத்தில் சமர்ப்பிக்கபட வுள்ளது -என்றார். (ற,ரி2)

## இரு பாடசாலைகளின் பரிசளிப்பு ஒரே நாளில் ஒரே அரங்கில்

தென்மராட்சி, ஜீலை 5

யாழ்ப்பாணம், மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மற்றும் மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயம் ஆகியவற்றின் பரிசில்தினநிகழ்வுஎதிர்வரும் 8 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை ஒரே நாளில் ஒரே அரங்கில் இரு அமர்வுகளாக நடத்தப்படவுள்ளன.

மீசாலைவீரசிங்கம்மத்தியகல்லூரியின்பரிசில்தினநிகழ்வுகள் கல்லூரி அரன் அரங்கில் காலை 8.30 மணிக்கு அதிபர் த.அம்பலவாணர் தலைமையில் நடைபெறும்.

இந்தநிகழ்வில்முதன்மைவிருந்தினராகயாழ்ப்பாணமாவட்டச் செயலர் நா.வேதநாயகனும், சிறப்பு விருந்தினராகத் தென்மராட்சிவலயக்கல்விப்பணிப்பாளர்சு.சுந்தரசிவமும், மதிப்புறுவிருந்தினராகக்கல்லூரியின்பழையமாணவனும் அம்பாறைஹாட்லிதொழில்நுட்பக்கல்லூரிவிரிவுரையாளருமான வை.மதியானந்தனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயத்தின் பரிசில் தின நிகழ்வுகள் பிற்பகல் 1 மணிக்கு இதே அரங்கில் அதிபர் கா.கந்தசாமி தலைமையில் நடைபெறும்.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாணக் கல்விப் பண்பாட்டலுவல்கள்விளையாட்டத்துறைமற்றும்இளைஞர் விவகார அமைச்சின்செயலர்சி.சத்தியசீலனும், சிறப்புவிருந்தினராகத் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ச.சுந்தரசிவமும், மதிப்புறு விருந்தினராக வித்தியால யப் பழைய மாணவனும் முல்லைத்தீவு கரை துறைப்பற்றுப் பிரதேச சபையின்செயலருமான சி.சபேசனும்கலந்துகொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (9-159)

## பரிசளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம் கொழும்புத்துறைதுரையப்பாவித்தியாலயத்தின்பரிசளிப்புநிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் நடேசு தயாளன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநரின் செயலர் எல். இளங்கோவன் கலந்துகொள்ளவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

## 'புள்ளிகள்கரைந்தபொழுது' நாவல் வெளியீட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜீலை 5

யாழ்ப்பாணம், திருநெல்வேலிதூண்டிஇலக்கியவட்டத்தின் ஏற்பாட்டில் எழுத்தாளரும் கவிஞருமான ஆதிலட்சுமி சிவகுமார் எழுதிய 'புள்ளிகள் கரைந்தபொழுது' என்னும் நாவலின் வெளியீட்டு நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 3.15 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில்யேசுராசாதலைமையில்நடைபெறவுள்ளது. நூலின் வெளியீட்டுரையை தி. செல்வமனோகரனும், மதிப்பீட்டுரைகளைகை. சரவணன், ந. குகபரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

ஆர்வமுள்ள அனைவரையும் நிகழ்வில் பங்குபற்றுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

## நல்லூர் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும் அபிவிருத்திக் குழுக்களின் ஆரம்பநிகழ்வும்

யாழ்ப்பாணம், ஜீலை 5

நல்லூர்ப் பிரதேச சபையின் வட்டாரம் 2 இற்கான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும் பிரதேச அபிவிருத்திக் குழுக்களின் ஆரம்பநிகழ்வும் கோண்டாவில்சி.சி.த.க பாடசாலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை பிரதேசசபை உறுப்பினர் லயன்.கு.மதுசுதன் தலைமையில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் வடமாகாணசபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணம், தமிழீழ விடு தலை இயக்கத்தின் சர்வதேச ஒருங்கிணைப்பாளர்நித்தி ஆகியோர்கலந்துகொண்டனர். வட்டாரப் பிரதேச மக்களின் கருத்துக்கள் குறைபாடுகள் தொடர்பில் கலந்துரை யாடப்பட்டதுடன், அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டன.

## நவீனக் கடைத் தொகுதி விரைவில் பாவனைக்கு

யாழ்ப்பாணம், ஜீலை 5

40 மில்லியன் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்ட சங்கானை நவீன வர்த்தகக் கடைதொகுதி விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

வலி.மேற்குப் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுத்தலைவரும்-நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவனின் முன்மொழிவுக் கோரிக்கைக்கு இணங்க சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் மறுவாழ்வு அமைச்சின் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் 40 மில்லியன் ரூபாவைக் கடைத்தொகுதிக்காக வழங்கியிருந்தார். இதன் பிரகாரம் சங்கானை நகர மையத்தில்நகரவர்த்தகமையசெயற்பாட்டுக்கான ஒரு மாடியைக் கொண்ட நவீன வர்த்தக கடைத்தொகுதிக் கட்டடத்தின்90வீதமானபணிமுடிவுற்றுள்ளது. விரைவில் இந்தக் கட்டடத்தின் திறப்பு நிகழ்வு வலி.மேற்குப் பிரதேச சபைத்தவிசாளர்தலைமையில்இடம் பெறும்.

மேற்படி நவீன வர்த்தக கடைத்தொகுதிக்கான அடிக்கல்லை சிறைச்சாலைகள் மறுவாழ்வு சீரமைப்பு அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன், வடமாகாண முதல்வர்சி.வி.விக்னேஸ்வரன்,நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் ஆகியோர் இணைந்து கடந்த வருடம் நட்டுவைத்தனர்.

இதேநேரம் புதிய நகரத்திட்டமிடல் கொள்கையின் பிரகாரம் நவீன மரக்கறிச் சந்தை, கழிவுநீர் நீர்த்தேக்கத் திட்டம், தண்ணீர் தாங்கித் திட்டம், துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையம்உள்ளிட்ட உட்கட்டுமானங்களும் விரைவில் இடம்பெறவுள்ளன. இதற்கானதிட்டமிடல்நடவடிக்கையைப்பிரதேசசபைத் தவிசாளர் சம்பந்தப்பட்ட திணைக்களப் பொறியியலாளர் மற்றும் நிபுணர்களுடன்பேசியுள்ளார். (50)

### வடக்குக்கு...

யாழ்ப்பாணம், ஜீலை 5

எங்களை மறுவாழ்வுக்கு அனுப்பவேண்டுமா என்று முடிவெடுக்க பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க வடக்கு மாகாணத்துக்கு வந்து நிலமையைப் பார்வையிடவேண்டும். இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் ஆகியோரை மறுவாழ்வுக்கு அனுப்பவேண்டும் என்று பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க பத்திரிகையாளர் சந்திப்பில் தெரிவித்திருந்தார். இந்தக் கருத்துக்கு முதலமைச்சர் பதிலளித்து ஊடகங்களுக்கு நேற்று அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ரஞ்சனை எனக்குப் பழக்கமில்லை. ஆனால் அவர் ஒரு உணர்ச்சி மிகுந்தவர் என்று எனக்குத் தெரியும். நாம் கூறுவனவற்றையும் செய்வதையும் பத்திரிகை வாயிலாகக்கண்டு உணர்ச்சிவசப்பட்டு விமர்சிக்கின்றார்.

உண்மையை உணர்ந்த பின்னரே அவரின் வார்த்தைகள் வெளிவரவேண்டும் என்று ஆசைப்படுகின்றேன்.

இரத்தினப்பிரியபந்து (சிவில் பாதுகாப்பு அதிகாரி) இல்லாதவர்களுக்குக் கொடுத்து அவர்களின் அன்பைப் பெற்றுக் கொண்டார். எங்கள் நால்வரிடையில் விஜயகலாவும், சிவாஜிலிங்கமும் நானுமே இல்லாதவர்கள். எமது மக்களுக்குப் பாதுகாப்பில்லை. எமக்கு அதிகாரங்கள் இல்லை. எமது கருத்துக்களுக்குத் தெற்கில் இடமில்லை. எமக்கு மதிப்பில்லை. புறக்கணிக்கப்படு கின்றோம். ஆக்கிரமிக்கப்படுகின்றோம். ஆகவே இரத்தினப் பிரியபந்துபோல் எமக்கு வேண்டுவனவற்றை உடனே வழங்க ரஞ்சன் ராமநாயக்க முன்வரவேண்டும்.

எம்மிடம் இல்லாதவற்றை அவரின் அரசு ஊடாக எங்களுக்கு வழங்கினால் நாமும் அவர் மேல் அன்பும் மரியாதையும் காட்டுவோம். வடமாகாணம் வந்து நிலமையைப் பார்த்துச் செல்ல பிரதிஅமைச்சரை அன்புடன் அழைக்கின்றேன். இங்குவந்து இராணுவத்தினரிடமோ பொலிஸாரிடமோ தனது கட்சிக்காரரிடமோ உண்மையைக் கேட்பதில் பயன் இல்லை. பொதுமக்களிடம் கேட்கட்டும். அவர்கள் யாருக்கு மறுவாழ்வு அளிக்க வேண்டும் என்று சொல்வார்கள் - என்றுள்ளது. (5)

### அபிவிருத்தி...

சபையின் அனுமதி அவசியமாகும் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுப் புதன்கிழமை தலைமை அமைச்சர் மீதான கேள்வி நேரத்தின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

'வடக்கு - கிழக்கு பட்டதாரிகள் விண்ணப்பித்தும் நியமனம் கிடைக்கவில்லை. இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க முடியுமா? வடக்கு - கிழக்கு அபிவிருத்தி அதிகார சபை நிறுவத் தீர்மானிக்கப்பட்டது. எப்போது அதனை நிறுவ நடவடிக்கை எடுக்கப்படும்?' என்று நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் கேள்வி எழுப்பினார்.

பதிலளித்த தலைமை அமைச்சர், பட்டதாரிகள் நியமனங்கள் வழங்குவது தொடர்பாக நாம் நடவடிக்கை எடுத்து வருகின்றோம். இணைப்பு புள்ளி அடிப்படையிலேயே நியமனம் வழங்கப்படும். அதனை மாற்ற முனைந்தால் சிக்கல் ஏற்படும். அரச நியமனங்களுக்கான வயதெல்லை நாம் 45 ஆக அதிகரித்துள்ளோம்.

வடக்கு - கிழக்கு அபிவிருத்தி அதிகார சபை நிறுவுவ்து தொடர்பாக நாம் நடவடிக்கை எடுத்து வருகின்றோம். இது தொடர்பாக மாகாண சபைகளுடன் பேச வேண்டும். தற்போது கிழக்கு மாகாண சபை கலைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக வடக்கு மாகாண முதலமைச்சருடன் பேசுவதற்கு தயாராக உள்ளேன். இது தொடர்பாக சட்டம் நிறைவேற்றுவதற்கு மாகாண சபையின் அனுமதி அவசியமாகும். வடக்கு வீடமைப்பு தொடர்பாக வடக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் மீண்டும் பேச்சு நடத்துவதற்குத் தயாராக உள்ளேன் - என்றார்.

இதேவேளை, வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்கான அரச தலைவர் சிறப்புச் செயலணி அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவினால் நியமிக்கப்பட்டுள்ளது. இந்தச் செயலணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்வாங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (5,61)

### புலிகளின்...

பயத்தில் எதையும் செய்யவில்லை. அதனால் அந்த நிலமை இருந்திருக்கலாம். ஆனால் தற்போது அந்த நிலை இல்லை. மக்களுக்குச் சுதந்திரம் இருக்கின்றது. சுதந்திரம் இருக்கின்றபோது குற்றச்செயல்களும் அதிகரிக்கும். இவ்வாறு அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு நேற்று இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாங்கள் ஹிட்லரை ஊக்குவிப்பதையும் நிராகரிக்கின்றோம். பிரபாகரனை ஊக்குவிப்பதையும் நிராகரிக்கின்றோம். ஆனால் தென்னிலங்கையில் சிலர் பிரபாகரன் குறித்து விஜயகலா பேசியதும் கொந்தளிக்கின்றனர். அதேவேளை ஹிட்லர் குறித்துப் பேசியமை தொடர்பில் கொந்தளிக்காமல் இருக்கின்றமை ஆச்சரியமளிக்கின்றது. தமிழர் என்ற காரணத்துக்காக எதையாவது கூறிவிட்டால் அதற்காக இவ்வாறு செயற்படுவது சரியா?

விஜயகலா வடக்குக்கு எதுவுமே செய்யவில்லை என்று கூறவில்லை. வடக்கில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. அதை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். அதனால் மனநிலை தாக்கம் வரலாம். மனநிலையில் தாக்கம் வருகின்றது என்பதற்காக இவ்வாறு பேச முடியாது. இதனைக்கூறி இந்தக் கூற்றை நியாயப்படுத்த முடியாது - என்றார். (5,61)

### வாள்வெட்டில்...

வில் மேற்குப் பகுதியில் உள்ள வீட்டினுள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை இரவு புகுந்துள்ளனர். வீட்டிலிருந்த சத்தியதாஸ் (வயது-24) என்பவரை வாளால் வெட்டிக் காயப்படுத்தி விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

குப்பிளான் தெற்கில் நேற்றுப் புதன்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் 3 உந்துருளியில் வந்த 8பேர் கொண்ட வாள்வெட்டுக் கும்பல் பாடசாலை மாணவனான சி.சரூஜன் (வ்யது-15) என்பர் மீது வாள்வெட்டுத் தாக்குதல்லை நடத்தி விட்டுத் தப்பிச் சென்றுள்ளது.

தாக்குதலில் காயமடைந்த இருவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (5,26,37)

### கோத்தாவின்...

ஆயுத களஞ்சியத்தை முன்னெடுத்து செல்ல அனுமதியளித்ததன் ஊடாக அரசுக்கு ஆயிரத்து 140 கோடி ரூபா இழப்பை ஏற்படுத்தியதாக முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ச உள்ளிட்ட 8 பேருக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக் குழு தொடர்ந்துள்ள வழக்கை விசாரணை செய்ய கொழும்பு நீதிவான் நீதிமன்றுக்கு மேன் முறையீட்டு நீதிமன்றம் நேற்று இடைக்கால தடை விதித்தது.

வழக்கிலிருந்து தம்மை விடுவிக்கக் கோரி, மேன்முறையீட்டு நீதிமன்றில் கோத்தபாய ராஜபக்ச தாக்கல் செய்துள்ள மீள்பரிசீலனை மனுவின் விசாரணைகள் நிறைவு பெறும் வரையில் இந்த இடைக்கால தடையுத்தரவு நடைமுறையில் இருக்கும் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று அறிவித்தது. (5,71)

### கரடி...

னியா வைத்தியசாலையில் இருவர் சேர்க்கப்பட்டுள்ளதாக, வவுனியா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இரணை இலுப்பைக்குளம் பகுதியில் உள்ள வயலுக்கு நேற்று மாலை 3 மணியளவில் சென்றபோது கரடியின் தாக்குதலுக்கு இலக்காகியதாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள இருவரும் தெரிவித்தனர்.

காக்கையன்குளம், இரணை இலுப்பங்குளம் பகுதியைச் சேர்ந்த சேனாரவி (வயது -40) என்பவரது கண் மற்றும் தலையில் பலத்த காயங்கள் ஏற்பட்ட நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கண்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். மற்றையவர் அநுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (5,110)



## சத்துணவுக் கண்காட்சி

பருத்தித்துறை, ஜூலை 5

யாழ்ப்பாணம் தாய்மார் கழகத்தின் ஏற்பாட்டில் பருத்தித்துறைச் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையின் அனுசரணையுடன் சத்துணவுக் கண்காட்சி பருத்தித்துறை அம்பன் பொதுமண்டபத்தில் அண்மையில் மருத்துவக் கலாநிதி செந்தூரன் தலைமையில் நடைபெற்றது.
கண்காட்சிக் கூடத்தை வடமராட்சிக் கிழக்குப் பிரதேச செயலர் க.கனகேஸ்வரன் மற்றும் பருத்தித்துறைச் சுகாதார மருத்துவஅதிகாரி செந்தூரன் ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர். நிகழ்வில் வீட்டில் தயாரிக்கக் கூடிய சத்துணவு வகைகள், வீட்டுத் தோட்டம், தனிநபர் சுகாதாரம் போன்றவை தொடர்பான மாதிரிகள் காட்சிப்படுத்தப் பட்டிருந்ததுடன் விழிப்புணர்வுக்கருத்துக்கள் பார்வையாளர்களுக்குத் தெளிவு படுத்தப்பட்டது.
இந்த நிகழ்வில் மாணவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், கிராம மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (160)

## குருதி சுத்திகரிப்பு நிலையம் திறப்பு

சாவகச்சேரி, ஜூலை 5

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் நிர்மாணிக்கப்பட்ட குருதி சுத்திகரிப்பு நிலையம் எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிறுக்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது.
மருத்துவமனையில் கடந்த 2016 ஆம் ஆண்டு சிறுநீரக நோயாளர்களுக்கான கிளினிக் ஆரம்பிக்கப்பட்டபோது சிறுநீரகம் பாதிக்கப்பட்ட சிலரின் குருதி வாரத்தில் ஒரு தடவை சுத்திகரிப்புச்செய்யப்பட்டுத்தொடர்சிகிச்சைவழங்கவேண்டுமென்பதால் மருத்துவமனையிலுள்ள கட்டடமொன்றில் குருதிச் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பது தொடர்பாக வட மாகாண சுகாதாரத்திணைக்களத்துக்குஅறிவிக்கப்பட்டது. அதன்பின்னர் நிதி ஒதுக்கப்பட்டுக் குருதிச் சுத்திகரிப்பு நிலையத்துக்கான கட்டடம்அமைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (9)

## நிறுவுநர் தினமும் பரிசளிப்பு நிகழ்வும்

யாழ்ப்பாணம், ஜூலை 5

சுன்னாகம், கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் நிறுவுநர்தினமும்பரிசளிப்புநிகழ்வும் கல்லூரியின் ஒறேற்றர் சுப்பிரமணியம் அரங்கில் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் மு.செல்வஸ்தன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக மருத்துவர் செல்லையாமகாதேவன், சிறப்புவிருந்தினராக வலிகாம வலயத்திட்டமிடல்பிரதிப்பணிப்பாளர் எஸ்.தேவமனோகரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (36)

## கல்விக்கண்காட்சி

யாழ்ப்பாணம், ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்தின் ஆரம்ப, இடைநிலைப் பிரிவுகளுக்கான கல்விக் கண்காட்சி வித்தியாலய மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் ச.சத்தியவரதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.
இந்தநிகழ்வில்முதன்மைவிருந்தினராக வடக்குமாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண ஆரம்பக் கல்விப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எஸ்.சற்குணராஜா, மதிப்புறு விருந்தினராக யாழ்ப்பாண வலயக் கல்வி முகாமைத்துவப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் தர்மிகா மோகன்ராஜ் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர் எனப் பாடசாலைச் சமூகம் தெரிவித்துள்ளது.

## போதைப் பொருள் வைத்திருந்தவருக்குத் தண்டம்

படைமுகாமுக்குள் போதைப் பொருள் வைத்திருந்த சந்தேக நபருக்குச் சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று 7 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட படை முகாமில் வேலைக்குச் சென்ற பொதுமகன் ஒருவர் போதைப்பொருள் வைத்திருந்ததைக்கண்ட புலனாய்வுப் பிரிவினர் இந்த நபரையும் போதைப்பொருளையும் கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைத்திருந்தனர். இது தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்குளடுத்துக்கொள்ளப்பட்டபோது போதே தண்டம் விதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (9)

## பரிசளிப்பு நிகழ்வு

தென்மராட்சி, ஜூலை 5

யாழ்ப்பாணம் கச்சாய் அ.த.க பாடசலையின் பரிசளிப்பு நிகழ்வு பாடசாலை மண்டபத்தில் நேற்று முன்தினம் அதிபர் கா.குணசிங்கம் தலைமையில் நடைபெற்றது.
இந்தநிகழ்வுக்குமுதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்வியற்துறைத்தலைவர் ஜெயலட்சுமி இராசநாயகமும், சிறப்புவிருந்தினராகக் கோப்பாய்ஆசிரியபயிற்சிக் கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசனும்கலந்துகொண்டனர். இதன்போது மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டதுடன் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (9)

# தமிழினத்தின்இருப்பைஅழிக்கும் இறுதிஆயுதமேபோதைப்பொருள்

## உடற் கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கத் தலைவர்

யாழ்ப்பாணம், ஜூலை 5

தமிழினத்தின்இருப்பைஅழிப்பதற்குபயன்படுத்தப்படும்இறுதி ஆயுதமே போதைப் பொருள். இது இன்று மக்கள் மயப்படுத்தப்பட்டு வருகின்றமை கவலைக்குரிய விடயமாகும் என வட மாகாண உடற் கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கத் தலைவர் ப.தர்மகுமாரன் தெரிவித்தார்.

போதைப்பொருள் விழிப்புணர்வு தொடர்பான உடற்கல்வி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் அண்மையில் இடம்பெற்றது.
இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
காலம் காலமாகப் பெண்களைப் பெருமையுடன் பேணிவந்த தமிழினம் இன்று ஆறு வயது முதல் அறுபது வயது வரையிலான பெண்களை குழந்தை.முதுமைப்பெண் என்று பாராது மிலேச்சத்தனமான முறை சிதைத்து செல்வது கொடிய அரக்க குணம் கொண்டவர்கள் உருவாகிவிட்டார்களா? என மக்கள் அச்சம் கொள்ளும்அளவுக்குச்சிறுமியின் படுகொலையும் முதுமைப் பெண்ணின் உடலில் காணப்பட்ட காயங்களும் எடுத்துக் காட்டுகின்றன.
எனவே இந்தப் போதைப் பொருள்பாவனையைமுற்றுமுழுதாகத் தடைசெய்ய வேண்டும்.
இல்லையேல்தமிழர்என்ற இனம் என்ற வரலாறு சிதைக்கப்படும்.
இதனைக்கருத்தில்கொண்டு எமது அரசியல் தலைவர்கள் கொள்கை அளவில் வேறுபட்டாலும் இந்த விடயத்தில் உடன்பட்டு, ஒன்றுபட்டுகருத்தொருமித்துதமிழரின்கலாசாரப்பண்பாட்டு விழுமியங்களைப் பாதுகாப்பதுடன் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பயப்பீதியைப்போக்கநம்பிக்கை ஏற்படும் வகையில் செயற்பட வேண்டிய தார்மீக கடமையாகும்
இன்றைய நிலையில் மக்கள் சொந்த வீட்டில் இருப்பதற்கே பாதுகாப்பற்ற நிலை தோன்றி உள்ளது. இதற்கானமுக்கியகாரணமாகக் கருதப்படுவது போதைப் பொருள் இளைஞர்கள் மத்தியில் விதைக்கப்பட்டமையே. இதனைஎவ்வாறு தடைசெய்வது என்பது எங்கிருந்து வருகின்றது என்பதை அறிந்தாலே முடியும். எனவேவித்தியா, றெஜினா எனத் தொடர்கதையாக்காமல்இதனுடன்முற்றுப்புள்ளி இடவேண்டும் - என்றார். (50)

## மாணவர் சந்தை

சாவகச்சேரி கல்வயல் டேனுஜா முன்பள்ளிமாணவர்களின்சிறுவர் சந்தை இன்று வியாழக்கிழமை காலை10மணிக்கு முன்பள்ளியில் நடைபெறவுள்ளது. இந்தநிகழ்வில் பெற்றோர்கள்உட்பட ஆர்வமுள்ளோரைக்கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டார்கள் அறிவித்துள்ளனர். (131)



## கிறிஸ்தவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 5

கிறிஸ்தவ மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக வட மாகாண கிறிஸ்தவ அபிவிருத்தி ஒன்றியத்தினருக்கும்இராணுவத்தினருக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று யாழ்ப்பாணம் கோப்பாயில்அமைந்துள்ள இராணுவத்தின் 51ஆவது படைப்பிரிவின் தலைமையகத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.
இந்தக் கலந்துரையாடலில்இராணுவதளபதி, வட மாகாண கிறிஸ்தவ அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவர் வண/பிதா கலாநிதி எஸ் சந்திரகுமார், நிர்வாக உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

கொடிகாமம், ஜூலை 5

கொடிகாமம் கொயிலாமனை அருள்மிகு அண்ணமார் ஆலயப் பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் அண்மையில் இடம்பெற்றது.
இதில் தலைவர் க. தர்மகுமார், செயலர் நேத்திரகுமாரன் பொருளாலர் சி.பவளேந்திரன், உபதலைவர் ர. உமாராணி, உபசெயலர் ஆ.நகுலேஸ்வரி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (159)

## நடமாடும் சேவையின் இறுதி நிகழ்வு

கொடிகாமம், ஜூலை 5

பொது மக்களின் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் யாழ்ப்பாணம், சாவகச்சேரிப் பொலிசாரால் ஒரு மாத காலமாக நடமாடும் சேவை நடைபெற்று வருகின்றது.
நடமாடும் சேவையின் இறுதி நிகழ்வு சாவகச்சேரி சங்கத்தானை மதுபன் வாசிகசாலையில் எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. (9-159)



## ஒற்றையாட்சி...

தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நேற்றுப் புதன்கிழமை இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனின் உரை தொடர்பாக சிறப்புக் கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றுகையிலேயே தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

விஜயகலா மகேஸ்வரனின் உரையை நான் கேட்டவுடன் ஆராய்ந்து பார்த்தேன். இது தொடர்பாக எமது கட்சியின் அரசியல் குழு நேற்று (நேற்று முன்தினம்) கூடியது. அவர் மீதான விசாரணை தொடர்பாக தீர்மானம் எடுத்துள்ளோம். விஜயகலா மகேஸ்வரன் சுகவீனமுற்று யாழ்ப்பாணத்தில் இருப்பதாகவும் இன்றைய தினம் (நேற்று) வருவதாகவும் அவர் எனக்கு அறிவித்தார்.

நான் அவரை இன்று (நேற்று) சந்திப்பேன். அதன் பின்னர் விசாரித்து உரிய நடவடிக்கை எடுப்பேன். எமது பாதுகாப்பு படையினர் நாட்டை பாதுகாக்க உயிரைத் தியாகம் செய்தனர். அத்துடன் ஐக்கிய தேசியக் கட்சியிலும் தமிழ்க் கட்சிகளிலும் சுதந்திரக் கட்சியிலும் பல தலைவர்களை விடுதலைப்புலிகள் அமைப்பு படுகொலை செய்தது. இந்த விடயத்தில் நாம் அனைவரும் ஒரு கொள்கையின் கீழ் உள்ளோம்.

நாட்டைப் பிளவுப்படுத்துவது மாத்திரமின்றி நாடாளுமன்றத்தை வலுவில்லாமல் செய்வதே விடுதலைப் புலிகளின் பிரதான நோக்கமாக இருந்தது. நாடாளுமன்றத்தில் நேற்றுக் கூச்சலிட்டு குழப்பி அடித்தனர். இது தொடர்பாக யார் கூச்சலிடுகின்றனர்.

600 பொலிஸாரை கொலை செய்த கருணா அம்மானை அழைத்து சுதந்திரக் கட்சியின் உப தலைவர் ஆக்கி விட்டு, பிரபாகரனுக்கு பணம் வழங்கி அரச தலைவர் தேர்தலை வெற்றி கொண்டு விட்டு விடுதலைப் புலிகளை தோற்கடித்த இராணுவத் தளபதியை சிறையில் அடைத்து விட்டு தற்போது வந்து விஜயகலாவின் உரை தொடர்பாக எப்படி இவர்கள் கூச்சலிட முடியும்.

சபாநாயகருக்கு தமது தீர்மானத்தை அறிவிக்க உரிமை உள்ளது. சபாநாயகரே நீங்கள் காத்திரமாக செயற்பட வேண்டும். அரசியல் பழிவாங்கல் தொடர்பான சரத் பொன்சேகாவின் நிலைப்பாட்டை நாம் அனைவரும் ஒன்று இணைந்து பரிசீலிக்கவேண்டும். ஏன் சரத் பொன்சேகா கைது செய்யப்பட்டார்?.

நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகை செய்தி தொடர்பான கதையை திசைதிருப்பவும் அதனை நிறுத்தவுமே நாடாளுமன்றத்தை நேற்று (நேற்று முன்தினம்) குழப்பி அடித்தனர். தற்போது கூட்டு எதிர்க்கட்சியினர் பயந்து போய் உள்ளனர். 600 பேரை கொன்றவரை சுதந்திரக் கட்சியின் உப தலைவராக்கி விட்டுப் பிரபாகரனை கொன்றவரை சிறையில் அடைத்தனர். அதுதானே உண்மை - என்றார். (5,61)

## விஜயகலாவின்...

சாட்டு முன்வைத்துள்ளனர். அவ்வாறான வேலைத்திட்டத்தின் பின்னணியில் நான் இல்லை. எம்மீது சேறு பூசுவதற்கே இவ்வாறான் பொய்ப் பரப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாறு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் மாகாண சபை உறுப்பினர்கள் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் உறுப்புரிமை பெறும் வைபவம் பத்தரமுல்லையிலுள்ள அந்தக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

விடுதலைப் புலிகள் மீண்டும் உருவாக வேண்டும் என்று நாம் குறிப்பிடவில்லை. அவ்வாறான கருத்தை வேறு எவரும் தெரிவித்திருப்பின் தற்போதைக்கு அவரைக் கைது செய்ய நடவடிக்கை எடுத்திருப்பர். கட்சியின் ஒழுக்கம் வேறாக இருக்கலாம். சட்டத்துக்கு மதிப்பளிக்கும் வகையில்தான் கட்சியின் ஒழுக்கம் அமையவேண்டும்.

எம்மீது மீண்டும் சேறு பூசும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். அதற்காகப் புதிய பத்திரிகைகளையும் ஆரம்பித்துள்ளனர். மேலும் சகல விரோதச் செயற்பாடுகளின் பின்னாலும் மகிந்த உள்ளதாகச் சிலர் தெரிவிக்கின்னறனர். அதற்கிணங்க இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனின் கருத்தின் பின்னாலும் மகிந்த உள்ளதாகச் சிலர் என் மீது குற்றச்சாட்டு முன்வைத்துள்ளனர். எனினும் அவ்வாறான வேலைத்திட்டத்தின் பின்னணியில் நான் இல்லை. எம்மீது சேறுபூசுவதற்கே இவ்வாறான பொய்ப் பரப்புரைகளை மேற்கொள்கின்றனர் - என்றார். (5,61)

## தெற்கின்...

கின்றது. வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் இவ்வாறு தெரிவித்து, விஜயகலாவுக்கு ஆதரவுக் கரம் நீட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள கேள்வி பதில் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடக்கு மாகாணத்தின் தற்காலப் பாதுகாப்பற்ற நிலையையும் முன்னைய பாதுகாப்பான நிலையையும் பற்றி விமர்சிக்க எவருக்கும் உரித்துண்டு. இன்றைய பாதுகாப்பற்ற நிலைமாறி பாதுகாப்பான சூழல் ஏற்படவேண்டும் என்று அவர் கூறியதில் என்ன பிழை என்று எனக்குத் தெரியவில்லை. முன்பு எமது மக்கள் பாதுகாப்பாக வாழ்ந்து வந்தார்கள் என்பது உண்மை. இன்று அப்படியா? வாள்வெட்டு, வன்புணர்ச்சி, வன்செயல்கள், போதைப்பொருள் பாவனைகள் அதிகரித்து வருகின்றன. இலஞ்ச ஊழல்கள் மலிந்துகாணப்படுகின்றன. அதனால்த் தான் நான் இராணுவத்தைத் திரும்ப அழையுங்கள்;. பொலிஸ் அதிகாரங்களை எமக்குத் தாருங்கள். சகல வன்முறைகளையும் நிறுத்திக் காட்டுகின்றோம் என்று கூறியுள்ளேன். நிலமையைப் புரிந்து கொள்ளாமல் தெற்கில் உள்ளவர்கள் தமது உள்ளார்ந்த வெறுப்புக்களைப் பிரதிபலிப்பது வருத்தத்துக்கு உரியது.

எமது பேச்சுக்களை விமர்சிக்காமல் எங்களுடன் ஒற்றுமையாகப் பேசமுன்வாருங்கள். கூட்டாட்சி அரசமைப்பை நிறுவ முன்வாருங்கள் என்று தெற்கத்தைய அரசியல் வாதிகளிடம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். நாங்கள் எங்கள் உரித்துக்கள் பற்றியோ பாதுகாப்புபற்றியோ பேசும் போது எம்மைப் பயங்கரவாதிகள் என்றும் தீவிரவாதிகள் என்றும் அழைப்பதைநிறுத்துமாறு கோருகின்றேன். பிரபாகரன் காலத்தில் எம் மக்கள் பாதுகாப்பாக இருந்தார்கள் என்ற உண்மையைக் கூறுவதால் நாங்கள் எவரும் பயங்கரவாதிகள் ஆகிவிடமாட்டோம். அந்தநாள் இன்று வந்திடாதோ என்று விஜயகலா கூறுவதால் அவர் தீவிரவாதி ஆகிவிடமுடியாது. புலிகள் காலத்தில் எம் மக்கள் (போரில் ஏற்பட்ட பாதிப்புக்களைவிட) பொதுவாகப் பாதுகாப்பாக இருந்தார்கள் என்பது உலகறிந்த உண்மை. விஜயகலா தனது கடமைகளைத் தொடர்ந்துபணியாற்ற அவரின் கட்சி இடமளிக்கவேண்டும். அவர் தேசியக் கட்சியில் இடம்பெறுவதால் தமிழச்சி என்ற தகுதியை இழந்தவராகக் கணிக்கக்கூடாது. விஜயகலாவின் சுதந்திரமும் தனித்துவமும் பாதுகாக்கப் படவேண்டும் என்றுள்ளது. (5)

## விஜயகலாவை....

பொறுப்பு பொலிஸ் சிறப்பு அதிரடிப்படையின் கட்டளைத் தளபதியும், போதைப் பொருள் தடுப்புப் பிரிவு, திட்டமிட்ட குற்றங்கள் மற்றும் குற்றவியல் விவகாரங்கள் தொடர்பிலான மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் எம்.ஆர். லதீபிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் பொலிஸ் தலைமையகத்துக்கு கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளைக் கருத்திற் கொண்டு அவற்றைப் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர இவற்றைக் கையளித்துள்ளார்.

இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனின் உரை தொடர்பில், எவ்வித மாற்றங்களையும் செய்யாத காணொலிகளைப் பெற விசாரணையாளர்கள் தீர்மானித்துள்ளனர். இதனைவிட அவர் உரையை ஆற்றும் போது அங்கிருந்தவர்கள் தொடர்பில் அவதானம் செலுத்தி சாட்சிகளையும் பதிவு செய்யவுள்ளதாகவும் பொலிஸ் தலைமையக வட்டாரங்கள் தெரிவித்தன. (5,71)

## விஜயகலாவின் உரைக்கு...

மூலம் அறிவித்துள்ளார். 'அரச தலைவரின் மக்கள் சேவை' தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் எட்டாவது நிகழ்வு கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபயவர்த்தன, அயலுறவுத்துறை அமைச்சர் திலக் மாரப்பன ஆகியோர் கலந்துகொண்டனர். அவர்கள் முன்னிலையில் உரையாற்றிய சிறுவர் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் 'புலிகள் மீள உருவாகவேண்டும்' என்று உரையாற்றி இருந்தார்.

அவரது அந்தக் கருத்தைக் கேட்டு நிகழ்வில் கலந்து கொண்டிருந்த அரச பணியாளர்கள் பலரும் கரகோசம் எழுப்பி, விசிலடித்து ஆரவாரித்து இருந்தனர்.

அரச பணியாளர்களின் இந்த அநாகரிக நடவடிக்கை தொடர்பில் பிரதேச செயலர்களை விசாரணை நடத்துமாறு மாவட்டச் செயலர் பணித்துள்ளார். கிராம அலுவலர்கள், அபிவிருத்திப் பணியாளர்கள், சமுர்த்திப் பணியாளர்கள் ஆகியோரை விசாரணைக்கு உட்படுத்தி அறிக்கை சமர்பிக்குமாறு அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5,37,105)

## வன்முறைகளைக்...

கமாக யாழ்ப்பாணத்துக்கு வரவழைக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் றொசான் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இந்தச் சிறப்பு நடவடிக்கைகள் வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் றொசான் பெர்னாண்டோவின் உத்தரவுக்கு அமைவாக யாழ்ப்பாணப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் பாலித்த பெர்ணான்டோவின் மேற்பார்வையில், பொலிஸ் சிறப்பு அதிரடிப் படையின் பாதாள உலக ஒழிப்புப் பிரிவை வழி நடத்திய தற்போதைய யாழ்ப்பாண மூத்த பொலிஸ் அத்தியட்சர் வருண ஜயசுந்தரவின் நேரடிக் கட்டுப்பட்டில் இடம்பெறவுள்ளன.

'தனு றொக் என்ற குழுவொன்று தற்போது யாழ்ப்பாணத்தில் இல்லை. அந்தக் குழுவில் இருந்தவர்கள் திருந்தி சாதாரண வாழ்வில் ஈடுபட்டுள்ளனர். அவர்களைச் சீண்டும் வகையில் அவர்களது உறவினர்கள், வீடுகள் மீது தாக்குதல்களை ஆவாக் குழு முன்னெடுத்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது. அந்தக் குழுவினரைக் கட்டுப்படுத்தவே இந்தச் சிறப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது' என்றுமூத்த பிரதிப்பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார். (5,26,71)

## ஆசிரியர்களின்...

என்று தலங்கம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச் செயலர் இது பற்றி தெரிவித்ததாவது:

நாம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தபோது கல்வி அமைச்சின் பதில் செயலருடன் வந்த குழுவினர் எங்கள் மீது தாக்குதல் நடத்தினர். இந்தச் சந்தர்ப்பத்திலேயே தொழிற்சங்க உறுப்பினரான தம்மிக கலாபெரும காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இது கல்வி அமைச்சின் திட்டமிட்ட செயல் - என்றார். (5,31)

## மகிந்த...

மீண்டும் மகிந்த சிந்தனையை நாட்டில் முன்னெடுத்துச் செல்வோம் என்று முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் எமக்குப் பெருவெற்றி கிடைத்தது. அது சரித்திர முக்கியத்துவமிக்க வெற்றியாகவுமுள்ளது. தேசிய மற்றும் பன்னாட்டு ஊடகங்களில் சரித்திர முக்கியத்துவமிக்க வெற்றியாக குறிப்பிடப்பட்டிருந்தது. எம்மைத்துடைத்தெறிவதற்கு முன்னெடுக்கப்பட்ட திட்டங்கள் வெற்றியளிக்கவில்லை. அரசியல்வாதிகள் மக்களுடன் இருக்கும் வரையில் அவர்களை தோற்கடிப்பது இலகுவாக அமையப்போவதில்லை.

கடந்த காலங்களில் எம்மைத் தோற்கடிப்பதற்கு பொய்யான பரப்புரைகளை மேற்கொண்டனர். அதன் மூலம் தமிழ், முஸ்லிம்களை எம்மிடமிருந்து தூரமாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தனர். தற்போதும் எம்மீது பழிவாங்கலை முன்னெடுத்துச் செல்கின்றனர். தற்போது வடக்கின் நிலமை எவ்வாறுள்ளது? வடக்கில் சட்டம் இல்லை. பொலிஸாருக்கு அங்கு செல்ல முடியாது. அந்த நிலமை பற்றி மக்களால் முறையிடவும் முடியாதுள்ளது. தனிப்பட்ட முறையில் எம்மிடம் மக்கள் தெரிவிக்கின்றனர். மக்களால் சுதந்திரமாக வீதியில் செல்ல முடியாது. தென்னிந்திய சினிமாப் படங்களைப் போல் கிராமத்தை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றனர். நிர்வாகம், தலைவர்கள், அரசு, பொலிஸ் என்று எதுவும் அங்கில்லாத நிலை ஏற்பட்டுள்ளது.

இன்றைய நிகழ்வில் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்கச கலந்து கொண்டதையிட்டு சந்தோசமடைகிறேன். ஏனெனில் ராஜபக்ச சகோதரர்கள் சண்டையிட்டுக் கொள்வதாக சிலர் குறிப்பிடுகின்றனர் - என்றார். (5,31)

## வடக்குப்...

வடக்கில் உள்ள 80 சதவீதமான பாடசாலைகள் வழமைபோன்று இயங்கியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அரசியல் பழிவாங்கல் நியமனம் என்னும் போர்வையில் சேவைப் பிரமாணக் குறிப்புக்களை மீறி தகுதியற்றவர்களுக்கு அரசியல் ரீதியாக வழங்கப்படவுள்ள ஆயிரத்து 200 நியமனங்களை எதிர்த்து நாடு முழுவதும் கல்வியியலாளர்களால் பணிப்புறக்கணிப்பு நேற்று முன்னெடுக்கப்பட்டது. பாடசாலைகளில் ஆசிரியர்களில் சுகவீன விடுகை அறிவித்து பணியைப் புறக்கணித்திருந்தனர்.

**யாழ்ப்பாணம்**

கல்வித்துறையினரின் பணிப்புறக்கணிப்புக் காரணமாக யாழ்ப்பாணத்தில் பாடசால்லைக்குச் சென்ற மாணவர்கள் சில இடங்களில் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். பாடசாலைகளில் ஆசிரியர் வரவு மிகக் குறைந்தளவில் காணப்பட்டதால் பாடசாலைக்குச் சென்ற மாணவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர் எனக் கூறப்பட்டது. மாணவர்களைத் திருப்பி அனுப்பும் செயல் தொடர்பில் உடனடியாக வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் கல்வி அமைச்சின் செயலர் ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. இதே வேளை யாழ்ப்பாணத்தில் நகர்புற மற்றும் கிராமப்புறத்திலுள்ள பெரும்பாலான பாடசாலைகள் வழமைபோன்று இயங்கின.

**கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு**

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் அனைத்துப் பாடசாலைகளும் வழமைபோல் நேற்று இயங்கியுள்ளன. 60 சதவீதமான ஆசிரியர்கள் கடமைக்கு நேற்று சமூகமளித்துள்ளனர்.

**மன்னார்**

மன்னார் நகரில் இயங்கும் தேசியப் பாடசாலைகளில் மாத்திரம் மாணவர்கள் வரவு குறைவாகக் காணப்பட்டது. கிராமப் புறப் பாடசாலைகளில் மாணவர் வரவு 75 சதவீதமாகக் காணப்பட்டுள்ளது. மன்னார் மாவட்டத்தில் 90 சதவீதமான ஆசிரியர்கள் கடமைக்கு நேற்றுச் சமூகமளித்துள்ளனர்.

**வவுனியா**

வவுனியாவில் சில பாடசாலைகளில் ஆசிரியர் மற்றும் மாணவர்களின் வரவு குறைவாகக் காணப்பட்டுள்ளது.

**மலையகம்**

மலையகப் பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்கள், அதிபர்கள் பணிநிறுத்தப் பேராட்டத்தில் பங்கேற்கவில்லை.

இதேவேளை கல்வி அமைச்சு முன்பாக நடைபெற்ற போராட்டத்தில் பங்கேற்ற இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்ததாவது:

இலங்கை கல்வி நிர்வாக அதிகாரிகள் சங்கம், இலங்கை ஆசிரியர் சங்கம் என்பன உள்ளிட்ட 11 சங்கங்கள் இந்தப் போராட்டத்தில் இணைந்துள்ளன. எமது பிரச்சினை தொடர்பாகத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழுவுடன் பேச்சு நடத்தினோம். அவை வெற்றியளிக்கவில்லை. அதனால் போராட்டத்தில் குதித்துள்ளோம்.

அரசியல் பழிவாங்கலுக்காக வழங்கப்படும் பொருத்தமற்ற நியமனங்களால் பாதிக்கப்படுவது இன்றைய மாணவர்களும் எதிர்கால சந்ததியினருமாகும்.

எவ்வாறிருப்பினும் இவ்வாறான முறையற்ற செயற்பாடுகளுக்கு இனியும் நாம் இடமளிக்கப்போவதில்லை. விரைவில் இதற்கான தீர்வுகள் வழங்கப்படாவிட்டால் இதனை விடவும் பெரிய போராட்டத்தை முன்னெடுக்கத் தயாராகவுள்ளோம் - என்றார். (5,31,105,110)

# 7.6 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியில் மகிந்தவைச் சீனா விலைக்கு வாங்கியது

## ஜே.வி.பி. செயலர் கூறுகிறார்

**கொழும்பு, ஜூலை 5**
**7.6 மில்லியன் அமெரிக்க டொலர்களைக் கொடுத்து முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்சவை சீனா விலைக்கு வாங்கியது என்று மக்கள் விடுதலை முன்னணியின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.**



தனி நபரின் கைகளில் இருக்கும் தன்னிச்சையான அதிகாரங்கள் காரணமாகவே சீனா அவ்வாறு விலை கொடுத்து வாங்கியது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
கொழும்பில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:
தனி நபரிடம் இருக்கும் இந்த நிறைவேற்று அதிகாரத்தை ஒழிக்க 20ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டும்.
சிலர் தனிப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளும் நோக்கில் 20ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் குறித்துப் பொய்யான பூச்சாண்டிகளை உருவகப்படுத்தி வருகின்றனர்.
இதனைத் தோற்கடிக்க மக்களுக்கு அது தொடர்பில் விளக்கமளிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4)

# சிங்களவர்களை தூண்டிவிட்டு தமிழர்களை இருளில் தள்ளிவிடும்

## விஜயகலாவின் கருத்துக்கு இந்து சம்மேளனம் கண்டனம்

கொழும்பு, ஜீலை 5
சிங்கள மக்களைத் தூண்டி மீண்டும் இருண்ட யுகத்துக்குத் தமிழர்களைத் தள்ளிவிடுகின்ற விவேகமற்ற செயலாகவே இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் கூறிய கருத்து இருக்கிறது.
இவ்வாறு இலங்கை இந்து சம்மேளத்தின் தலைவர் நா.ரா. அருண் காந்த் தெரிவித்தார். விஜயகலாவின் கருத்தால் நாட்டில் எழுந்துள்ள கொதி நிலை தொடர்பில் கருத்துப் பதிவு செய்ய இலங்கை இந்து சம்மேளனம் செய்தியாளர் சந்திப்பை பேராதனை ரஸ்ட் ஹவுஸில் நேற்று நடத்தியது.
அதில் சம்மேளனத் தலைவர் மேலும் தெரிவித்ததாவது:
போரின் பின்னரான வடக்கு கிழக்கின் நிலைமைகள் திருப்திகரமானதாக இல்லையென்பது அனைவரும் அறிந்தவிடயம். போருக்குப் பின்னர் ஆட்சி பீடம் ஏறிய அரசுகள் தமிழ் மக்கள் திருப்திப்படும் அளவுக்கு இல்லாவிட்டாலும்கூட குறைந்தது 50 விகிதம் என்று கூறக் கூடியளவேனும் தமிழ் மக்களுடைய மீள்கட்டுமான விடயங்கள், மக்களுடைய வாழ்வாதார விடயங்கள் இளையோரின் தொழில் வாய்ப்பு, அங்கு இடம்பெற்று வருகின்ற மிகவும் மோசமான குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தல், போதைப் பொருள் ஒழிப்பு போன்றவற்றில் மெத்தனப் போக்கைக் கடைப்பிடிக்கின்ற சூழ்நிலையே நீடிக்கிறது.
விஜயகலாவின் உரையின் பின்னர் நாட்டிலே ஏற்பட்டுள்ள கொதி நிலை மோசமான சூழ்நிலையை நோக்கித் தமிழ் மக்களைத் தள்ளுவதை நாங்கள் மிகவும் தெளிவாக உணர்கின்றோம். நான்கு ஆண்டுகால ஆட்சியின் இறுதியில் இந்த அரசோ, அரச நிர்வாகமோ, பொலிஸ் திணைக்களமோ குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தவில்லை, சிறப்பாகப் பணியாற்றவில்லை என்று விஜயகலா குற்றஞ்சாட்டுவதுடன், இந்தக் குறைகளை நிவர்த்தி செய்வதற்கு மீண்டும் விடுதலைப் புலிகள் வருகை தந்தால் சிறப்பாக இருக்கும் எனக் கூறியிருப்பது அரசியல் இராஜதந்திரமற்ற விவேகமற்ற கருத்தாகவே நாங்கள் பார்க்கின்றோம். - என்றார். (4)

# விலை மாற்றி விற்போர் மீது சட்ட நடவடிக்கை தீவிரமாகும்

## அமைச்சர் ரிஷாட் பதியுதீன் தெரிவிப்பு

சமையல் எரிவாயு விலை குறைக்கப்பட்டுள்ள நிலையில், பழைய விலையில் அல்லது கூடிய விலையில் விற்பனை செய்வோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று கைத்தொழில், வர்த்தக அமைச்சர் ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.
அவரது அமைச்சு வெளியிட்ட ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,
ஜீன் 29 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் 5 கிலோக்கிராம் எரிவாயு சிலிண்டர் 55 ரூபாவாலும் 2.3 கிலோக்கிராம் எரிவாயு 25 ரூபாவாலும் விலை குறைக்கப்பட்டது. புதிய விலைப் பட்டியலை மீறும் சில்லறை வர்த்தகர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு நுகர்வோர் அதிகார சபைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.
அதற்கமைய நுகர்வோர் அதிகார சபை ஜீன் 30 ஆம் திகதியிலிருந்து சில்லறை வர்த்தகர்களைக் கண்காணித்து வருகின்றது. மக்களின் வாழ்க்கைச் செலவீனத்தைக் குறைக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது. இந்த நிலையில் அனைத்து சில்லறை வர்த்தகர்களும் புதிய விலையிலேயே அவற்றை விற்கவேண்டும் என்று பணிக்கப்படுகின்றனர். இவற்றை மீறுவோருக்கு எதிராக நுகர்வோர் விவகார அதிகாரசபை நடவடிக்கை எடுக்கும்.
விலை தொடர்பான மீறல்களை நுகர்வோர் விவகார அதிகார சபைக்குத் தொலைபேசி மூலமாக அறிவிக்க முடியும். இந்தப் புதிய விலையை மீறுவோர் தண்டம் விதிப்புக்கோ அல்லது சிறைத் தண்டனைக்கோ உள்ளாகலாம்.
நுகர்வோர் 0117554813 அல்லது 1977 எனும் நுகர்வோர் விவகார அதிகார சபையின் உடனடித் தொலைபேசிக்கு அறிவிக்க முடியும் - என்றுள்ளது. (4.61)

# சூடுபட்ட யானையைப் பார்க்க சென்ற அமைச்சர் திரும்பி ஓட்டம்

கொழும்பு, ஜீலை 5
துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த யானைக்கு அருகில் சென்று பிரதி அமைச்சரை அந்த யானை துரத்தித் தாக்க ஆரம்பித்துள்ளது. ஆனால் படுகாயமடைந்திருந்ததால் சுமார் 100 மீற்றர் வரையான தூரத்துக்கே யானையால் ஓட முடிந்துள்ளது. அதனால் பிரதி அமைச்சரும் சுமார் 100 மீற்றர் ஓடிச் சென்று உயிர் தப்பினார் என்று தெரிவிக்கப்படுகிறது.
சம்பவம் கொழும்பு நவமிலன பகுதியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. வனபரிபாலன பிரதி அமைச்சர் பாலித தேவபெருமவே ஓடி உயிர் தப்பியவராவார்.
அவர், வழமையான வெள்ளை உடையுடன் வனபரிபாலன அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகளுடன் யானையைப் பார்க்கச் சென்றிருந்தார்.
யானைக்கு ஏற்பட்ட காயங்களை ஆராய முற்பட்ட பொழுது யானை அமைச்சரை விரட்டித்தாக்க ஆரம்பித்துள்ளது. அதனால் வனபரிபாலன அதிகாரிகளும் பொலிஸ் அதிகாரி ஒருவரும் வானத்தை நோக்கித் துப்பாக்கிச் சூடு நடத்தி யானையை தடுத்து அமைச்சரைப் பாதுகாப்பாக வெளியேற்றியுள்ளனர்.
மனிதர்கள் யானைகளைத் தொந்தரவு செய்வதால்தான் அவை மனிதர்களைக் கண்டால் கோபமுற்று அவர்களைத் தாக்க முற்படுகின்றன என்று அமைச்சர் கூறியுள்ளார். மறுநாள் அங்கு சென்ற அவர், யானையின் காயங்களைக் கண்டு மனம் வருந்தியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.
"குப்பைகள் கொட்டப்பட்டு மாசடைந்த சூழலில் வாழும் இது போன்ற மிருகங்கள் குப்பைகூழங்களை உணவாகக் கொள்வதனூடாகப் பெரும் பாதிப்புகளுக்கு ஆளாகின்றன.
வேறு ஒரு யானை நோய்வாய்ப்புற்றிருந்த நிலையில் அதன் வயிற்றில் இருந்த உணவுப்பொருள்களில் 99 வீதமானவை பொலித்தீன் பைகளாகக் காணப்பட்டன. அது மனவருத்தமாக இருக்கிறது. இதைவிட, மற்றொரு யானை காயம்பட்டு வாயால் குருதி சிந்திக்கொண்டிருக்கும் நிலையிலும் தன் குட்டிக்குப் பால் கொடுத்துக் கொண்டிருந்தது.
எப்படியான அவதூறுகள் கண்டனங்கள் உருவானாலும் வனவிலங்குகளைப் பாதுகாக்கத் தன்னால் ஆன சகல முயற்சிகளையும் மேற்கொள்வேன் - என்று அமைச்சர் தெரிவித்துள்ளார். (4)

# பதவியை நீக்கிக் கைது செய்யவும்

## நீதிக்கான பெண்கள் அமைப்பு கொந்தளிப்பு

கொழும்பு, ஜீலை 5
வடக்கில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் நிம்மதியாக வாழ விடுதலைப்புலிகள் மீண்டும் எழுச்சி பெற வேண்டும் என்று கூறிய இராஜாங்க அமைச்சரைப் பதவியிலிருந்து நீக்கி, கைது செய்யப்பட வேண்டும் என்று நீதிக்கான பெண்கள் அமைப்பு தெரிவித்துள்ளது.
நீதிக்கான பெண்கள் அமைப்பு கொழும்பில் நேற்றுச் செய்தியாளர் சந்திப்பை நடத்தியது. அங்கு இந்த அமைப்பின் தலைவி சர்மிளா கோணாவல தெரிவித்ததாவது:
தடைசெய்யப்பட்ட அமைப்பை மீண்டும் உருவாக்க நினைப்பது இந்த நாட்டு மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும். அரச அதிகாரிகளால் இத்தகைய சர்ச்சைக்குரிய அறிக்கைகள் வெளியிடப்படும்போது நாங்கள் அமைதியாக இருக்க முடியாது. போரின்போது நாம் எதிர்நோக்கிய மோசமான விளைவுகளை விஜயகலா மறந்திருக்கக்கூடும். ஆனால் அவ்வாறான சகாப்தத்தை நாம் ஒருபோதும் விரும்பமாட்டோம் - என்றார்.
அமைப்பின் செயலாளர் சாவித்ரி குணசேகர தெரிவித்ததாவது:
விஜயகலாவுக்கு இராஜாங்க அமைச்சர் பதவி தகுதியற்றது.
விடுதலைப் புலிகள் மீண்டும் வரும்பொழுது வடக்கு கிழக்கில் உள்ள பிள்ளைகள் பாதுகாப்பாக இருப்பார்கள் என்பதே அவருடைய கருத்து.
ஆனால்போரின் போது கல்வியை இழந்து சயனைட் குப்பிகளுடன் வடக்கு கிழக்கு சிறுவர்கள் வாழ்ந்ததை அவர் மறந்து விட்டார் - என்றார். (4)

# வடக்கு கிழக்கில் 25 ஆயிரம் வீடுகள்

கொழும்பு, ஜீலை 5
வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மோதலால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகளை வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.
அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு நாடாளுமன்ற கட்டடத்தொகுதியில் நேற்று இடம்பெற்றது. அதில் காணி அபிவிருத்தி மற்றும் நாடாளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரும் அமைச்சரவை துணைப்பேச்சாளருமான கயந்த பருணாதிலக இதனை தெரிவித்தார்.
செங்கல் மற்றும் சிமெந்தினாலான பாரம்பரிய நிரந்தர வீடுகளை வழங்கும் வேலைத்திட்டத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தை இணக்கப்பாட்டுக் குழு மற்றும் திட்டக்குழுவின் சிபாரிசுக்கமைய முதற்கட்டமாக, தலா 1.25 மில்லியன் ரூபா வட்டியில்லாத கடனில் 25 ஆயிரம் வீடுகளை அமைக்கத் தீர்மானிக்கப்பட்டது. அவற்றில் 15 ஆயிரம் வீடுகள் அமைக்கும் பணிகள் இந்த வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டு 8 மாதங்களில் நிறைவடையும். எஞ்சிய 10ஆயிரம் வீடுகளை அமைக்கும் பணிகள் அடுத்த வருடத்தில் நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (4)

# அரசு மீதான விரக்தியே விஜயகலாவின் கூற்று

## கூட்டரசுதான் பொறுப்பு என்கிறார் அஸாத்சாலி

கொழும்பு, ஜூலை 5
கூட்டரசுவாக்குறுதிஅளித்த எந்த விடயமும் வடக்கில் செயற்படுத்தப்படவில்லை. அதன்தாக்கமேவிஜயகலா மகேஸ்வரனின் உரையில் இடம்பெற்றிருந்தது. எனவே கூட்டரசுதான் இதற்குப் பொறுப்புக்கூற வேண்டும்.

இவ்வாறு தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் ஸாத்சாலி தெரிவித்தார்.

தேசிய ஐக்கிய முன்னணி கொழும்பில் நேற்று நடத்தியசெய்தியாளர்சந்திப்பில் கருத்துத்தெரிவிக்கையில் அவர்மேலும்தெரிவித்ததாவது:

அரசுஅதிகாரத்துக்குவந்து 3 வருடங்களாகியுள்ளன. சிறுபான்மை மக்களின் எந்தப் பிரச்சினைக்கும் இன்னும் தீர்வு பெற்றுக் கொடுக்கப்படவில்லை. வடக்கில்தமிழ்மக்களுக்கு உரித்தான காணிகளில் ஒரு தொகுதியையேனும் கடுமையாகப் போராடியே பெற்றுக்கொள்ளமுடிகிறது. இந்த அரசை நம்பி வாக்களித்த சிறுபான்மை மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றுநாங்கள் தொடர்ந்து வலியுறுத்திவந்துள்ளோம். வடக்கில் இருக்கும் சில இராணுவத்தினர் மற்றும் பொலிஸாரின்நடவடிக்கைகள்காரணமாகஅங்குள்ள தமிழ் மக்கள் விரக்தியடைந்துள்ளனர். பெண்கள் தனிமையில்பயணம்செய்யமுடியாதநிலை, சிறுவர்களுக்குப் போதுமான பாதுகாப்பு இல்லாதநிலை என்பன குறித்தும் இராஜாங்க அமைச்சர் விஜகலா மகேஸ்வரன்தெரிவித்துள்ளார்.

புலிகளின்காலத்தில்அவர்களுக்குப் பயந்தேனும் இவ்வாறான வன்முறைச் சம்பவங்கள் அன்று இடம்பெறவில்லை. வடக்கு மக்கள்நிம்மதியாகவாழ்ந்தார்கள் என்று யாழ்ப்பாணத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற நிகழ்வென்றில்தெரிவித்துள்ளார்.

அவர்அவ்வாறுதெரிவித்த விடயங்கள் உண்மையானவை. இந்த அரசு அதிகாரத்துக்கு வந்து 3வருடங்கள் ஆகியும் எதனையும் செய்யவில்லைஎன்று அரசில் இருக்கும்அமைச்சர்களும்பிரதிஅமைச்சர்களும் தெரிவித்து வருகின்றனர். வடக்கில்தமிழ்மக்கள்எதிர்பார்த்த அவிருத்திகள் எதுவும் இடம்பெறவில்லை. இதனால் அரசின் மீது ஏற்பட்டிருக்கும்விரக்தியினால் தான் விஜயகலா விடுதலைப்புலிகளின்கைமீண்டும்ஓங்கவேண்டும்என்ற கருத்தைத் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கி வந்த பிரச்சினைகள்அனைத்தும்இன்னும் அப்படியேதான் இருக்கின்றன. வடக்குகிழக்கில்முஸ்லிம் மக்களுக்குச் சொந்தமான காணிகள் முழுமையாக இன்னும் விடுவிக்கப்படவில்லை. கிழக்கில் சவூதி அரசால் அமைக்கப்பட்ட சுனாமி வீட்டுத்திட்டத்தைவழங்குவதைஇன்னும்இழுத்தடித்துக்கொண்டிருக்கின்றனர்.

அதனால்தான் முஸ்லிம் மக்களின் காணிப்பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள கல்முனையிலும் திருகோணமலையிலும் மட்டக்களப்பிலும் காணிக் கச்சேரிகளை அமைக்குமாறுதற்போது அரசதலைவரிடம் கோரியுள்ளோம். இதுதொடர்பாகஅரசுநடவடிக்கை எடுக்கும் என்று எதிர்பாரக்கின்றோம் - என்றார். (4,31)

# வடக்கில் பிரபாகரனோ தெற்கில் ஹிட்லரோ தோன்றுவதை ஒருபோதுமே ஏற்கமுடியாது

## கூறுகிறார் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ

**கொழும்பு, ஜூலை 5**

**வடக்கில் மீண்டுமொரு பிரபாகரன் உருவாவதையோ தெற்கிலிருந்து ஹிட்லர் தோற்றம் பெறுவதையோ ஐக்கிய தேசியக் கட்சி ஒருபோதும் அனுமதிக்காது என்று அந்தக் கட்சியின் பேச்சாளரும் அமைச்சருமான ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.**



கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனுக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும். விசாரணைக்காக கட்சித் தலைமையகத்துக்கு வருமாறு அவருக்கு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. அவர் தெரிவித்த கருத்துத் தொடர்பில் அவரே பகிரங்கமாகத் தெளிவுபடுத்துவார். வடக்கில் அதிகரித்துள்ள அட்டூழியங்களைக் கட்டுப்படுத்த மீளவும் விடுதலைப் புலிகள் உருவாக வேண்டும் என்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், உரையாற்றுகையில் தெரி வித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (4)

# கடன் பெற்றது பொய் என்றால் நிரூபிக்கத் தயங்குவது எதற்காக?

## மகிந்தவும் வாய்திறக்கவேயில்லையே என்று ஐக்கிய தேசிய கட்சி கடும்பிடி

கொழும்பு, ஜூலை
தன் மீது குற்றம் இல்லையென்றால் முன்னாள் அரசதலைவர் மஹிந்த ராஜபக்ஷ தானாக முன்வந்து உரிய ஆதாரங்களுடன் அதை நிரூபிக்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் ஹரின் பெர்னான்டோ தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

சீன நிறுவனத்திடமிருந்து 7.6 பில்லியன் பணம்பெற்றதாக 'நியூயோர்க் ரைம்ஸ்' பத்திரிகை வெளியிட்டுள்ள தகவல் பொய் என்றால் அதற்கான ஆதராங்களை அவர் தரப்பில் இருந்து வழங்க வேண்டும். இதற்கு அவர் முன்வருவாரா?

பன்னாட்டுப் புகழ்பெற்ற ஊடகம் வெளியிட்டுள்ள செய்தியைப் பொய் என்று புறக்கணிக்க முடியாது. தகுந்த ஆதாரங்கள் இல்லாமல் இந்த நிறுவனம் குறித்த செய்தி தொடர்பில் அக்கறை செலுத்தியிருக்காது.

சீன துறைமுக நிறுவனத்திடம் இருந்து முன்னாள் அரசதலைவர் மஹிந்த ராஜபக்ஷ 7.6 பில்லியன் ரூபாவை 2015ஆம் ஆண்டு அரசதலைவர் தேர்தல் பணிகளுக்கு பெற்றுள்ளார் என்று அந்தப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. இது பல உண்மைகளை வெளிக்கொண்டுவரும் ஆரம்பக் கட்டமாகவே காணப்படுகின்றது. பிறநாட்டு ஊடகம் வெளியிட்டுள்ள செய்தி என்று பொறுப்பற்ற விதத்தில் செயற்பட முடியாது.

இலங்கை தொடர்பில் கடந்த காலங்களில் இந்த நிறுவனம் பல உண்மை விடயங்களை ஆதாரபூர்வமாக வெளியிட்டுள்ளமை பன்னாட்டு மட்டத்தில் வரவேற்கத்தக்கதாகவே காணப்பட்டது. தலைசிறந்த பன்னாட்டு ஊடகம் என்ற விருதை 125 தடவைகள் இந்த நிறுவனம் பெற்றுள்ளது.

ஆகவே பொய்யான செய்தியை வெளியிட்டால் எதிர்கொள்ள வேண்டிய விளைவுகளை இந்த நிறுவனம் நன்கு அறிந்திருக்கும். தகுந்த ஆதாரங்களுடனேயே குறித்த செய்தி பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது.

பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தி பொய் என்றால் முன்னாள் அரசதலைவர் மஹிந்த ராஜபக்ஷ ஆதாரபூர்வமாக நிரூபிக்கமுன்வர வேண்டும். ஆனால் அவரைத் தவிர்த்து அவரது கட்சியின் உறுப்பினர்களே தற்போது கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

தனது கட்சியின் உறுப்பினர் ஒருவர் இந்த விடயம் தொடர்பில் தைரியமாகக் கருத்துக்களை வெளியிடும்போது மஹிந்த இந்தவிடயம் தொடர்பில் பின்வாங்குவது சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த கால அரசு பெற்ற கடன்களே தேசிய அரசுக்குப் பரிசாகக் காணப்பட்டது. ஆட்சிப் பொறுப்பை ஏற்கும்போது பெருங் கடன்களே காணப்பட்டன. ஆனால் அதற்கான உரிய ஆவணங்கள் எதுவும் காணப்படவில்லை. அவைகள் அழிக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்றாகக் கூட இந்த 7.6 பில்லியன் காணப்படலாம்.

நாடு 2015ஆம் ஆண்டு எதிர்நோக்கிய அரச கடன்கள் காரணமாக தேசிய அரசின் கொள்கைகள் மழுங்கடிக்கப்பட்டன. ஆனால் இந்த விடயங்களை மறந்துவிட்டு எதிரணியினர் தேசிய அரசு தேர்தலின்பொழுது மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை மறந்து விட்டது என்ற தவறான அபிப்பிராயங்களைத் தோற்றுவித்து வருகின்றனர்.

மறுபுறம் இந்தவிடயம் தொடர்பில் சீன துறைமுகம் மறுப்புத் தெரிவித்துள்ளது என்று திருப்திப்பட்டுக் கொள்பவர்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டிய விடயங்கள் இவை ஆகவே யார் நாட்டை முழுமையாகப் பிறநாட்டுக்கு விற்க முயற்சிகளை மேற்கொண்டனர் என்ற விடயத்தை மக்களுக்குத் தெரிவிக்கும் சந்தர்ப்பம் தற்போது தோற்றம் பெற்றுள்ளது.

இந்தச் செய்தியைக் கருத்திற்கொண்டு நாடாளுமன்றில் சிறப்புக் கலந்துரையாடலுக்கு உட்படுத்தி உயர்மட்ட விசாரணைக் குழுவை அமைத்து விசாரனைகளை நடத்த வேண்டும் - என்றார். (4,61)

# கப்பம் பெற உதவினார் எனப் பெண் கைது

கொழும்பு, ஜூலை 5
உயிர் அச்சுறுத்தல் விடுத்து வர்த்தகர் ஒருவரிடமிருந்து கப்பம் கோரப்பட்டுள்ள நிலையில் அதனைக் கைமாற்ற உதவிய குற்றச்சாட்டில் பொண்ணொருவர் கப்பப் பணத்துடன் கைது செய்யப்பட்டுள்ளார் என்று அம்பலங்கொட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

பெந்தொட்ட பிரதேசத்தில் வசித்து வரும், அம்பலங்கொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பலபிட்டிய சதொச நிறுவனத்தில் பணியுரியும் பெண்ணே கைதுசெய்யப்பட்டுள்ளார். சட்டவிரோதசெயலுக்காகச் சிறையிலிருக்கும் தனது சகோதரியின் நண்பரொருவரின் வேண்டுகோளுக்கிணங்க கப்பப் பணத்தைக் கைமாற்ற முற்பட்டார் என்று ஆரம்ப விசாரணையில் தெரியவந்துள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (4,71)

# குழியில் வீழ்ந்த சிறுமி மீட்கப்பட்டார்



கொழும்பு, ஜூலை 5
காலி ரொமஸ்வல பிரதேசத்தில் உள்ள சிறுவர் இல்லத்தில் பராமரிக்கப்பட்டுவரும் சிறுமி அங்குள்ள குழியில் வீழ்ந்துள்ளார். அவரைக் கடற்படையினர் காப்பற்றியுள்ளனர்.

சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை 5 மணியளவில் இடம்பெற்றது.

சம்பவத்தில் சிறிய காயங்களுக்கு உள்ளான சிறுமி சிகிச் சைக்காக காலி கராப்பிட்டிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று கடற்படையினர் தெரிவித்துள்ளனர். (4)

# மகிந்தவின் கணக்கில் 18 பில்லியன் டொலர்

## ஆதாரத்தைக் காட்டுங்கள் என்கிறார் பந்துல

கொழும்பு,ஜூலை5
முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் வெளிநாட்டுவங்கிக்கணக்குகளில் 18 பில்லியன் அமெரிக்க டொலர்பணம்வைப்பிலிடப்பட்டுள்ளதாகஅமைச்சர்மங்கள சமரவீர பன்னாட்டு ஊடகங்களுக்குத்தெரிவித்திருந்தார். அவ்வாறெனின்அந்தப் பணத்தை நாட்டுக்குக் கொண்டு வருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

"நியூயோர்க் டைம்ஸ்" பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டுக் குறித்துஅரசதலைவர்மைத்திரிபாலசிறிசேன,தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க,சீன அரசுஆகியோர்முன்வந்துஅதுகுறித்த யதார்த்தத்தைத் தெளிவுபடுத்த வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மகிந்த அணி ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுகொழும்புசிறிவஜிராசர்ம பௌத்த நிலையத் தில் நடைபெற்றது. அதில்கலந்து கொண்டு உரையாற்றும் போதேஅவர்இதனைத்தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது,

மகிந்த ராஜபக்ச மீது மீண்டும்சேறுபூசும்வேலைத்திட்டம்முன்னெடுக்கப்படுகிறது. எனினும் "நியூயோர்க் டைம்ஸ்"பத்திரிகைச்செய்தியில் மகிந்த ராஜபக்சவுக்குத் தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளுக்காக 7.6 பில்லியன் அமெரிக்க டொலர்வழங்கப்பட்டுள்ளதாகக் குறிப்பி டப்பட்டுள்ளது.

இது சிறு தொகையாகும். மகிந்தவினதும் அவரது குடும்பத்தினரதும் சொத்து விபரம் ஆயிரத்து 800 கோடி டொலராகும் என அமைச்சர் மங்கள சமரவீர ஏற்கனவே தெரிவித்துள்ளார். மகிந்தவின் வெளிநாட்டு வங்கிக் கணக்குகளில்18 பில்லியன் அமெரிக்க டொலர் பணம் உள்ளதாகவும் அமைச்சர் மங்கள சமரவீர பன்னாட்டு ஊடகங்களுக்குத்தெரிவித்திருந்தார். 18 பில்லியன் அமெரிக்க டொலர் என்பது இலங்கை ரூபாவின் பிரகாரம் 2 ஆயிரத்து 880 பில்லியன்ரூபாவாகும். இலங்கையில் உள்ள முழுப் பணமே 598பில்லியன்ரூபாவாகும். அவ்வாறெனின்நாட்டிலுள்ள முழுப்பணத்தையும் விட ஐந்து மடங்கு அதிகமான தொகை முன்னாள் அரச தலைவர் மகிந்தவின் வெளிநாட்டுவங்கிக்கணக்குகளில் உள்ளதாகவே கருத வேண்டியுள்ளது. குற்றப்புலனாய்வுப் பிரிவு, சிறப்புப் பொலிஸ் பிரிவு, பொலிஸ் மா அதிபர் உள்ளடங்கலாக அனைவரும் இணைந்து அந்தப் பணத்தை நாட்டுக்குக் கொண்டு வர வேண்டும். அவ்வாறுகொண்டுவந்தால் நாட்டின் பொருளாதாரத்தை எவ்வித சிக்கலு மின்றி முன்னெடுத்துச் செல்ல முடியும். இவ்வாறன குற்றச்சாட்டுகள் உண்மைக்குப் புறம்பானதாகும்.

தற்போது மகிந்த ராஜபக்ச மீதுசுமத்தப்பட்டிருக்கும்குற்றச்சாட்டின் மூலம் சீனாவைப் பழி சுமத்துவ தற்கே அரசு முனைகிறது. என்றார். (ரி2,61)

# மறுசீரமைப்பு, நீதி குறித்த பணிகளின் வேகம் மந்தமாகக்காணப்படுகின்றன

## இலங்கைக்கான அமெரிக்க தூதராக வரும் அலீனா டெப் லிட்ஸின் தெரிவித்துள்ளார்

கொழும்பு, ஜூலை 5
**இலங்கையில் மறுசீரமைப்பு மற்றும் நீதி தொடர்பான பணிகளின் வேகம் மந்தமாகக் காணப்படுகின்றன. மார்ச்மாதம்இடம்பெற்றமுஸ்லிம்களுக்குஎதிரானகலவரங்கள் வலிமிகுந்தவை என்றுநிரூபிக்கப்பட்டுள்ளன. இனமற்றும்மதங்களுக்குஇடையிலான பிளவுகளைச் சீர்படுத்தும் பணிகள் நிறைவு செய்யப்படாமல் காணப்படுகின்றன.**

இவ்வாறுஇலங்கைக்கானஅமெரிக்கத் தூதராகப்பெயர்குறிப்பிடப்பட்டிருக்கும் அலீனா டெப்லிட்ஸின் தெரிவித்துள்ளார்.

இலங்கை மற்றும் மாலைதீவுக்கான தூதராகப்பெயர்குறிப்பிடப்பட்டிருக்கும் அவர், வொஷிங்டனின்அயலுறவுகள் பற்றிய செனட் குழு முன்னிலை யில் அண்மையில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் தெரிவித்ததாவது:

இந்திய -பசுபிக் பிராந்தியத்தின் பரந்தளவிலான பாதுகாப்பு மற்றும் சுபீட்சத்துக்கு இலங்கையும் மாலைதீவும் முக்கியநாடுகள். ஹோர்முஸ்மற்றும் மலாக்கா நீரிணைகளை இணைக்கும்முக்கியகப்பல்பயணப்பாதைகள் வழியே இரு நாடுகளும் அமைந்துள்ளன. அவற்றுக்கு இடையேயான சுதந்திரமானகடல்பயணங்கள்அமெரிக்கப்பொருளாதாரமற்றும்பாதுகாப்பு நலன்களுக்கு முக்கியம்.

ஒவ்வொரு நாடுகளும் கொண்டுள்ள பொருளாதார மற்றும் வர்த்தக வாய்ப்புகளையும் அதேபோல், பன்னாட்டு ஒழுங்கமைவின் அடிப்படையிலான ஒழுங்குவிதிகளையும்பேணுவதற்கு அவற்றுடன் இணைந்துசெயற்படுவதற்கான முக்கியத்துவத்தையும் நாம் நினைவில்வைத்துக்கொள்ளவேண்டியது அவசியம். 2015 ஆம் ஆண்டு வாக்காளர்கள் கடந்தகால ஊழல், கலவரம்மற்றும்அடக்குமுறைபோன்றவற்றை நிராகரித்து மறுசீரமைப்பு, நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல்நிகழ்ச்சிநிரலுக்கு அவர்களது ஆதரவைத் தெரிவித்ததன் பின்னர் இலங்கைநீண்டதொருபயணத்தைக் கடந்து வந்திருக்கிறது.

கடந்த காலங்கள் தொடர்பில் சரியாக செயற்படுவதன் நிமித்தமான மக்களுக்கானஉறுதிப்பாடுகள்தொடர்பில் சாதகமாகச் செயற்படுவதற்கும் நீதி மற்றும்பொறுப்புக்கூறல்நடவடிக்கைகளை நடைமுறைபடுத்துவதற்கும் மற்றும் அமைதியான, சுபீட்சமான எதிர்காலமொன்றை அடைவதற்கும் இலங்கையின் முயற்சிகளுக்கு நாம் தொடர்ந்தும்ஆதரவளிப்போம். இலங்கையின் சொந்த இறையாண்மை மற்றும்தேசியநலன்களைப்பாதுகாக்கும்அதேநேரம், பிராந்தியத்தின்உறுதிப்பாட்டுக்குஅதிகமானபங்களிப்பை வழங்குவதற்கான இலங்கையின் ஆற்றல் வளர்ச்சிக்கும் நாம் ஒத்துழைப்புநல்குவோம். எனதுநியமனம் உறுதிசெய்யப்படும் பட்சத்தில், அமெரிக்காவின் பெறுமானங்கள் மற்றும் கூட்டரசு, வெளிப்படையானபொருளாதார அபிவிருத்தி, சுதந்திரமான கடல் பயணம் மற்றும் வர்த்தகம், நியாயமானமற்றும்பகிரங்கமுதலீட்டுசூழல்கள், பிராந்திய ஒழுங்கின் அடிப்படையிலமைந்தநிலையானஒழுங்கமைப்புகள்ஆகிவற்றின்பகிரப்பட்டதொலைநோக்கை முன்னெடுப்பதற்கு நான் இலங்கையிலும்மாலைதீவிலும் பணியாற்றுவேன் - என்றார். (4,61)

# அமைச்சர் கலா பகிரங்கமாக மன்னிப்புக் கோரவேண்டும்

## ஜே.வி.பி. வலியுறுத்து



கொழும்பு,ஜூலை5
அரசமைப்பை மீறும் வகையில் உரையாற்றிய இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் மூவின மக்களிடமும் பகிரங்கமாக மன்னிப்புக் கோரவேண்டும் என்று ஜே. வி. பி. வலியுறுத்தியுள்ளது.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துவெளியிடுகையிலேயே அக்கட்சியின்நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் தெரிவித்ததாவது,

நாடு பிளவுபடுவதற்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ ஒத்துழைப்பு வழங்கமாட்டோம் எனக் கூறியே நாடாளுமன்ற உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம் செய்கின்றனர்.

எனவே, இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் அரசமைப்பை மீறும் வகையில் கூறிய கருத்தை நியாயப்படுத்த முடியாது.

அதனைநியாயப்படுத்துவதானதுபிழையானமுன்னுதாரணமாக அமைந்துவிடும். இந்தக் கருத்துக்குப் பொறுப்பேற்று நாட்டிலுள்ள அனைத்து இன மக்களிடமும் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் உடனடியாகப் பகிரங்கமாக மன்னிப்புக் கோரவேண்டும். நாட்டின் சட்டம், நாடாளுமன்ற நிலையியல் கட்டளை என்பவற்றுக்கமைய அவருக்கு எதிராக விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்" என்றார். (ரி2)

# நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை செய்தி சட்ட ரீதியாக ஆராயப்பட வேண்டும்

## இந்துநில் துஷார எடுத்துரைப்பு

கொழும்பு,ஜூலை5
முன்னாள் அரச தலைவர் மகிந்தராஜபக்சதொடர்பில்நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தி தொடர்பிலான உண்மைத்தன்மை சட்ட ரீதியாக ஆராயப்பட வேண்டும். அது குறித்துநாடாளுமன்றத்திலும் விவாதிக்கப்பட வேண்டும்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இந்துநில் துஷார அமரசேன தெரிவித்தார்.

அலரிமாளிகையில்கடந்ததிங்கட்கிழமை ஐக்கியதேசியக் கட்சி குழுக் கூட்டம் இடம் பெற்றது. இதில் மேற்குறித்த விடயம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் குறித்து விளக்கமளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;
பிரபல்யமான வெளிநாட்டு ஊடகமொன்றில் இலங்கை செய்தி வெளியாகியமை ஆராய்ந்துபார்க்கப்வேண்டிய ஒரு விடயமாகும். எமது நாட்டிலிருந்துதகவல்கள்வழங்கப்படாமல்அவர்களால்செய்தியை வெளியிட்டிருக்க முடியாது. எனவே இதனை சாதாரண விடயமாகக்கருத முடியாது.

இந்த விடயம் தொடர்பில் மகிந்த தரப்பினர் பல்வேறு கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர். இந்தச்செய்தி உண்மைக்குப் புறம்பானது எனவும் குறிப்பிடுகின்றனர்.

அப்படியென்றால் அவர்கள் அதனைநிரூபிக்கவேண்டும். இல்லையெனில்அந்தஊடகத்துக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். ஆனால்அவர்கள் வெறும் வாய் வார்த்தைகளிலேயே உண்மையை மறைக்க முயல்கின்றனர்.

தலைமை அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம்தொடர்பில்மகிந்ததரப்பினரால் அரசுக்குப் பல்வேறு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டன. எனினும் அதனை அவர்களால் வெற்றிகொள்ள முடியாமல் போனது. தற்போது அவர்களால் மேற்கொள்ளப்பட்ட மோசடிகள் வெளிவரும்போது அதனைப்பொய்யாக்கமுயற்சிக்கின்றனர்.

இதுஎளிதாகவிடக்கூடியசாதாரணவிடயமல்ல. இவ்விடயம் தொடர்பில்நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட வேண்டியது அவசியமாகும். அதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் நாம் முன்னெடுப்போம் என்றார். (ரி2,31)

# கட்சிப்பதவியிலிருந்து கலாவை நீக்குங்கள்

## ஐ.தே.க வின் பின்வரிசை உறுப்பினர்கள் தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை5
தேசிய பாதுகாப்பை குழப்பும் விஜயகலா மகேஸ்வரனின் அமைச்சுப் பதவியைப் பறிப்பதுடன் ஐக்கிய தேசியக்கட்சியின்பதவிகளில்இருந்தும்அவரைநீக்கவேண்டும் என தலைமை அமைச்சருக்கு வலியுறுத்துவதாக ஐக்கிய தேசியக் கட்சியினர் தெரிவித்தனர்.

அரசமைப்பைமீறியும், தேசியஒருமைப்பாட்டைசீரழித்தும்செயற்பட்ட விஜயகலாவுக்குஎதிராகக்கடுமையான சட்டநடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் சபாநாயகருக்கு வலியுறுத்துவதாகத் தெரிவித்தனர்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் இராஜங்க அமைச்சர்விஜயகலாமகேஸ்வரனின்கருத்துக்கள்குறித்துகடும் சர்ச்சைகள் எழுந்த நிலையில் ஐக்கிய தேசியக் கட்சின் பின்வரிசை உறுப்பினர்கள் விஜயகலா மகேஸ்வரின் கருத்தை வன்மையாகக் கண்டித்தனர்.

அமைச்சர் அகில விராஜ் காரியவசம், சபை முதல்வர் லக்ஸ்மன் கிரியெல்ல ஆகியோர் தமது உரைகளில் விஜயகலாவின் கருத்தைத் தாம் கண்டிப்பதாகத் தெரிவித்ததுடன் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவும் தாம் வலியுறுத்துவதாகக் கூறினர். (ரி2,31)

# மரண அறிவித்தல்



மண்ணில்
17 • 08 • 1955

விண்ணில்
03 • 07 • 2018

## திருமதி விமலாவதி (விமலா) சிறிகாந்தா

அன்னார் காலஞ்சென்ற சிவானந்தன் (ஓவசீயர் புத்தளம்) மற்றும் கமலாம்பிகை தம்பதியரின் ஏக புதல்வியுமான திருமதி விமலாவதி (விமலா) சிறிகாந்தா , 03.07.2018 செவ்வாய்க்கிழமை கொழும்பில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி முத்துக்குமாரசாமி தம்பதியரின் (உடையார் – ராசா சுழிபுரம்) மூத்த மருமகளும், சிறிகாந்தா (கனடா), அவர்களின் பாசமிகு மனைவியும், சிவமயூரன் (கோவேண்ட்ரி – UK ) அவர்களின் பாசமிகு தாயும், திருமதி ஜெயசித்ரா சிவமயூரன் (கோவேண்ட்ரி – UK ) அவர்களின் அன்பு மாமியும், வித்யன், ஆதித்யன் (கோவேண்ட்ரி – UK ) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ் சென்ற கந்தையா விஜயரட்ணம் (சத்யா ஸ்டோர்ஸ் – கொழும்பு), திருமதி முத்துமலர் விஜயரட்ணம் ஆகியோரின் அன்பான சம்பந்தியும், திருமதி சந்திரகாந்தா ரகுநாதனின் உயிர்த்தோழியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 08.07.2018 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிமுதல் கல்கிஸ்ஸை மஹிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கபடட்டு அன்று மாலை தகனக் கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தவகல்:**

மகன் - சிவமயூரன் (கோவேண்ட்ரி - UK - 0044 796 127 7728)
மருமகள் - ஜெயசித்ரா (கோவேண்ட்ரி - UK - 0044 794 035 1769)
கணவர் - சிறிகாந்தா (கனடா -srikantha.muthukumarasamy70@gmail.com)
சம்பந்தி - திருமதி முத்துமலர் விஜயரட்ணம் (0094 112 552 732)

(in.7202) (13.17)

# பெண் அரசியல் பிரதிநிதிகளுக்கு எதிரான நிர்வாக முடக்கலே விஜயகலா விவகாரம்

## இப்படிச் சொல்கிறார் மாகாண அமைச்சர்

**யாழ்ப்பாணம், ஜூலை 5**

**அரசியலில் பெண்கள் அதிகமாக ஈடுபட வேண்டும் என்று பரப்புரை செய்துவருகின்ற ஆட்சியாளர்களும், அரசியல் கட்சிகளும் பெண் அரசியல்வாதிகளின் செயற்பாட்டு ரீதியான நடவடிக்கைகளை நசுக்கியே வருகின்றார்கள். இதற்கு சிறந்த உதாரணமாக இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் ஆற்றிய உரை தொடர்பில் ஏனைய மக்கள் பிரதிநிதிகளினதும், அரசியல்கட்சிகளினதும், கடும்போக்கு அமைப்புக்களினதும் செயற்பாடுகள் அமைந்துள்ளன என்று நேற்று அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் வடமாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.**

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

இனப்படுகொலையை அரங்கேற்றி போர் வெற்றிப்பெருமிதத்துடன் தமிழ்மக்களை இரும்புக்கரம் கொண்டு நசுக்கிய ராஜபக்சவினருக்கு எதிராக தமிழ் மக்கள் தமது ஆணையைப் பயன்படுத்தினார்கள். அந்த ஆணையைப்பெற்ற அரசும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்காக பல்வேறு வாக்குறுதிகளை அள்ளிவழங்கியது. தற்போது மூன்றாண்டுகள் கடந்துள்ள நிலையில் நல்லாட்சியை உருவாக்கப் போவதாக கூறி ஆட்சிப்பீடத்தில் அமர்ந்த இரு முதன்மைக் கட்சித்தலைவர்களாலும் எதனையும் செய்ய முடியாதுள்ளது. வாக்குறுதிகள் அனைத்தையும் காற்றில் பறக்கவிட்டு, தமது கட்சிகளை எவ்வாறு வளர்த்துக்கொள்ள முடியும், அடுத்த தேர்தலை எவ்வாறு எதிர்கொண்டு அதிகாரத்தைக் கைப்பற்ற முடியும் என்ற நிலைப்பாட்டிலேயே செயற்பாடுகளை முன்னெடுத்துவருகின்றார்கள்.

வடக்கில் போர்ப்பாதிப்பு ஒருபுறமிருக்கையில் அன்றாட வாழ்வியல் மணித்தியாலங்களை கொண்டு நகர்த்துவதற்கே முடியாத அளவுக்கு அச்சமான சூழலொன்று நிலவி வருகின்றது. அரசியல் தீர்வு, அபிவிருத்தி என்பன கானல் நீராகி விட்ட நிலையில் கலாசாரம், பண்பாடு என்பன தடம் தெரியாது போவதற்குரிய நடவடிக்கைகள் திட்டமிட்டு சிதைக்கப்பட்டுக்கொண்டிருக்கையில் எமது எதிர்காலமே கேள்விக்குட்பட்டுள்ளது.

கணவனை இழந்த பெண்கள், பெற்றோரை இழந்த சிறுவர்கள், பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்படும் சிறார்கள், கொலை செய்யப்படும் சிறார்கள் இப்படிபட்டியல் நீண்டுகொண்டுசெல்கின்றது. இவற்றின் வலிகளை விஜயகலா மகேஸ்வரன் நேரில் பார்த்துள்ளார். அதனை அவர் பெண் என்ற அடிப்படையில் உணர்ந்துள்ளார். அவர்களின் எதிர்காலத்துக்கு ஏதாவது செய்து விட வேண்டும் என்ற நோக்கத்துடன் அமைச்சுப் பதவியைப் பொறுப்பேற்றபோதும் அதன் ஊடாக எவ்விதமான செயற்பாடுகளையும் முன்னெடுப்பதற்கு அவருக்கு இயலவில்லை.

நன்மைபயக்கும் எந்தநடவடிக்கைகளை எடுத்தாலும் பெண் அமைச்சராக இருப்பதால் அதனை முன்னெடுத்துச் செல்வதற்கு ஆயிரமாயிரம் தடைகள் உருவாக்கப்படுகின்றன. இவ்வாறான பல்வேறு நெருக்கடியானநிலைமைகளின் காரணமாக ஏற்பட்ட ஆதங்கத்தின் வெளிப்பாடாகவே விடுதலைப்புலிகளை அவர் நினைவுபடுத்தியுள்ளார்.

ஒரு மனிதன் தனது சிந்தனையில். அனுபவத்தில் எழுகின்ற கருத்துக்களை முன்வைப்பதற்கு இடமுள்ளது. அது அடிப்படை உரிமை என்பதுடன் ஜனநாயகப் பண்புகளில் மிகவும் முக்கியமானதுமாகும்.

விடுதலைப்புலிகளின் கட்டுக்கோப்பான ஒழுக்கங்கள், செயற்பாடுகளைப் பற்றி பேசுவதில் என்ன தவறுள்ளது. விடுதலைப்புலிகள் செயற்பட்ட சமகாலத்தில் வாழ்ந்த அனைவருமே அந்த விடயங்களை நன்கு அறிவார்கள். செயல்வடிவம் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தால்தான் அது அரசமைப்பை மீறுவதாக அமையும். உதாரணமாக இந்தியாவில் விடுதலைப்புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்ட அமைப்பாக இருந்தாலும் அங்கு அந்த அமைப்பைப்பற்றி, தலைமையைப் பற்றி, செயற்பாடுகள் பற்றி அனைவரும் பேசுகின்றார்கள். இலங்கையில் பயங்கரவாத தடைச்சட்டம் உள்ளது போன்று அங்கும் குண்டர்சட்டம் உள்ளது. விடுதலைப்புலிகள் பற்றி பேசுபவர்கள் மீது குண்டர் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கவில்லையே. ஏனென்றால் விடுதலைப்புலிகள் பற்றி பேசுபவர்கள் அதற்கு செயல்வடிவம் கொடுக்கவில்லை. அதுபோன்றுதான் விஜயகலா மகேஸ்வரனும் எண்ணப்பாட்டு ரீதியாக கருத்துக்களை முன்வைத்துள்ளாரே தவிர செயற்பாட்ட ரீதியாக எதனையும் செய்யவில்லை. எனவே அவர் மீது நடவடிக்கை எடுப்பது என்பது ஜனநாயகத்தினை மீறும் செயற்பாடாகும் என்பதோடு ஒரு பெண் அரசியல்வாதியை திட்டமிட்டு நசுக்குகின்ற முயற்சியாகவே பார்க்கவேண்டியுள்ளது - என்றுள்ளது. (எ-8)

# அமைச்சர்களின் நியமனப் பிரச்சினையை சர்ச்சைக்குரிய விடயமாக்கியது முதல்வரே

யாழ்ப்பாணம், ஜூலை 5

வடக்கு மாகாண சபையின் அமைச்சர்களின் நியமனங்களில் ஏற்பட்ட பிரச்சினையை மிக இலகுவாக தீர்த்துஇருக்கலாம். ஆனால் அதனை சர்ச்சைக்குரிய விடயமாக்கியது வடக்கு மாகாண முதல்வர் சி.சி. விக்னேஸ்வரன். அவர் மிகப் பெரும் தவறு செய்து விட்டார் என்று வடக்கு மாகாண அவைத்தலைவர் சி.வி.கே. சிவஞானம் தெரிவித்தார்.

வடக்கு மாகாண அவைத்தலைவரின் இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண சபையில் அங்கம் வகிக்கும் அமைச்சர்களில் இருவரை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று முதல்வர் அமைத்த விசாரணைக் குழு பரிந்துரைத்தது. அதன்படி இருவரையும் பதவிநீக்கிவிட்டு மாகாண சபையின் அமைச்சரவையை முழுமையாக மாற்றி அமைத்து இருந்தால் இது ஒரு பூதாகரமாக விடயமாக மாறி இருக்காது.

வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர், விக்னேஸ்வரனை பதவி விலகுமாறு கோரியது போல நானும் கூற மாட்டேன். வடக்கு மாகாண முதல்வர் ஒரு நீதியரசர் ஆனால் அவரை சுற்றி பல சுத்துமாத்துக்காரர்கள் உள்ளனர். நான் ஏதாவது ஆலோசனை சொன்னால் அதற்கு எதிராகத்தான் அவர் செய்வார். ஆகையால் நான் அவருடைய விடயத்தில் தலையிடுவதில்லை - என்றார். (எ-8)

# தமிழீழ விடுதலைப் புலிகளின் வரலாறுகளை அறியாதவர்கள்கூட அதைப்பற்றிக் கதைக்கிறார்கள்

## வடக்கு அவைத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் ஜூலை 5

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரன், தியாகதீபம் திலீபன் போன்றவர்களின் வரலாறுகளை முழுமையாக அறியாதவர்கள் எல்லாம் பொது இடங்களில் தமிழீழத்தைப் பற்றிக் கதைக்கின்ற நிலை இன்று உருவாகிவிட்டது.

இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண அவைத்தலைவர் சி.வி.கே. சிவஞானம்.

வடக்கு மாகாண அவைத்தலைவரின் இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

கொழும்பு அரசின் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், 'வடக்கு கிழக்கில் மீண்டும் தமிழீழ விடுதலைப் புலிகளின் கை ஓங்க வேண்டும்' என்று அண்மையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கூறியிருந்தார்.

இதனை அவர் உணர்ச்சிவசப்பட்டே கூறியுள்ளார். அவர்தான் உருவாக்குவேன் என அர்த்தத்தில் கூறவில்லை.

இலங்கை அரசில் இருந்து கொண்டு இவ்வாறான கருத்தை கூறுவதை ஏற்கமாட்டார்கள். பொறுப்பான பதவிகளில் உள்ளவர்கள் பொது இடங்களில் பொறுப்பான விதத்தில் பேசவேண்டும். புலிகளின் வரலாறுகளை முழுமையாக தெரியாதவர்கள் எல்லாம் இப்போது அவர்களை பற்றிக் கதைப்பது வழக்கமாகிவிட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில் குற்றச் செயல்கள் குறைந்து காணப்பட்டன. அதற்கு அவர்களின் புலனாய்வுக் கட்டமைப்பே காரணமாகும்- என்றார். (எ-8)

# வடக்கு பொலிஸாருக்கு விடுமுறைகள் இல்லை

யாழ்ப்பாணம், ஜூலை 5

வடக்கு மாகாணத்தில் அண்மைக் காலமாக தலைதூக்கியுள்ள சமூக விரோதச்செயல்களை கட்டுப்படுத்தும் நோக்கில் வடக்கு மாகாணத்தில் கடமையாற்றும் அனைத்துப் பொலிஸ் உத்தியோகத்தர்களினதும் விடுமுறைகள் இல்லாமல் செய்யப்பட்டுள்ளன.

வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளிலும் கடந்த சில நாள்களாக கொள்ளை, வாள்வெட்டு என பல சமூக விரோத சம்பவங்கள் அரங்கேறி வருகின்றன. இதனைக் கட்டுப்படுத்த பொறுப்பாக உள்ள பொலிஸார் ஆக்கபூர்வமாகன நடவடிக்கை எடுக்கவில்லை என பல தரப்புக்களும் குற்றம் சுமத்தி வந்தநிலையில் இவ்வாறான அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இதனால் வடக்கில் பணியாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் அனைவரதும் விடுமுறைகள் எதிர்வரும் 18ஆம் திகதி வரை இல்லாமல் செய்யப்பட்டுள்ளன. (எ-8)

# முதல்வர் வேட்பாளர் யாரென்று இதுவரை முடிவெடுக்கவில்லை

## வடக்கு அவைத்தலைவர் தெரிவிப்பு

வடக்கு மாகாண சபையின் அடுத்த முதல்வர் வேட்பாளராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக யாரை நிறுத்துவது என்று தமிழ் அரசுக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்டக் கிளை இன்னும் முடிவெடுக்கவில்லை என்று வடக்கு மாகாண அவைத்தலைவர் சி.வி.கே. சிவஞானம் தெரிவித்தார்.

வடக்கு மாகாண அவைத்தலைவரின் இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு சார்பாக அடுத்த வடக்கு மாகாண சபையில் முதல்வர் வேட்பாளராக தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்த ஒருவரே நிறுத்தப்படுவார்.

அதிலும் கட்சியின் நீண்டகால அனுபவம் வாய்ந்த உறுப்பினர் ஒருவரே நிறுத்தப்பட வேண்டும் என மாவட்ட கிளைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

எனினும் எனது தனிப்பட்ட தெரிவு, கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவை நிறுத்த வேண்டும் என்பதேயாகும். யாழ்ப்பாண மாவட்ட கிளைக் கூட்டத்தின் தீர்மானம் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், கட்சியின் செயலாளர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது-என்றார். (எ-8)

# சாவுச் சடங்குகளில் இனிமேல் பட்டாசுவேண்டாம்

## இப்படியொரு பிரேரணை

வடக்குமாகாணத்தில் சாவுச்சடங்குகளில் பட்டாசுகள் கொளுத்துவதை தடுக்கக் கோரி பிரேரணை ஒன்று முன்மொழியப்படவுள்ளது என்று அறியவருகிறது. வடக்கு மாகாண சபையின் 126ஆவது அமர்வு எதிர்வரும் பத்தாம் திகதி இடம்பெறவுள்ளது. இந்த அமர்வில் வடக்கு மாகாணசபை உறுப்பினர் குகதாஸ் குறித்த பிரேரணையை சபையில் முன்மொழியவுள்ளார் என்று தெரிய வருகிறது.

அவர் தனது பிரேரணையில், வடக்குமாகாணத்தில் இடம்பெறும் சாவுச் சடங்குகளில் பட்டாசுகள் கொழுத்தும் கலாசாரம் காணப்படுகின்றது. இது நிறுத்தப்படவேண்டும். இதனைக் கட்டுப்படுத்த மாகாண உள்ளூராட்சி அமைச்சு திணைக்களத்தின் ஊடாக அனைத்துச் சபைகளுக்கும் அறிவுறுத்தலை வழங்க வேண்டும். அதன் ஊடாகப் பட்டாசு கொளுத்துவது தடை செய்யப்பட வேண்டும் என்று கோரவுள்ளாராம். (8)

குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த இரவு நேரங்களில்

# விழிப்புக் குழுக்கள் அமைக்க வேண்டும்

## வலி. மேற்குத் தவிசாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 5

வடக்கில் இடம்பெற்று வரும்கொலை, கொள்ளை, வன்புணர்வு என்ற நீண்ட பாதகச்செயல்கள் உடனடியாக முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும். எமது சமூகம் நிம்மதியுடன் வாழும் சூழல் மீள கட்டியமைக்கப்பட வேண்டும். குறிப்பாக எமது இளைய சமுதாயம் ஒன்றுபட்டு கிராம மட்ட, பிரதேச மட்ட விழிப்பு மையக்குழுக்களை அமைத்துச் செயற்பட வேண்டும்.

வலி. மேற்கில் அண்மையில் இடம்பெற்ற சிறுமி கொலை மற்றும் நகைக் கொள்ளை ஆகியவற்றைக் கண்டித்துவலிகாமம்மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் தர்மலிங்கம் நடனேந்திரன்வெளியிட்டுள்ளகண்டன அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் உள்ளதாவது:

வலி. மேற்கில் அண்மையில் இடம்பெற்றுவரும் , மக்களைசாதாரணநிலையில்' இருந்து கொதி நிலைக்கு இட்டுச்சென்றுள்ளன. வலி.மேற்கை மட்டுமன்றி அகில இலங்கையில் உள்ள மக்களையும் பன்னாட்டிலுள்ளவர்களையும் அதிர்வலைக்குள் கொண்டுசென்றுள்ளது.

வடக்கில் போர் ஓய்வுக்கு வந்து 10 வருடங்கள் ஆகின்றன. எனினும் எமது பிரதேசத்தில் மக்கள் எவரும்நிம்மதியுடன்வாழ முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.

எமது பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட சிவனேஸ்வரன் றெஜினா என்ற6வயதுப்பாலகியை கழுத்து நெரித்து கொலை செய்து கிணற்றில் போட்டமை, ஒரு வாரத்துக்குள்ளேயே மீளவும் வேறொரு பாணியில் அராலி தெற்கில் 59 வயதானபெண்மணியைவன் புணர்ந்து நகைகள் கொள்ளையிடப்பட்டமைஎன்பன மிலேச்சத்த னமானவை. இவைகண்டிக்கத்தக்கன. இவற்றை விடவும் கடந்த காலங்களில் இந்தப்பிரதேசத்தில் பல்வேறு கொலைகள், வன்புணர்வுகள்இடம் பெற்றுள்ளன.

ஒவ்வொரு மனிதர்களும் மற்றைய மனிதர்களது வாழ்வில் விழிப்பாகவும் உண்மையாகவும் விசுவாசமாகவும் செயற்பட வேண்டும்.

குறிப்பாக இரவு வேளைகளில் நடமாடுபவர்களது விடயத்தில் கூடுதல் அக்கறையுடன் செயற்படுமிடத்து இவ்வாறான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முயற்சிக்கலாம்.

அரச தலைவர் மைத்திரி பாலசிறிசேனவும்தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் கூடுதல் அக்கறைகொண்டுசெயற்பட்டு மக்களுக்குத் தூணாக அரணாக செயற்பட வேண்டும்-என்றுள்ளது. (எ-50)

இரட்டைக் குடியுரிமை உடைய

# மாநகர சபை உறுப்பினரை பதவி நீக்க வழக்குத் தாக்கல்

யாழ்ப்பாணம், ஜூலை 5

யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஈ.பி.டி.பி உறுப்பினர் ஒருவர், இரட்டைக்குடியுரிமைஉடையவர்என்பதன்அடிப்படையில் மாநகர சபை உறுப்பினராக இருக்க முடியாது என தேர்தல் ஆணையகத்துக்கு ஆணையிடுமாறுகோரி கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாநகர சபையில் அங்கம் வகிக்கும் ஈ.பி.டி.பியின் உறுப்பினரான குகேந்திரன் இரட்டைக் குடியுரிமை உள்ளபோதும் விகிதாசாரப் பட்டியலின் ஊடாக உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இந்த வகையில் இரட்டைக் குடியுரிமை உடையவர்கள் உள்ளூராட்சி மன்றங்களில் அங்கம் வகிக்க முடியாது என்றதன் அடிப்படையில் குறித்த உறுப்பினரின் பதவியை இல்லாது செய்யுமாறு தேர்தல் ஆணையகத்துக்கு உத்தரவிடுமாறு கோரியே குறித்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மாநகர சபையின் சக உறுப்பினர் ஒருவரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள குறித்தவழக்குநேற்றுமுன்தினம்சட்டத்தரணி ஊடாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (எ-105)

# இந்திய அரசை நம்பி பேச்சில் ஈடுபடாதீர்கள்

## வடமாகாண கடற்றொழிலாளர் சங்க இணையத்தின் பிரதிநிதிகள் கோரிக்கை

**யாழ்ப்பாணம், ஜூலை 5**

**இந்திய அரசை நம்பி பேச்சில் ஈடுபட வேண்டாம் என்று வடக்கு மாகாண கடற்றொழிலாளர் சங்க இணையத்தின் பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் மீன்பிடி அமைச்சரைச் சந்தித்துக் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

மன்னார் மாவட்டப் பிரதிநிதி ஆலம், யாழ்ப்பாண மாவட்டப் பிரதிநிதி சுப்பிரமணியம் உள்ளிட்ட நால்வரே இவ்வாறுகடற்றொழில்நீரியல்வளத்துறை அமைச்சரை நேரில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். குறித்த சந்திப்பின்போது இந்தியமீனவர்களின் ஊடுருவல் மற்றும் இந்தியஇழுவைப்படகுகளின் விடுவிப் புத் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

குறித்த சந்திப்புத் தொடர்பில் பிரதிநிதி சுப்பிரமணியம் தெரிவித்ததாவது:

எமது மாகாண மீனவர்களின் தீராத பெரும் பிரச்சினை, இந்திய மீனவர் ஊடுருவலே. இது தொடர்பில் இந்தியா தரப்பில்பலதடவைபலவாக்குறுதிகள் அளிக்கப்பட்டன. இருப்பினும் ஒன்றைக்கூட இந்திய அரசு நிறைவேற்றவில்லை. எனவே இந்தியாவை நம்பி இனிமேலும் பேசக்கூடாது. அத்துடன் இங்கே தடுத்து வைத்திருக்கும் இந்தியப் படகுகளில் ஒரு படகைக்கூட விடுவிக்கவே கூடாது என்று தெரிவித்தோம்.

இதன்போதுகருத்துதெரிவித்தஅமைச்சர், அடுத்த கட்டமாகஇந்திய மீனவர்களின் 10 இழுவைப் படகுகளை விடுவிக்கவுள்ளோம்.

அவர்களின் படகுகளை தடுத்து வைப்பதாலும் எந்தப் பயனும் கிடைக்காது. மேலும் அவர்களுடன் பகைக்க முடியாது என்று தெரிவித்தார். இதனால் எமது மீனவர்களுடன் குறித்தவிடயம் தொடர்பில் உரையாடிய பின்பு உரிய பதிலளிப்பதாகஅமைச்சரிடம்தெரிவித்துள்ளோம்-என்றார். (எ-105)

## கணவன் பிள்ளையுடன் பெண் பறவைக்காவடி

தென்மராட்சி, ஜூலை 5

பளைதம்பகாமம்நெறியாய்அம்மன்கோவில்திருக்குளிர்ச்சிப்பொங்கல்விழாவில் பெண்ணொருவர் தனது கணவன் மற் றும்பிள்ளையுடன்பறவைக் காவடி எடுத்துள்ளமையைப் படத்தில் காணலாம்.

கிளிநொச்சிமாவட்டத்துக்கு உட்பட்ட அம்மன் ஆலயத்தின்திருக்குளிர்ச்சிப்பொங்கல் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை சிறப்பற இடம்பெற்றது. இதன்போது குறித்த பெண் நேர்த்திக் கடனாக இவ்வாறு பறவைக்காவடி எடுத்துள்ளார். (எ-9)







## பாடசாலைக் கட்டடங்கள் திறப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 5

யாழ்ப்பாண மாவட்டத்தில் மண்டைதீவு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, மெலிஞ்சிமுனை றோமன் கத்தோலிக்க தமிழ் க் கலவன் பாடசாலை ஆகியவற்றில் இந்திய அரசின் உதவியுடன் அமைக்கப்பட்ட வகுப்பறைத் தொகுதிகள் கடந்த திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டன.

யாழ்ப்பாணத்துக்கான இந்திய கென்சியூலர் எஸ். பாலச்சந்திரன், வடக்கு மாகாண கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன் ஆகியோர் இணைந்துகட்டடங்களைத்திறந்துவைத்தனர்.

ஒவ்வொன்றும் இலங்கை மதிப்பில் அண்ணளவாக 8 மில்லியன் ரூபா நிதியில் அமைக்கப்பட்ட கட்டடங்களாகும்.

நிகழ்வில்கல்வித்துறைஅதிகாரிகள், பாடசாலைஅதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் நலன் விரும்பிகள்எனப்பலர்கலந்துகொண்டனர். (எ)

வடமராட்சி கிழக்கில்


## சட்டமுரணாகக் கடலட்டை பிடிப்போரை அகற்றக்கோரி வழக்குத் தாக்கல்

யாழ்ப்பாணம், ஜூலை 5

வடமராட்சிகிழக்குப்பகுதியில்சட்டவிரோதமாகஅரசநிலத்தில் வாடி அமைத்து கடல் அட்டை தொழில் புரிபவர்களை அங்கிருந்து அகற்ற உத்தரவிடக்கோரி மருதங்கேணிப் பிரதேசசெயலாளர்கிளிநொச்சிநீதிமன்றில்வழக்குத்தாக்கல் செய்துள்ளார்.

வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் தங்கியிருந்து கடல் அட்டைத் தொழில் புரியும் பிறமாவட்ட மீனவர்கள் அரசநிலத்தில் அத்துமீறிக் குடியமர்ந்தே குறித்த தொழிலை மேற்கொள்கின்றனர். இவ்வாறு தொழில் புரியும் 8 நிறுவனங்கள்மீதுகடந்ததிங்கட்கிழமைவழக்குகள்தாக்கல்செய்யப்பட்டன. இதன் அடிப்படையில் குறித்த நிறுவனங்களுக்கு எதிராக எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மேற்படி வழக்குகள் எடுத்துக்கொள்ளப்படவுள்ளன. இதேநேரம் யாழ்ப்பாண மாவட்ட எல்லைப் பகுதியில் வாடி அமைத்துள்ள 4 நிறுவனங்கள் தொடர்பில் இன்று பருத்தித்துறை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

குறித்த பகுதியில் உள்ளூர் மீனவர்களைப் பாதிக்கும் வகையில் வெளி மாவட்ட மீனவர்கள் பலர் தங்கி நின்று சட்டத்துக்கு முரணாக தொழில் புரிவதனால் பல பாதிப்புக்கள் நிகழ்வதாக உள்ளூர் மீனவர்கள் நீண்டகாலமாக சுட்டிக்காட்டிவந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-105)



## கஞ்சாவுடன் ஒருவர் கைது

சிலாபம்,ஜூலை 5
வர்த்தக நிலையம் ஒன்றிலிருந்து கஞ்சாப் பைகள் மீட்கப்பட்டதுடன், சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டார்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை, சிலாபம், மாரவில நகரில் இடம்பெற்றுள்ளது. பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, இப்பகுதியில் சுற்றிவளைப்பு நடவடிக்கை நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போதே கஞ்சாப் பைகள் மீட்கப்பட்டதுடன் சந்தேகநபரும் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பிரதேச இளைஞர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து இந்த வியாபாரம் முன்னெடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ரி2)


## டிப்பர்மோதியதில் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு,ஜூலை5
நிட்டம்புவகோனகஸ்தெனியபகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்றவிபத்தில்ஒருவர்உயிரிழந்துள்ளார்.

நிட்டம்புவ கலல்பிட்டிப் பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுடைய நபரொருவரே உயிரிழந்துள்ளார்.

சாலையில் பயணித்துக் கொண்டிருந்த சைக்கிளைப் பின்னால் வந்த டிப்பர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் டிப்பர் வாகனத்தின்சாரதிகைதுசெய்யப்பட்டதுடன், மேலதிக விசாரணைகளைத்தாம்முன்னெடுத்துவருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ரி2)



# வரி செலுத்தும் மக்களுக்கு தகவல் அறிய உரிமையுண்டு

### சுதர்ஷன குணவர்த்தன தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை5
**அரசுக்கு வரி செலுத்தும் பொதுமக்களுக்கு, அரச பணிகள் தொடர்பில் தெரிந்துகொள்வதற்கு உரிமை உண்டு. அரச பணிகள் தொடர்பான தகவல்களை உரிய முறையில் வழங்குவதன் மூலம் இந்த உரிமை உறுதிசெய்வதை அரச ஊடக நிறுவனங்களுக்கு உட்பட்டவர்களின் பொறுப்பாகும்.**

இவ்வாறு அரச தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சட்டத்தரணி சுதர்ஷன குணவர்த்தன தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற டிஜிற்றல்படப்பிடிப்பாளர்களுக்கானசெயலமர்வில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இன்று பத்திரிகை, தொலைக்காட்சி மற்றும் வானொலி போன்ற ஊடகங்கள் டிஜிற்றல் மயப்படுத்தப்பட்டுள்ளன.

டிஜிற்றல்மயத்தைநோக்கியபயணயுகத்திலேயே நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். பொதுமக்களுக்கு வாசிப்பதற்கு நேரமில்லை. பெரும்பாலானோர் தகவல்களைக் கையடக்கத் தொலைபேசி ஊடாகவோ அல்லதுரப்பின் ஊடாகவோபார்த்து அறிந்து கொள்கின்றனர். இதன் காரணமாக நீண்ட கட்டுரைகளை,வெளியிடுவதிலும் பார்க்கப் புகைப்படங்க ளின் மூலம் தகவல்களைப் பொதுமக்களுக்குத் தெரிவிக்க முடியும். தகவல்களை வழங்குவதில் புகைப்பட ஊடகவியலாளர்களைப் பயன்படுத்த முடியும். ஆயிரம் சொற்களில் ஒரு செய்தி சொல்லப்படுவதை ஒரு ஒளிப்படத்தினூடாகச் சொல்ல முடியும்- என்றார்.

அரச தலைவர் ஊடகப்பிரிவு மற்றும் அரச தகவல் திணைக்களம் இணைந்து இந்தச் செயலமர்வை ஏற்பாடு செய்திருந்தது. அமைச்சுக்கள்மற்றும்திணைக்களங்களில் ஒளிப்பட ஊடகவியலாளர்களாகப் பணியாற்றுபவர்களுக்காக இச் செயலமர்வு முன்னெடுக்கப்பட்டது. (ரி2)

# மாணவிக்கு செயற்கைக் கை வழங்கி வைப்பு

கொழும்பு,ஜூலை 5
பிறவியிலேயே கையை இழந்த மாணவி தனக்கு செயற்கை கை ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கு உதவுமாறுஅரசதலைவர்மைத்திரிபால சிறிசேனவிடம் முன்வைத்த வேண்டுகோளை நிறைவேற்றும் வகையில் மாணவிக்குச் செயற்கை கை வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வு அரச தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது. சிறிபுர மத்திய மகா வித்தியாலயத்தில் 10 ஆம் ஆண்டில் கல்வி கற்கும் மாணவி ஒருவருக்கே அரச தலைவரால், செயற்கை கை வழங்கப்பட்டது.



இவ்வாறு அரச தலைவர் ஊடகப்பிரிவுஅனுப்பிவைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:
2017 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி சிறிபுர பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்ச்சித்திட்டமொன்றில் அரச தலைவரைச் சந்தித்த மாணவி, தனக்கு செயற்கை கை ஒன் றைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான உதவியை வழங்குமாறு வேண்டுகோள் விடுத்தார். அந்த சந்தர்ப்பத்தில் மாணவிக்குப் பொருத்தமான செயற்கை கை ஒன்றை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அரச தலைவர் பணிப்புரை விடுத்தார். இந்த நிலையிலேயேநேற்றுமுன்தினம் செயற்கை கை வழங்கப்பட்டது.

பிறவியிலேயே கையை இழந்திருந்த இந்த மாணவியின் எதிர்காலத்தை ஒளிமயமாக்கும் வகையில் சிறப்புக் கவனம் செலுத்தி அவருக்குஇந்தஉதவியைப் பெற்றுக்கொடுத்ததற்காக அவரது பெற்றோர் அரச தலைவருக்கு நன்றியைத் தெரிவித்தனர்.

நிகழ்வில்மாணவியின்பெற்றோர்மற்றும்இலங்கைஇராணுவத்தின் மறுவாழ்வு பிரிவின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் எஸ்.கே. திருநாவுக்கரசுஉள்ளிட்டோர்கலந்துகொண்டனர். என்றுள்ளது. (ரி2)

## புதையல் அகழ்வில் ஈடுபட்ட 4 பேர் கைது

திருகோணமலை,ஜூலை5
காட்டுப் பகுதியில் புதையல் அகழ்வில் ஈடுபட்டுக் கொண்டிருந்த நால்வர் கைது செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் திருகோணமலை, அக்போபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பேரமடுவப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இரண்டு வாரங்களாக மேற்கொள்ளப்பட்ட இந்த அகழ்வில் சந்தேகநபர்கள் 30 அடிவரை அகழ்ந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.


அக்போபுர பொலிஸார் நடத்திய சிறப்புத் தேடுதலின் போது இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்தச் சட்ட விரோத புதையல் அகழ்வில் எழுவர் ஈடுபட்டதாகவும், அவர்களில்மூவர்தப்பிச்சென்றுவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தப்பிச் சென்றவர்களைத் தேடும் பணி தொடர்வதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ரி2)

## நடமாடும் பற் சிகிச்சை முகாம்



திருகோணமலை,ஜூலை5
கிண்ணியா அலிகார் மகா வித்தியாலயத்தில் நடமாடும் பற் சிகிச்சை முகாம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

திருகோணமலை பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தினால் இந்த சிகிச்சை முகாம் ஏற்பாடு செய்யப்பட்டது.

தரம் 8 முதல் 13 வரையான வகுப்பு மாணவர்களுக்கேபற்சிகிச்சையளிக்கப்பட்டது. பற்கள்பராமரிப்புத்தொடர்பாகமருத்துவஆலோசனைகளும் இதன்போது வழங்கப்பட்டன. மருத்துவர் எஹியாநியாஸ்தலைமையில்நடைபெற்றஇந்த இலவச பற்சிகிச்சை முகாமில் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள்பயனடைந்தனர். (ரி2,40)

## விபத்தில் மாணவர் இருவர் உயிரிழப்பு

மாத்தறை,ஜூலை5
மாத்தறை, தெவுந்தர ஹக்மன வீதி, பிட்டவல்கமுவ பகுதியில், நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் மாணவர் இருவர் உயிரிழந்தனர்.

அதே பிரதேசத்தைச் சேர்ந்த 16 மற்றும் 19 வயதுகளுடைய மாணவர்களே உயிரிழந்துள்ளனர்.

பேருந்து ஒன்றும், எதிர் திசையிலிருந்து வந்த மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்த இரண்டு மாணவர்களும் நரவல்பிட்டிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதும் அங்கு சிகிச்சை பயனின்றி உயிரிழந்தனர்.

பேருந்துச் சாரதி கைது செய்யப்பட்டதுடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைத் தாம் முன்னெடுத்து வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ரி2)



### வியன்னாவில் நாளை

## அணுவாயுத பரவல்த்தடை ஒப்பந்தம் குறித்துப் பேச்சு

வியன்னா, ஜூலை 5
அமெரிக்கா விலகிய பின்னர் முதன்முறையாக வல்லரசு நாடுகளுடன் ஈரான் கலந்துகொள்ளும் அணு ஆயுதப் பரவல்த்தடை ஆலோசனைக் கூட்டம் ஆஸ்திரியாவின் தலைநகர் வியன்னாவில் நாளை நடைபெறுகிறது.
அணுவாயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் இருந்து சமீபத்தில் விலகிகொண்ட அமெரிக்கா, அடுத்தடுத்து ஈரான் அரசின்மீது பல்வேறு பொருளாதாரத் தடைகளையும் விதித்து வருகிறது. தனது நேசநாடுகளும் ஈரானைப் புறக்கணிக்க வேண்டும் என்று அமெரிக்க அயலுறவுத் துறையின் சார்பில் நிர்பந்திக்கப்படுகிறது.
இந்த ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா விலகினாலும் நாங்கள் தொடர்ந்து கடைபிடிப்போம் என இதில் கையொப்பமிட்டுள்ள இதர வல்லரசு நாடுகள் தெரிவித்துள்ளன. இந்த நிலையில், அமெரிக்கா விலகிய பின்னர் முதன்முறையாக வல்லரசு நாடுகளுடன் ஈரான் கலந்துகொள்ளும் அணு ஆயுதத் தடை ஒப்பந்த ஆலோசனைக் கூட்டம் வியன்னா நகரில் நாளை நடைபெறவுள்ளது.
பிரிட்டன், சீனா, பிரான்ஸ், ஜேர்மனி, ரஷ்யா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளுடன் ஈரான் நாட்டு அயலுறவுத்துறை அமைச்சர் முஹம்மது ஜாவத் ஸரிப் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்வார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## பிரிட்டன் சாலிஸ்பரியில் விசவாயுத் தாக்குதல்

லண்டன், ஜூலை 5
பிரிட்டனின் சாலிஸ்பரி நகரில் நேற்று விசவாயுத் தாக்குதல் நடத்தப்பட்டது.
40 வயது மதிக்கத்தக்க தம்பதியரை இலக்குவைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. அவர்கள் இருவரும் கவலைக்கிடமான நிலையில் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். தாக்குதலை அடுத்து சாலிஸ்பரி நகரம் ஊசார் நிலைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.
ர்ஷ்யாவின் உளவாளியாக இருந்து பிரிட்டனுக்கு உளவு பார்த்த ஸ்கிர்போல் மீது அண்மையில் விசவாயுத் தாக்குதல் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)





### கச்சா கொள்வனவுத் தடை

# அமெரிக்காவுக்கு ஈரான் கண்டனப்




தெக்ரோன், ஜூலை 5
ஈரானிடம் இருந்து ஏனைய நாடுகள் கச்சா கொள்வனவு செய்யக்கூடாது என்று அமெரிக்கா கட்டளையிட்டிருந்த நிலையில் இதற்குக் கடும் கண்டனத்தைத் தெரிவித்தார் ஈரானின் அதிபர் ஹசன் ரவுகானி.
ஈரானுடன் தான் கொண்டிருந்த அணுவாயுதப் பரவல்த்தடை ஒப்பந்தத்தில் இருந்து அண்மையில் வெளியேறியது அமெரிக்கா. இதையடுத்து பகிரங்கமாகவே அணுவாயுதச் சோதனைகளில் ஈடுபடத் தயாராகி வருகிறது ஈரான். ஈரானில் உள்ள யூரேனியம் (அணுவாயுதங்களைத் தயாரிப்பதற்கான மூலம்) செறிவூட்டும் மையங்களை மீண்டும் இயக்குமாறு அண்மையில் உத்தரவிட்டார் ரவுகானி. இதையடுத்து ஈரானின் மீதுமிகப்பெரும்பொருளாதாரத்தடையை விதிக்க நடவடிக்கை எடுத்து வருகிறது அமெரிக்கா.
இதன் முக்கிய நகர்வாக ஈரானிடம் இருந்து கச்சா பெறும் நாடுகள் எதிர்வரும் நவம்பர் மாதத்துக்குள் ஈரானுடன் கொண்டுள்ள கச்சா ஒப்பந்தத்தைக் கைவிட வேண்டும் என்று அறிவித்துள்ளது அமெரிக்கா. இதையடுத்தே அமெரிக்காவுக்குத் தனது கண்டனத்தைத் தெரிவித்தார் ரவுகானி.
சுவிற்சர்லாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள ரவுகானி, அங்கு நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.
"ஈரானிடம் இருந்து பிற நாடுகள்
கொள்முதல் செய்வதை முற்றிலும்
அமெரிக்கா முடிவு செய்துள்ளது. அ
அவர்கள் கூறியதன் அர்த்தம்
ளுக்கே புரியவில்லை. ஈரான் ந
கச்சா விநியோகம் தடை செய்யப்
உலகெங்கும் அது பாதிப்பை ஏற்ப
என்று ரவுகானி மேலும் தெரிவித்



பிரான்ஸின் தலைநகர் பரிஸில் வருடாவருடம் இடம்பெறும் 'பரிஸ் பேஷன் ஷோ' தற்போது நடைபெற்று வருகிறது. இந்தப் போட்டியில் நேற்றுமுன்தினம் கலந்துகொண்ட பெண்ணொருவரின் ஒளிப்படமே இது. (ம)

## 'முழுதும் பொய்

ஒட்டாவா, ஜூலை 5
கனேடிய அதிபர் ஜஸ்ரின், 18 ஆண்டுகளுக்கு முன்னர் பெண் செய்தியாளரைக் கட்டித் தழுவினார் என்று எழுந்துள்ள குற்றச்சாட்டை அவர் திட்டவட்டமாக மறுத்தார்.



கடந்த 2000ஆம் ஆண்டில் பிரிட்டிஸ் கொலம்பியாவில் நடைபெற்ற இசை நிகழ்ச்சியின்போதே ஜஸ்ரின் பெண் செய்தியாளரைக் கட்டித் தழுவினார் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.
இதற்கு மறுப்புத் தெரிவித்துள்ள ஜஸ்ரின், "எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது.
கிரஸ்டன் நகரில் பனிப்பாறை பாதுகாப்பு அறக்கட்டளை நடத்திய இசை
வில் கலந்து கொண்டேன். அப்போது இத்தகைய சம்பவம் எதுவும் நட
வில்லை" என்று மேலும் தெரிவித்தார்.

## ஈரானின் மேகங்களை

தெக்ரோன், ஜூலை 5
ஈரானின் மேகக்கூட்டங்களை இஸ்ரேல் திருடியதால் ஈரானில் கடும் வரட்சி நிலவுகிறது என்ற குற்றச்சாட்டை முன்வைத்தார் ஈரானின் பாதுகாப்புத் துறை இயக்குனர் கோலாம்.
ஈரானில் பருவநிலை மாறிவருவது சந்தேகத்தை ஏற்படுத்தி உள்ளது. இந்த பருவநிலை மாற்றத்தில் வெளிநாட்டுத் தலையீடு இருக்கலாம் என்ற சந்தேகம் உள்ளது.
"இந்தப் பிராந்தியத்தில் இஸ்ரேல் மற்றும் மற்றொரு நாட்டின் கூட்டுக் குழு ஒன்று உள்ளது. இந்தக் குழு
வானது. ஈரான்
மேகக் கூட்டங்கள்
பதை உறுதி செ
செய்கின்றன. ஆ
மத்திய தரைக்க
மலைப்பகுதிகள்
அளவுக்கு பனி ப
னில் மட்டும் இல்
திருட்டு காரணம
கொண்டிருக்கிறோ
தெரிவித்தார்.

கு
ம

ற நாடுகள் கச்சா
முற்றிலும் நிறுத்த
ள்ளது. ஆனால்,
ர்த்தம் அவர்க
ஈரான் நாட்டின்
. செய்யப்பட்டால்
பை ஏற்படுத்தும்"
தெரிவித்தார். (ம)

ய்'

ப இசை விழா
வும் நடைபெற
(ம)

# உருவாகிவருகிறது புதியதொரு கிரகம்



ஒரு நட்சத்திரத்தைச் சுற்றி வாயு மற்றும் தூசுகளால் உருவாகி வரும் புதிய கிரகத்தை வானியலாளர்கள் படமெடுத்துள்ளனர்.

இதுபோன்ற உருவாக்கநிலையிலுள்ள கிரகத்தை ஆராய்ச்சியாளர்கள் பல ஆண்டுகளாக தேடிவரும் நிலையில், முதல் முறையாக இது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 'பிடிஎஸ் 70' என்று பெயரிடப்பட்டுள்ள இந்த நட்சத்திரத்திற்கு 10 மில்லியன் ஆண்டுகளுக்கும் குறைவான வயதே இருக்குமென்றும், மேலும் இதன் துணைக்கோளின் வயது 5 முதல் 6 மில்லியன் வயதுகள் இருக்குமென்றும் தெரிய வந்துள்ளது.

பிடிஎஸ் 70பி என்று பெயரிடப்பட்டுள்ள இது வியாழனைவிட பல மடங்கு பெரியதாக இருக்குமென்றும், மேலும் அது மேகமூட்டமாக வளிமண்டலத்தைக் கொண்டிருக்கலாம் என்றும் தெரிகிறது. யுரேனஸ் சூரியனை சுற்றிவரும் தூரத்தைப் போன்று இந்தக் கோளும் அதன் நட்சத்திரத்தை சுற்றிவருமென்று ஜேர்மனியிலுள்ள மாக்ஸ் பிளாங்க் இன்ஸ்டியூட் பார் அஸ்ட்ரானமியின் ஆராய்ச்சியாளர்கள் குழு கண்டறிந்துள்ளது. (ம)

# மலேசிய முன்னாள் தலைமை அமைச்சர் நஜீப் ரசாக் நேற்றுமுன்தினம் கைதாகினார்



கோலாலம்பூர், ஜூலை 5

மலேசியாவில் ஊழல் குற்றச்சாட்டுக்கு ஆளான முன்னாள் தலைமை அமைச்சர் நஜீப் ரசாக் நேற்றுமுன்தினம் கைதாகினார். மலேசியாவில் அண்மையில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் நஜீப் ரசாக் தோல்வி அடைந்தார். எதிர்க்கட்சிகள் கூட்டணி வெற்றி பெற்று மகாதிர் முகமது தலைமை அமைச்சரானார்.

அதன்பின் நஜீப் மீதான ஊழல் வழக்கு விசாரணை வேகம் பெற்றது. அண்மையில் அவரின் வீட்டில் நடைபெற்ற சோதனையில் சுமார் 3 ஆயிரம் கோடி ரூபா பெறுமதியான பொருள்கள் கைப்பற்றப்பட்டன. இதையடுத்துத் தொடர்ந்து நடைபெற்றுவந்த நடவடிக்கைகளின் அடிப்படையில் நேற்றுமுன்தினம் கைதானார் ரசாக். (ம)

# ...ளை இஸ்ரேல் திருடியதாம்

ஈரான் வான் எல்லைக்குள் வரும்
...டங்கள் மழை பொழியாமல் இருப்
...தி செய்வதற்கான வேலையைச்
...ன. ஆப்கானிஸ்தானில் இருந்து
...ரைக்கடல் பகுதி வரையிலான
...திகளில் 2 ஆயிரத்து 200 மீற்றர்
...பனி படர்ந்துள்ளது. ஆனால் ஈரா
...ம் இல்லை. மேகம் மற்றும் பனி
...ரணமாக நாம் வறட்சியை எதிர்
...க்கிறோம்" என்று கோலாம் மேலும்
...ர். (ம)





சிரியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான போர் டெரா மாகாணத்தில் தற்போது தீவிரமான முன்னெடுக்கப்பட்டு வருகிறது. பல்லாயிரக் கணக்கான மக்கள் தத்தமது பாதுகாப்புக் கருதி அங்கிருந்து வெளியேறி வருகின்றனர். அது தொடர்பான ஒளிப்படங்களை பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் வெளியிட்டு வருகிறது. (ம)

# பிறவிக் கலைஞன்



நைஜர், ஜூலை 5

பல ஆண்டுகள் பயிற்சி எடுத்த பிறகே தத்ரூபமான ஓவியங்கள் வரைவது சாத்தியமாகும். ஆனால் 11 வயதேயான கரீம் வாரிஸ் ஓலாமிலிகான், தன்னுடைய ஓவியங்களால் உலகையே ஆச்சரியத்தில் ஆழ்த்தியிருக்கிறார். நைஜீரியாவின் லாகோஸ் நகரில் வசிக்கும் இவர், 6 வயதில் தனக்குப் பிடித்த கார்ட்டூன் கதாபாத்திரங்களை வரைய ஆரம்பித்தார். 2 ஆண்டுகளுக்குப் பிறகு, ஓர் ஓவியப் பயிற்சி அக்கடமிக்கு அருகே இவரது குடும்பம் குடிபெயர்ந்தது. மிக ஏழ்மையான குடும்பம் என்பதால், மகனை ஓவியப் பயிற்சியில் சேர்த்து விடுவதற்கு அவர்களால் இயலவில்லை. அதற்காகத் தன் முயற்சியைக் கரீம் கைவிடவில்லை. ஓவிய அக்கடமியின் மூலையில் அமர்ந்து, மற்ற மாணவர்கள் பயிற்சி செய்வதுபோல் தானும் செய்துகொண்டிருப்பார். ஒருகட்டத்தில் கரீமின் ஓவியங்களைப் பார்த்து வியப்படைந்த அக்கடமி உரிமையாளர்கள், தாங்களாகவே பயிற்சியளிக்க முன்வந்தனர். இன்று தங்கள் மாணவர்களில் மிகச் சிறந்தவர் கரீம் என்று பெருமிதம் கொள்கிறார்கள்.

"என்னுடைய ஓவியத் திறமையைக் கண்டுபிடித்து, அங்கீகரித்தது அயோவால் ஆர்ட் அக்கடமிதான். நான் வண்ணங்களை விட்டு, தத்ரூபமான ஓவியங்களுக்கு மாறியது என்னுடைய ஏழ்மையால்தான். காகிதம், தூரிகை, வண்ணங்கள் வாங்க என்னிடம் வசதி இல்லை. அதனால் பேனா, பென்சில் மூலம் மனித முகங்களை வரைவதில் ஆர்வம் செலுத்தினேன். அம்மா மளிகை சாமான் வாங்கி வரச் சொல்லிப் பணம் கொடுப்பார். அதில் கொஞ்சம் வெள்ளைத் தாள்களை வாங்கிக் கொள்வேன். வீட்டில் மின்சார வசதி இல்லை. அதனால் நள்ளிரவில் தெரு விளக்கு வெளிச்சத்தில்தான் வரைவேன். அம்மாவும் அப்பாவும் கடுமையாக உழைத்தால் தான் நாங்கள் சாப்பிடவே முடியும். உழைப்பு எப்படிப் பணமாக, உணவுப் பொருளாக, சமைக்கப்பட்ட உணவாக மாறி எங்கள் தட்டுக்கும் வாய்க்கும் வந்து சேர்கிறது என்பதை நான் அனுபவத்தின் வாயிலாகக் கண்டறிந்தவன். அதனால்தான் என்னுடைய ஓவியங்களில் ஏழ்மையும் உணவும் பிரதானமான விடயங்களாக இருக்கின்றன. இன்று தொழில்முறை கலைஞனாகப் பலருக்கும் ஓவியங்களை வரைந்து கொடுக்கிறேன். ஆனாலும் எங்கள் குடும்பத்தின் வறுமை இன்னும் மறையவில்லை. பொதுவாக நைஜீரியப் பெற்றோர் தங்கள் குழந்தைகள், மருத்துவராகவோ வழக்கறிஞராகவோதான் வர வேண்டும் என்று நினைப்பார்கள். ஆனால் என்னை என் விருப்பத்துக்கு பெற்றோர் விட்டு விட்டனர். எங்கள் குடும்பம் இருக்கும் நிலையில் இது பெரிய விஷயம். என் போன்ற வித்தியாசமான திறமை கொண்டவர்களை அரசு கண்டறிந்து, ஊக்கப்படுத்த வேண்டும். நைஜீரியாவின் புகழை உலகம் முழுவதும் பரப்ப வேண்டும். தத்ரூப ஓவியங்களைத் தவிர்த்து வண்ண ஓவியங்கள், முக ஓவியங்கள் என்று பல்வேறு ஓவியங்களையும் வரைந்து வருகிறேன். நைஜீரியாவின் அழகிய முகங்களை உலகம் முழுவதும் தெரிய வைக்கும் தத்ரூப ஓவியங்களே எனக்கு மிகவும் பிடித்தவை" என்கிறார் கரீம்.

"நீ தெரு ஓவியனாக உன்னை நினைத்து க் கொள்ளாதே, வான் கா, டாவின்சி போன்ற மிகப் பெரிய ஓவியனாக நினைத்துக்கொள் என்று கரீமுக்கு அடிக்கடிச் சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

நைஜீரியாவின் மிக இளம் வயது தொழில்முறை ஓவியன் கரீம்தான்" என்று பெருமையோடு சொல்கிறார் ஓவிய அக்கடமியின் உரிமையாளர். (ம)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# புலி இன்றி அமையாது இலங்கை நாடு

விடுதலைப் புலிகள் மீள உருவாக்கப்படவேண்டும் என்று இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்த கருத்து, எதிர்பார்த்ததைப் போன்றே சிங்கள அரசியல்வாதிகள் மத்தியிலும், தெற்கிலும் கடும் சர்ச்சையை எழுப்பியுள்ளது. இந்த விடயத்தை முன்னாள் அரசதலைவர்மகிந்தராஜபக்சஅணியினர்தூக்கிப்பிடித்துத் தாண்டவமாடத் தொடங்கியதும், அமைச்சர் விஜயகலா வைத்தற்காலிகமாகப் பதவி நீக்கம் செய்யும்படி தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அரச தலைவர் மைத்திரி பால சிறிசேனவுக்குப் பரிந்துரைத்துள்ளார். நாடாளுமன்றத்திலும் இந்தப் பிரச்சினை பெரும் சர்ச்சையாக வெடித்துள்ளது.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் இருந்து விடுதலைப் புலிகள் இயக்கம் அமைதிப்படுத்தப்பட்டு 9 வருடங்கள் கடந்துபோனாலும், அந்த நாமம் இன்றி கொழும்பின் அரசியல் அணுவும் முன்னகராது என்பதற்கு இந்தச் சம்பவம் மிகச் சிறந்த உதாரணம். ஆட்சியைப் பிடிப்பதற்கும், ஆட்சியைத்தக்கவைப்பதற்கும்விடுதலைப்புலிகளின்பெயரே கொழும்பு அரசியலின் முதுகெலும்பாக இருக்கின்றது.

ஒருபுறத்தில் சிங்கள மக்களின் வாக்குகளைக் கவர, விடுதலைப் புலிகள் மீள உருவாகிவருகிறார்கள் என்கிற அச்சத்தையும், அதன் மூலம் நாட்டின் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாகின்றது என்கிற மிரட்டலையும் கோத்தபாய ராஜபக்ச உருவாக்குகிறார். மறுபுறத்தில் வடக்கில் தனது அரசியல் செல்வாக்கைத் தக்க வைத்துக் கொள்ள விடுதலைப்.புலிகள் மீளஉருவாகவேண்டும் என்றார் விஜயகலா.

ஆகமொத்தத்தில், லஞ்ச, ஊழல் குற்றச்சாட்டுக்களைவிட, அபிவிருத்திப் பணிகளைவிட, பொருளாதார வளர்ச்சியைவிட, பௌத்த சிங்கள தேசியத்தைவிட விடுதலைப் புலிகள் என்கிற வார்த்தை, இலங்கை அரசியலில் மிகக் கவர்ச்சிகரமானதாக, இன்னும் தனது மவுசு மங்காததாகத் திகழ்கின்றது.

விஜயகலாவின்கருத்துக்கள்கோத்தபாயதரப்புக்குகிடைத்த அதிர்ஷ்டப் பரிசு. எனவே நாடாளுமன்றத்திலும், வெளியிலும் அதனை மூலதனமாக்குவதில் அவர்கள் குறியாக இருக்கிறார்கள். அதேநேரம், இந்தப் பிரச்சினையால் தமது வாக்குகள் சரிந்துவிடக்கூடாதே என்கிற கவலை ஐக்கிய தேசியக்கட்சிக்கு. அதனால் விஜயகலாவைப் பலி கொடுப்பதற்கும் அது தயாராக இருக்கின்றது. உண்மையில் விஜயகலா விடுதலைப் புலிகளைப் பற்றிப் புகழ்ந்து பேசுவது இது முதற்றடவையல்ல. கடந்தநாடாளுமன்றத்தேர்தலின் போதும், உள்ளூராட்சி சபைத் தேர்தலின் போதும்கூட அவர் பல தடவைகள் பொது மேடைகளில் புலிகள் இயக்கத்தையும், அதன் தலைவர் பிரபாகரனையும் சிலாகித்துப் பேசியிருக்கிறார். அப்போதெல்லாம் ஐக்கிய தேசியக்கட்சி அதனைக் கண்டும் காணாமல் இருந்தது. ஏனெனில் தமிழர்களின் வாக்குகள் அதற்குத் தேவையாக இருந்தன.

எனவேதான், விடுதலைப் புலிகளின் மீள் உருவாக்கம் பற்றி விஜயகலா பேசுவதற்குப் பின்னால் இருந்த, யாழ்ப்பாணத்தில் பெண்களின் பாதுகாப்பு மிக மோசமான நிலைமைக்குச் சென்றிருக்கின்றது என்கிற உண்மையில், கவலைப்படவேண்டிய விடயம் பின்தள்ளப்பட்டு வாக்கு அரசியல் முன்னகர்த்தப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் இயக்கம் நாட்டில் இயங்கு நிலையில் இருக்கும்போது இலங்கையின் அரசியலைத் தீர்மானிப்பதாக இருந்தது. கொழும்பின் ஆட்சிக்கட்டிலில் யார் அமரலாம், யார் அமரக்கூடாது என்பதை நேரடியாகத் தீர்மானிக்கும் சக்தியாக அது இருந்தது. இப்போது இயங்கு நிலையில் அது இலங்கையில் இல்லை என்கிறபோதும், கொழும்பின் அரசியலைத் தீர்மானிக்கின்ற இயங்கு சக்தியாக இருக்கும் மாயம் அந்த இயக்கத்திற்கு வாய்த்திருக்கிறது.

இனப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காணப்படாத வரைக்கும் அந்த மவுசும் மாய சக்தியும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்குத் தொடர்ந்துகொண்டேதான் இருக்கும்.

# மகிந்த மிக விரைவான தேர்தலொன்றை எதிர்பார்ப்பதேன்?

கடந்த முதலாம் திகதிய (01.07.2018) 'சிலோன் ருடே' ஞாயிறு இதழ் தனது 'இலங்கை அரசியல் நிலவரம் குறித்த' பகுதியில் வெளியிட்டுள்ள கட்டுரையின் தமிழாக்கம் இது.

தமிழில்– ஆனந்த்

ஏன் விரைவில் ஒரு தேர்தல் இடம்பெறப்போகிறது என மகிந்த ராஜபக்ச யூகிக்கிறார்?

தலைமை அமைச்சருக்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை வாக்களிப்பின் பின்னர் கூட்டு அரசிலிருந்து வெளியேறிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் 16பேர் கொண்ட குழு, அகதிகள் போல அலைந்து திரிந்து, தங்களை ஏற்றுக்கொள்ள எந்தவொரு கட்சியுமில்லாமல் இறுதியாக சிறிலங்கா மக்கள் முன்னணியுடன் சங்கமமாகியுள்ளது.

இது தொடர்பாக ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்த 16பேர் குழுவின் நாடாளுமன்ற உறுப்பினர் டபிள்யூ.டி.கே செனவிரட்ன, இனிமேல் தங்களை எவரும் 16பேர்க் குழுவென குறிப்பிடக் கூடாது எனவும், தாங்கள் கூட்டு அரசை விட்டு விலகிய காலத்தில் இருந்தே எதிர்க்கட்சியாக இருந்து வந்ததாகவும், இப்போது தங்களின் பேதங்கள், கருத்து வேறுபாடுகளைமறந்துசிறிலங்காமக்கள்முன்னணியுடன் இணைந்து தற்போதைய கூட்டு அரசை பதவியில் இருந்து அகற்றுவதே தங்கள் கொள்கை எனவும் கூறினார். அத்துடன் சிறிலங்கா மக்கள் முன்னணியின் அங்கத்துவம் பெறவேண்டிய தேவை தங்களுக்கு இல்லை எனவும் கூறினார்.

### 16 பேர் குழுவின் உறுப்பினர் லக்ஸ்மன் யாபா அபேவர்தன வெளியிட்டு கருத்து

இந்த 16பேர் குழுவின் மற்றுமொரு நாடாளுமன்ற உறுப்பினரான லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன இது பற்றிக் கூறுகையில், தாங்கள் சிறிலங்கா மக்கள் முன்னணியின் அடுத்த குழுக்கூட்டத்திற்கு அழைக்கப்பட்டிருப்பதாகவும், அந்தக் கூட்டம் மகிந்த ராஜபக்சவின் கொழும்பு இல்லத்தில் ராஜபக்சவின் தலைமையில் நடைபெறவுள்ளதாகவும், அத்துடன் சிறிலங்கா மக்கள் முன்னணியுடன் ஒரே கட்சியாக இணைந்து அடுத்து வரவுள்ள தேர்தலின்போது செயல்பட உள்ளதாகவும் கூறினார்.

16பேர் குழுவின் உறுப்பினர்களான திலங்க சுமதிபால, தயாசிறி ஜயசேகர மற்றும் எஸ்.பி.திசாநாயக போன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தச் சந்திப்பின்போது பிரசன்னமாகி இருக்கவில்லை.

இதற்கிடையில் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச, அரசிலிருந்து பிரிந்து வந்த எவரையும் தான் அன்புடன் வரவேற்பதாகவும், தலைமை அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையின்போது அதற்கு ஆதரவாக செயல்பட்டமைக்கு 16பேர் கொண்ட குழுவினரைப் பாராட்டுவதாகவும் தெரிவித்தார். அத்துடன் ராஜபக்சவின் கரங்களைப் பலப்படுத்தி ராஜபக்சவை எதிர்க்கட்சித் தலைவராக்கி, இந்தக் கூட்டு அரசை வீழ்த்தி அரசமைப்புக்கான 20ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவோம் என எதிர்பார்ப்பதாகவும் கூறினார்.

16பேர் குழுவின் மற்றொரு உறுப்பினரான சுசில் பிரேம ஜயந்தவிடம் நீங்கள் அரசதலைவர் தேர்தலில் எவருக்கு ஆதரவளிப்பீர்கள் என கேட்கப்பட்ட பொழுது, அவர் அதற்கு இன்னும் காலம் இருக்கிறது எனவும், தற்சமயம் தாங்கள் கூட்டு எதிரணியுடன் இணைந்து ஏனைய தேர்தல்களை எதிர்கொள்ளப் போவதாகவும் கூறினார்.


### "நியூயோர்க் டைம்ஸ்" பற்றவைத்துள்ள வெடி

நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகையில் அண்மையில் வெளியான ஒரு செய்தியில், இலங்கை சீனாவிடமிருந்து பல வகையிலும் கடன்களைப் பெற்று சீனாவின் கைப்பிடிக்குள் சிக்கிக்கொண்டிருக்கிறது எனவும், முன்னைய அரசின் ஆட்சியில், மகிந்த ராஜபக்சவின் அரசதலைவர் தேர்தல் பரப்புரைகளுக்காக சீனா பெருந்தொகை நிதியை வழங்கியிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

2015ஆம் ஆண்டு நல்லாட்சி நாட்டில் மலர்வதில் முக்கிய பங்காற்றிய பிரஜைகள் கூட்டு நிர்வாகங்கள் குழு, வெகு அண்மையில் வெளியாகியுள்ள பெரிய ஊழல் விவகாரமாகக் கருதப்படும், 2015ஆம் ஆண்டு அரசதலைவர் தேர்தல் பரப்புரைகளுக்காக சீனா, மகிந்த ராஜபக்சவுக்கு வழங்கியதாகக் கூறப்படும். நிதி உதவி பற்றிய விசாரணைகளை முன்னெடுக்குமாறு அரச தலைவரையும், தலைமை அமைச்சரையும் கேட்டுள்ளது.

சீனா இந்தக் குறிப்பிட்ட நிதியை சைனா மேர்ச்சன்ற் போர்ட் ஹோல்டிங் நிறுவனம் (CHINA MERCHANT PORT HOLDINGS COMPANY) மூலம் காசோலையாக அலரிமாளிகைக்கு அனுப்பியிருந்ததாகவும், அதனைப் பெற்றுக் கொண்டவர் ஒரு பௌத்த பிக்கு எனவும், அந்தப் பணத்திற்கு என்ன நடந்துள்ளது என்பது ஆராயப்படவேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக ஏற்கனவே நிதிக்குற்றங்களை விசாரணைசெய்யும்பிரிவிடம்குற்றச்சாட்டொன்றைப் பதிவு செய்துள்ளார்.

முன்னாள் மத்திய வங்கியின் ஆளுநர் அஜித்





2015ஆம் ஆண்டு நல்லாட்சி நாட்டில் மலர்வதில் முக்கிய பங்காற்றிய பிரஜைகள் கூட்டு நிர்வா கங்கள் குழு, வெகு அண்மையில் வெளியாகியுள்ள பெரிய ஊழல் விவகாரமாகக் கருதப்படும், 2015ஆம் ஆண்டு அரசதலைவர் தேர்தல் பரப்புரைகளுக்காக சீனா, மகிந்த ராஜபக்சவுக்கு வழங்கியதாகக் கூறப்படும். நிதி உதவி பற்றிய விசாரணைகளை முன்னெடுக்குமாறு அரச தலைவரையும் தலைமை அமைச்சரையும் கேட்டுள்ளது.

நிவாட் கப்ரால் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச ஆகியோர் குறித்த விடயம் தொடர்பாக உப்புச்சப்பற்ற கருத்துக்களைத் தெரிவிக்கின்றனர். இந்தப் பணம் மகிந்த ராஜபக்சவிடமிருந்து மீளப்பெறப்பட வேண்டும் என்பதுதான் பிரஜைகள் கூட்டு நிர்வாக இணைப்பாளர் சமன் ரட்ணபிரியவின் நிலைப்பாடாகும்.

**மகிந்த தரப்பினர் மீண்டும் ஆட்சிக்கு வருவதை நாட்டு மக்கள் ஏற்கப்போவதில்லை என்கிறார் சமன் ரட்ணபிரிய**

சர்வாதிகாரப் போக்கில் ஆட்சிபுரிந்த மகிந்த ராஜபக்ச மற்றும் அவரது சகோதரர் கோத்தபாய ராஜபக்ச ஆகியோர், மீண்டும் ஆட்சிக்கு வருவதை பொதுமக்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் அனுமதிக்கக் கூடாது. இந்த இரண்டு சகோதரர்களையும் மக்கள் எப்படியாவது ஓரங்கட்டிவிட வேண்டும் எனவும் சமன் ரட்ணபிரிய கூறியுள்ளார்.

அம்பாந்தோட்டை துறைமுக விவகாரம் தொடர்பாக 7.5மில்லியன் டொலர்களை அப்போதைய அரசதலைவர் மகிந்த ராஜபக்சவின் தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டமை தொடர்பாக இலங்கை மற்றும் சீனா ஆகிய இரு நாடுகளின் அரசுகளும் தனித்தனியாக விசாரணைகள் நடத்தவேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்துகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்சன ராஜகருணா ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் சீனாவின் "ஒருபாதை, ஒரு வழித்தடம்" ஏன்ற தொனிப்பொருளின் அடிப்படையே நூறு வீதம் ஊழல் அற்றது என்பதுதான். இந்த துறைமுக நிறுவனமும் சீன நாட்டினது என்ற காரணத்தால், சீன அரசும் இந்த ஊழல் பற்றியதொரு விசாரணையை மேற்கொள்ள வேண்டும் எனவும், ஐக்கிய தேசியக் கட்சி இது சம்பந்தமாக அரச தலைவர் ஆணைக்குழுவொன்றின் ஊடாக விசாரணை நடத்தவேண்டும் எனவும் தாங்கள் அரசதலைவர் மைத்திரிபால சிரிசேனவைக் கேட்டுக்கொண்டுள்ளதாகவும் கூறினார்.

இங்கு குறிப்பிட்டுள்ள சீன துறைமுக நிறுவனம் ஏற்கனவே அவர்களின் முன்னைய நிர்வாக ஊழல் காரணமாக பங்களதேஷ் மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளின் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது எனவும் கூறிய நாடாளுமன்ற உறுப்பினர் ராஜகருணா, கிராம மக்களுக்கு ராஜபக்ச தரப்பினர் துணிமணிகள், மணிக்கூடுகள் போன்றவற்றை இலவசமாக விநியோகித்தமையைத் தாம் நேரில் கண்டறிந்துள்ளதாகக் கூறியதுடன், கட்டாயம் இது சம்பந்தமாக விசாரணை நடத்தப்பட வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

**நிதிமோசடி இடம்பெற்றிருப்பின் மகிந்தவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு சவால் விடுக்கிறது இணையத்தள ஊடகவியலாளர் அமைப்பு**

இணையத்தள ஊடகவியலாளர்கள் தேசிய இயக்கம், இலங்கை அரசுக்கு ராஜபக்ச குடும்பத்துடன் இரகசிய உறவுகள் எதுவும் இல்லாத பட்சத்தில், சம்பந்தப்பட்ட இந்த நிதி மோசடி செய்த மகிந்த ராஜபக்சவுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கும்படி சவால் விடுவித்துள்ளது. அம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணம் தொடர்பான முன்னைய அரசின் கொடுக்கல் வாங்கல்களின்போது 7.6மில்லியன் அமெரிக்க டொலர் நிதிமோசடி இடம்பெற்றமை தொடர்பான குற்றச்சாட்டுக் குறித்து விசாரணை மேற்கொள்ள இதுவே சரியான தருணம் என்றும், அரசதலைவர் ஆணைக்குழு உடனடியாகவே இதற்னாக நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் இணையத்தள ஊடகவியலாளர் தேசிய இயக்கத்தின் தலைவர் சதுரங்க டி.அல்விஸ் வலியுறுத்தியுள்ளார். இதேவேளை ஐக்கிய அரபு இராச்சியத்திடமிருந்து 1.1மில்லியன் ரூபா நிதியை தேர்தல் பரப்புரைச் செயற்பாடுகளுக்காக மகிந்த ராஜபக்ச பெற்றுக்கொண்டமை பற்றி பேச்சுக்கள் அந்த நாட்டுடன் ஆரம்பிக்கப்படவிருந்ததாகவும் அமைச்சர் லக்சுமன் கிரியெல்ல தெரிவித்தார்.

மறுபுறத்தில் முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரல் மகிந்த ராஜபக்சவிற்கு எதிரான நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகையின் குற்றச்சாட்டுக்களை நிராகரித்துள்ளார். அத்துடன் இலங்கை சீனாவிடம் கடன்பட்டு அந்த நாட்டுக்கு அடிமையாகிவிட்டது போன்றதொரு அபிப்பிராயத்தை உருவாக்குவதே நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகையின் குறிக்கோள் எனவும் அஜித் நிவாட் கப்ரல் தெரிவித்தார்.

அத்தோடு குறித்த கட்டுரையின் ஆசிரியை தனது கட்டுரை தொடர்பாகத் தம்மை பேட்டி கண்டபோது தான் தெரிவித்த எந்த விபரங்களும் நியூயோர்க் பத்திரிகையில் வெளிவரவில்லை என்றும் தெரிவித்த முன்னாள் மத்திய வங்கி ஆளுநர், மகிந்த ராஜபக்ச அரசு, கடன்தொகையை 71வீதமாக குறைந்திருந்தது எனவும், இலங்கை சீனாவின் கடன் பிடிக்குள் மாட்டிக் கொண்டுள்ளது என கூறுவதை ஏற்றுக்கொள்ள இயலாது எனவும் குறிப்பிட்டார்.

**சீனாவைவிட அமெரிக்காவிடமிருந்தே இலங்கை அதிகளவு கடன் பெற்றுள்ளது**

இலங்கை சீனாவைவிட அமெரிக்காவிடம் இருந்துதான் அதிகமான நிதியைக் கடனாகப் பெற்றுக் கொண்டுள்ளது. ஆகவே இலங்கை அந்த நாடுகளுக்குத்தான் அடிமையாகுமே தவிர, சீனாவுக்கு அல்ல என அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவித்தார். ஐக்கிய தேசியக் கட்சி பிணைமுறி மோசடியூடாக பணம்பெற்று தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டமை நிரூபிக்கப்பட்டுள்ள நிலையில், ஏன் அதைப்பற்றி விசாரணை நடத்தாமல் இன்னும் மகிந்த ராஜபக்சவுக்கு எதிராக நிரூபிக்கப்படாத குற்றச்சாட்டினைப்பற்றி விசாரிக்க முயல்கிறீர்கள் என்ற கேள்வியையும் அஜித் எழுப்பியுள்ளார்.

மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் பெறப்பட்ட மொத்தக் கடன்தொகை டொலர் 26மில்லியன் எனவும் இதில் சீனாவிடமிருந்து பெறப்பட்டது. 4அல்லது 5பில்லியன் டொலர்கள் மட்டுமே என்று கூறினார். மகிந்த ராஜபக்ச துறைமுகத்தை எந்த நாட்டுக்கும் விற்கவோ அல்லது ஒப்பந்த அடிப்படையிலே கொடுக்கவோ இல்லை எனவும் அதனை தற்போதைய அரசே அப்படிச் செய்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

சீன தூதரகத்தின் அரசியல் பேச்சாளரான லுவே சொங் இதுபற்றிக் கூறுகையில் இது முழுமையான அரசியல் பின்னணி கொண்டதொன்று எனவும், இது முற்றிலும் பொய்யானதொரு அறிக்கை எனவும் கூறியுள்ளார். நியூயோர்க் பத்திரிகையின் மகிந்த ராஜபக்சவிற்கு எதிரான குற்றச்சாட்டுக்கு இலங்கையின் பலதரப்பட்டவர்களும் கண்டனம் தெரிவித்ததுடன் அவர்கள் போர்முடிவடைந்த பின்னர் இலங்கையை கட்டி எழுப்பும் பணியில் சீன ஆற்றும் பங்களிப்பை பாராட்டியுள்ளதாகவும் லுவே சொங் குறிப்பிட்டார்.

எப்படியான தடங்கல்கள் உருவாக்கப்பட்டாலும், இருநாட்டுத் தலைவர்களாலும் கைச்சாத்திடப்பட்டுள்ள ஒப்பந்தங்கள் சரியாகவே நடைமுறைப்படுத்தப்படும் என அவர் தெரிவித்தார்.

நியூயோர்க் பத்திரிக்கையில் கூறப்படும் குற்றச்சாட்டு பற்றி மகிந்த ராஜபக்ச கருத்துத் தெரிவிக்கையில், இது தன்னுடைய பெயருக்கு களங்கம் கற்பிக்கும் இலங்கை அரசின் செயல்பாடுகள் என்று கூறினார். விரைவில் ஒரு தேர்தல் வரவிருப்பதால் கடந்த 3வருடங்களாகவே கூட்டு அரசு ராஜபக்சக்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்துள்ளது எனவும், ஐக்கிய தேசிய அடுத்த தேர்தல் வரும்வரை இந்த நடவடிக்கைகளை தொடரப்போகிறது என்றும் கூறிய அவர், தான், குறிப்பிட்ட அந்த நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க உள்ள போதிலும், மக்கள் அந்த பத்திரிகை செய்தியை நம்பமாட்டார்கள் எனவும் கூறினார். இதுபோன்ற நடவடிக்கைகளின் ஊடாக இந்த அரசு மக்களை முட்டாள்களாக்க முனைகிறது எனவும், மக்கள் அவற்றைக் கண்டு ஏமாறமாட்டார்கள் எனவும், "ராஜபக்ச ஒரு ஊழல் வாதி" என்ற சுலோகம் இனிமேலும் மக்களிடையே எடுபடாது என்பதுடன், வரவிருக்கும் தேர்தல் இதனை ஐக்கிய தேசிய கட்சிக்கு எடுத்துக் காட்டும் என்றார் மகிந்தராஜபக்ச.

## ஆசிரியருக்கான கடிதம்

# தேவையறிந்து மேற்கொள்ளும் உதவி என்றும் பெறுமதி மிக்கது

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்குப் புலம்பெயர் உறவுகளால் 8.6மில்லியன் ரூபா பெறுமதியான இதய நோய் சிகிச்சைக் கருவிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளமை பாராட்டுக்கு உரியதொரு நற்பணியாகக் கொள்ளத் தக்கது. இதுவரை காலமும் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த இதயநோய் நோயாளிகள் தமது நோய்க்கான சிகிச்சை பெறும் பொருட்டு யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா ஆகிய இடங்களிலுள்ள வைத்தியசாலைகளுக்கு அனுப்பப்பட்டு வந்தனர். இதனால் அவர்கள் பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்ததுடன் தனிப்பட்ட வகையில் செலவீனமாகப் பெருந்தொகைப் பணத்தையும் செலவிடவேண்டி நேரிட்டது. தற்போது தமது மாவட்ட வைத்தியசாலையிலேயே தமது குறித்த நோய்க்கான சிகிச்சையைப் பெறத்தக்க வாய்ப்பை ஏற்படுத்தி வைத்த புலம்பெயர் அமைப்புக்களுக்கு கிளிநொச்சி மாவட்ட மக்கள் என்றும் நன்றியுடையவர்கள் ஆவர்.

வெறுமனே பகட்டுக்காகவும், தமது தனிப்பட்ட பிரபல்யத்தை வெளிக்காட்டிக் கொள்வதற்காகவும், எம்மவர்களில் பலர் இன்றும் கோவில் உற்சவங்களின்போதும், திருமண வைபவம் போன்ற பொது நிகழ்வுகளின்போதும் எதுவித அர்த்தமுமின்று அநியாயமாகப் பெருந்தொகை நிதியைச் செலவு செய்வதைக் காண, கேட்க முடிகிறது.

அந்த வகையில் வெளிநாடுகளில் பல்வேறு நெருக்கடிகளின் மத்தியிலும் வாழும் புலம்பெயர் எம்மவர்கள், இங்குள்ள தமது உறவுகளுக்கு உதவி அவர்களது சிரமங்களைப் போக்க வேண்டி மேற்குறிப்பிட்ட விதத்திலான பொதுநலன்சார் நற்பணிகளை முன்னெடுத்து வருவது குறித்து நாம் பெருமைப்பட்டாக வேண்டும்.

குறிப்பாக போரினால் பெரிய அளவில் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்டம் உட்பட்ட வன்னிப் பெருநிலப் பரப்பில் வாழும் எம்மவர்கள், புலம்பெயர் உறவுகள் தேவையறிந்து மேற்கொள்ளும் இத்தகைய நற்பணிகளுக்காக அந்தப்புலம்பெயர் அமைப்புக்களுக்கு என்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

*அ.அகிலன், கிளிநொச்சி*

## உன்னோட எதிர்கால லட்சியம் என்ன...?




எதிர்காலத்தில எவருக்கும் இந்த மாதிரி கைகட்டி நிண்டு பதில் சொல்லக் கூடாது... சேர்...



அஜித் நடிப்பில் தற்போது உருவாகி வரும் படம் ''விஸ்வாசம்'. சிவா இயக்கும் இந்தப்படத்தில் அஜித் ஜோடியாக நயன்தாரா நடித்து வருகிறார். படத்தின் இரண்டாவது கட்டபடப்பிடிப்பு ஆரம்பமான நிலையில், படத்தில் நயன்தாராவின் கதாபாத்திரம் என்னவென்பது குறித்த தகவல்கள் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

அதன்படி விஸ்வாசம் படத்தில் நயன்தாரா மருத்துவராக நடிப்பதாகத் தகவல் வெளியாகி இருக்கிறது.

விவேக், யோகிபாபு, ரோபோ சங்கர், தம்பி ராமையா, இமான் அண்ணாச்சி, ரமேஷ் திலக் உள்ளிட்ட பலரும் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். இந்த படத்தில் அஜித் வயதான மற்றும் இளமை தோற்றம் என இரண்டு கதாபாத்திரங்களில் நடிக்கிறார். முதற்கட்ட படப்பிடிப்பில் வெள்ளை முடி, தாடியுடனான தோற்றத்தில் நடித்த அஜித், விரைவில் இளமைத் தோற்றத்துக்கு மாறுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## விஸ்வாசம் படத்தில் மருத்துவராக நயன்தாரா

## சிரி

மனேஜர் : எங்க வங்கியில 'இன்ட்ரெஸ்ட்' இல்லாம கடன் கொடுக்கிறோம்.

வாடிக்கையாளர் : கொடுக்கிறத கொஞ்சம் சந்தோசமா கொடுக்கலாம்ல சார் . ஏன் 'இன்ட்ரெஸ்ட்' இல்லாம கொடுக்கிறீங்க?

மனேஜர் : ?????



மனைவி முட்டை பொரியல் தயாரித்துக் கொண்டிருந்தபோது சமையலறைக்குள் நுழைந்த கணவன் "கவனம் இன்னும் கொஞ்சம் எண்ணெய் ஊற்று" என்றான்.

கூடவே "என்ன சமையல் செய்றே?" அதை திருப்பு, இன்னும் கொஞ்சம் வறுவலாக வதக்கு. கடவுளே! இன்னும் கொஞ்சம் எண்ணெய் ஊற்று. அடி பிடிக்கிறது பார். ஜாக்கிரதை... ஜாக்கிரதை...

"இன்னும் கொஞ்சம் வதக்கு. உப்பு போட மறக்காதே. கொஞ்சமா உப்பு போடு" என்று அடிக்கடி குறுக்கிட்டுக் கொண்டே சொன்னான். பொறுமை இழந்த மனைவி கேட்டாள். " என்ன ஆச்சு உங்களுக்கு? ஒரு முட்டை பொரியலை கூடச் செய்ய எனக்குத் தெரியாதா?"

கணவன் பொறுமையாகச் சொன்னான். "இப்ப தெரிகிறதா? நான் கார் ஓட்டும்போது பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு அடிக்கடி குறுக்கிட்டு கதைத்துக் கொண்டிருப்பாயே... அப்ப எனக்கு எப்படி இருக்கும்...?

WhatsApp



மனைவியோடு சண்டை வந்தால் முதலில் செருப்பைத் தேடுங்கள். கிடைத்ததும் எடுத்துப் போட்டுக் கொண்டு வெளியே ஓடி விடுங்கள்!

**நண்பர் 1:** டேய் நாளைக்கு நான் சினிமாக்கு போறேன் நீயும் வாறியாடா
**நண்பர் 2:** முடிஞ்சா வாறேன்
**நண்பர் 1:** முடிஞ்சா பிறகு ஏண்டா வாற? படம் ஆரம்பிக்கும் போது வாடா..
**நண்பர் 2:** ?????

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** திட்டமிட்டு செயல்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் , இலாபம் சுமாராக இருக்கும். உறவினர் வருகையால் வீட்டுச் செலவு அதிகரிக்கும்.

**இடபம்:** அன்றாடப் பணிகளில் ஆர்வமுடன் செயற்படுவீர்கள். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூலதனம் செய்வீர்கள்.

**மிதுனம்:** மனதில் உற்சாகம் மிகுந்திருக்கும். உறவினர்களுக்கு இயன்ற அளவில் உதவுவீர்கள். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டி மறையும்.

**கடகம்:** மனதில் சந்தோஷம் குடியிருக்கும். குடும்பத்தினரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும்.

**சிங்கம்:** பேச்சு, செயலில் நிதானம் பின்பற்றவும். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். பெண்கள் வீட்டுச் செலவுக்கு திண்டாட நேரிடலாம். உடல்நலனில் கவனம் தேவை.

**கன்னி:** குடும்பத்தினர் பெருமைப்படும் விதத்தில் செயல்படுவீர்கள். நீண்டநாள் பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் இலாபம் பன்மடங்கு பெருகும்.

**துலாம்:** நண்பர்கள் வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். இலாபம் படிப்படியாக உயரும்.

**விருச்சிகம்:** செயல்களில் எதிர்பார்ப்பு இனிதே நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் பணவரவும் நன்மையும் அதிகரிக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

**தனுசு:** மனக்குழப்பம் உண்டாகி மறையும். தொடர்பில்லாத பணியில் ஈடுபட நேரலாம். பெற்றோரின் ஆலோசனையை ஏற்பது நல்லது.


**மகரம்:** லட்சிய மனதுடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்தியளிக்கும். நிலுவைப்பணம் வசூலாகும். மனைவி விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள்.

**கும்பம்:** உலக நடப்புகளை அறிவதில் ஆர்வம் காட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் பன்மடங்கு அதிகரிக்கும். புதிய வீடு, வாகனம் வாங்க திட்டமிடுவீர்கள்.

**மீனம்:** மாறுபட்ட கருத்து கொண்டவர்களிடம் விலகுவது நல்லது. பெற்றோரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். பெண்கள் கணவரின் அன்புக்குரியவராகத் திகழ்வர்.

ஆண்களுக்குக் கழிவறையும், பெண்களுக்குச் சமையலறையும் சிந்தனை ஊற்றுச் சுழி!

மகள்/மகன் இசையை ரசிக்கத் தொடங்கியதும்தான் லேட்டஸ்ட் பாடல்கள் எல்லாம் பெற்றோருக்கு அப்டேட் ஆகின்றன



காலைல அரக்கப் பறக்க பஸ் பிடிக்க ஓடிவர்றப்ப 'ஹாயா' மரத்து மேல உக்காந்து நம்மள எகத்தாளமா பாக்குற காக்காயப் பாத்தாலும் பொறாமையா வருது!

தூக்கத்திலிருந்து எழுவது சுலபம்தான்... படுக்கையில் இருந்து எழுவதை விட!

## சுடோக்கு

என் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 6 | 3 | 1 |
| | | | | 4 | | | | 8 |
| 3 | 1 | | | | 6 | | 4 | |
| 5 | | 2 | | | | | 9 | 4 |
| | | 3 | | | | 8 | | 2 |
| | 7 | | | | | 3 | | 6 |
| | | | 9 | | | | 2 | 7 |
| 9 | 2 | 4 | 6 | 7 | | | 8 | |
| 7 | 5 | 8 | | | | | 6 | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 4 | 8 | 3 | 9 | 6 | 7 | 1 | 5 |
| 6 | 3 | 7 | 5 | 4 | 1 | 2 | 8 | 9 |
| 1 | 9 | 5 | 2 | 7 | 8 | 6 | 3 | 4 |
| 3 | 2 | 1 | 6 | 8 | 5 | 4 | 9 | 7 |
| 4 | 5 | 9 | 1 | 2 | 7 | 3 | 6 | 8 |
| 7 | 8 | 6 | 4 | 3 | 9 | 5 | 2 | 1 |
| 9 | 7 | 2 | 8 | 6 | 4 | 1 | 5 | 3 |
| 5 | 6 | 4 | 9 | 1 | 3 | 8 | 7 | 2 |
| 8 | 1 | 3 | 7 | 5 | 2 | 9 | 4 | 6 |

நேற்றைய விடை

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரை களையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளை யும் கொண்டி ருக்கிறது. [உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கி றார்கள்]. இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் [மீண்டும் மீண்டும்] வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

# இணுவில் மஞ்சத்தடி

## ஸ்ரீ அருணகிரிநாத சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்

## புனராவர்த்தன நவகுண்டபக்ஷ அஷ்டபந்தன உத்தம மஹாயாக

# பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம்

**இன்று [05.07.2018] காலை 8.59 - 10.59 வரை**



### அருளாசிச் செய்தி



முருகன் அடியார்களுக்கு !

சைவசமயமும் தமிழ் மொழியும் தலை நிமிர்ந்து நிற்கும் இணுவில் பிரதேசத்தில் அருணகிரிநாத சுவாமியாக எழுந்தருளியிருந்து அருளாட்சி புரியும் முருகப்பெருமானுக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெறுவது மகிழ்ச்சியைத் தருகிறது. வேண்டுவார் வேண்டு வதை ஈயும் முத்தமிழால் வந்தாரை வாழ வைக்கும் முருகன் மஞ்சத்தடிப் பிரதேசத்தில் முருகனால் ஆளப்பெற்ற அருணகிரிநாதருடைய பெயரினால் இவ்வாலயம் அமைந்திருப்பது அடியவர் பெருமையை எடுத்தியம்புவதாகும்.

ஔவையாரின் தொண்டர பெருமை சொல்லியும்..." எனினும் முருகனின் அருள் நிறைந்த இணுவில் பதியில் பல சிறந்த செயல்கள் . கலைகள், இசை, இயல், நாடகம் போன்றவை தலைநிமிர்ந்து நிற்கும் இப்பிரதேசத்தில் முருகனுடைய ஆலயத்தில் நடைபெறும் கும்பாபிஷேகம் இணுவில் வாழும் மக்களின் சமய சிந்தனையை நிலை நிறுத்தி நிற்கின்றது. முருகனை வணங்கி ஆலய பரிபாலன சபையினருக்கும், மலராசிரிருக்கும் இறையாசி கிடைப்பதாக!

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்,
இரண்டாவது குருமஹாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

### அருளாசிச் செய்தி



குமரனின் குடமுழுக்கால் எங்கும் மங்களம் பொங்கட்டும்.

கலியுகவரத ஸ்கந்த வேற் பெருமானின் கும்பாபிஷேக நிகழ்வானது எமக்கும் கிராமத்திற்கும் ஓர் ஆன்மீக இனிய நிகழ்வாக அமைகின்றது. ஈழ வளநாட்டிலே முருக வழிபாடாக சக்திவேற் பெருமான் வழிபாடானது பல கிராமங்களில் இடம்பெற்று வருகின்றது. அந்த வகையிலே பெரிய சந்நியாசியார் அவர்களின் ஆன்ம முத்திப் புண்ணிய பூமியிலே எழுந்த மஞ்சத்தடியிலும் சக்திவேற் பெருமான் மூலவராக இருந்து அருளாட்சி புரிந்து வருகின்றார். இவ்வாலயத்திலே பல திருப்பணி வேலைகள் பற்பல காலங்களிலே முன்னோர்களால் இயற்றப்பட்டு காலக் கிரமங்களில் கும்பாபிஷேக விழாக்கள், மஹோற்சவ விழாக்கள் என்பன பல்லாண்டு காலமாக இடம்பெற்று வருகின்றது. முன்னைய பரிபாலன சபையினர் ஆலய வளர்ச்சியோடு, கிராம முன்னேற்றத்திலும் பெரும் பங்காற்றியிருந்தார்கள். அவர்களைத் தொடர்ந்து தற்போதைய பரிபாலன சபையும் பெரும் முயற்சியெடுத்து ஆலயத் திருப்பணியை மேற்கொண்டு கும்பாபிஷேக விழாவையும் இத்தனை சிறப்பாக நடாத்தி இருக்கிறார்கள். ஆலயத்தின்கிழக்கு வாயில், வடக்கு வாயில், தெற்கு வாயிலில் முதன்முறையாக இராஜகோபுரங்களும், மணிமண்டபம், ஸ்தம்ப மண்டபம், முன் மண்டப அலங்கார வேலைப்பாடுகள், ஆலய முகப்பு, கர்ணக்கூடு வேலைகள், பூமிதேவி, பெரிய சந்நியாசியார் சிலைகள், நூதன தட்சண மூர்த்தி, புதிய காண்டமணி எனப் பற்பல திருப்பணிகளை இப்பரிபாலன சபையினர் ஊர் மக்களினதும், புலம்பெயர் நாடுகளில் வசிக்கின்ற அடியவர்களினதும் பெரும் நிதி கொண்டு செய்திருக்கிறார்கள். அவர்களின் பணி போற்றுதற்குரியது. ஊர் இளைஞர்களும் இத்திருப்பணி மற்றும் கும்பாபிஷேக ஏற்பாடுகளிலும் பெருந் தொண்டாற்றினார்கள்.எமது கோயிலில் மஹோற்சவ விழா போன்று கந்தசஷ்டி விரத காலத்தில மஹா யாகமும், உற்சவமும் இடம்பெறுவது தனிச்சிறப்பாகும். இக் கும்பாபிஷேக விழாவில் ஈடுபட்ட அனைவருக்கும் எம்பெருமான் திருவருள் கிடைக்க பிரார்த்திப்பதோடு கும்பாபிஷேக விழா சிறக்கவும், கும்பாபிஷேக மலர் முருகன் புகழ் வீசவும் நல் ஆசிகளையும் தெரிவிக்கின்றேன்.

வாழ்க வளமுடன்.

மந்திரகிரியாகுரபி சிவஸ்ரீ குமார சரவணபவ குருக்கள் (J.P.), மகா கும்பாபிஷேக பிரதம குரு

### ஸ்தானிக குருவின் அருளாசிச் செய்தி



எமது ஆலயத்திலே மஹா கும்பாபிஷேக விழா நடைபெறுவது மனதிற்கு மிகவும் மகிழ்வைத் தருகின்றது. நான் பூஜையிலே இணைந்து இற்றைக்கு இருபத்தைந்து வருடங்களாக ஆலய வளர்ச்சியைக் கண்டு பெருமை கொண்டிருக்கின் றேன். இம்முறை முதல் பெரும் திருப்பணியாக மூன்று கோபுரங்கள் அமைத்திருக்கிறார்கள். அத்தோடு ஆலயம் முழுவதும் திருப்பொலிவு பெறும் வண்ணம் பாரிய திருப்பணிகளைச் செய்திருக்கிறார்கள். அத்தோடு பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகத்தையும் எமது ஆலோசனைக்கு அமைவாக மிகச் சிறப்பாக நடாத்தியிருக்கிறார்கள். பரிபாலன சபையோடு ஊர் மக்களும் குறிப்பாக இளந்தொண்டர்கள் இரவு பகல் பாராது சரியைத் தொண்டுகள் ஆற்றி முருகனின் திருத்தொண்டில் ஈடுபட்டதும் எமக்கு மிகவும் மகிழ்வைத் தருகின்றது. மஞ்சத்தடி முருகனின் ஆலய வரலாற்றுப் பதிவாக வெளிவரும் இக்கும்பாபிஷேக மலர் வெளியீடும் சிறப்புக்குரியது. கலியுகத்தில் கண்கண்ட தெய்வம் ஸ்ரீ அருணகிரிநாத சிவசுப்பிரமணியப் பெருமான் திருவருள் எல்லோருக்கும் கிடைக்கப் பிரார்த்தித்து எனது வாழ்த்துக்களையும் தெரிவித்து அமைகின்றேன்.

பிரம்மஸ்ரீ ம. கிருஸ்ணமூர்த்தி சர்மா
ஆலய சிவாச்சாரியார்.

### அருளாசிச் செய்தி



"கோபுர தரிசனம், கோடி புண்ணியம்" என்ற முதுமொழிக்கிணங்க பழமை வாய்ந்த இணுவில் மஞ்சத்தடி ஸ்ரீ அருணகிரிநாத சுப்பிரமணியர் சுவாமி கோவிலில் மூன்று கோபுரங்கள் அமைக்கப்பட்டு ஆலயம் புனரமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற உள்ளமை சிறப்பம்சமாகும். ஆலயங்களில் சித்தர்கள், ஞானிகள் வாழ்ந்த, அவர்கள் பாதம்பட்ட, அவர்களது சமாதியமைந்த இடங்கள் சிறப்பு வாய்ந்தவையாகவும் கருதப்படுகின்றன. அந்த வகையில் பெரிய சன்னியாசிரியார் எனும் மகான் வாழ்ந்து அவரது சமாதியமையப் பெற்ற இத்தலம் மிகவும் இறையருள் மிகுந்ததாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இத்தகைய சிறப்பு வாய்ந்த ஆலயத்தில் இன்று கும்பாபிஷேகம் நடைபெறுவது என்பது, பிரபஞ்ச சக்தியை கும்பம், அக்னி காரியம், வேத பாராயணம் முதலியவற்றின் மூலம் மூர்த்தியில் எழுந்தருளச் செய்யும் கிரியையாகும். இவ்வாறு சக்தியூட்டப் பெற்ற மூர்த்தியை கும்பாபிஷேக தினத்தன்று நேராக தரிசிக்காமல் கண்ணாடியில் மூர்த்தியின் விம்பத்தை தரிசிப்பது நாம் என்றும் இறைவனை அதன் விம்பங்களிலேயே தரிசிக்கின்றோம் என்பதை எடுத்துக் காட்டவதாகும்.

இவ்வாறான விழாக்களைத் தரிசிக்கும் அடியார்கள், இக்கிரியைகளின் மூலத்தத்துவத்தையறிந்து வழிபாடாற்றுவது எங்கும் நிறைந்த பரம்பொருளை வேறுபாடில்லாமல் சகல உயிர்களிலும் காண்பது ஆகிய பண்புகளை எம்முள் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

மேலும் இக்கும்பாபிஷேகம் நிறைவாக நிறைவேறவும் அது குறித்து வெளிவரவுள்ள மலர் சிறப்பாக வெளிவரவும், அன்றைய தினம் வெளியிடப்படவுள்ள முருகன் பாமாலை இறுவட்டு அனைத்து மக்களுக்கும், பக்தியைப் பெருக்க உதவுவதாகவும் அமைய ஆசி வேண்டி எல்லாம் வல்ல சிவசுப்பிரமணியப் பெருமானையும் பூஜ்ய குருதேவரையும் பிரார்த்திக்கின்றோம்.

இறை பணியில் ,
ஸ்வாமி சிதாகாசானந்தா, சின்மயா மிஷன், யாழ்ப்பாணம்.

### அருளாசிச் செய்தி



இணுவில் மஞ்சத்தடி ஸ்ரீ அருணகிரிநாத சிவசுப்பிமணியர் சுவாமி கோயில் கும்பாபிஷேக மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். இணுவில்பதி கலைகளுக்கும் ஆலயங்களுக்கும் பெயர் பெற்ற இடம். இங்கு இறைவனை துதிக்கும் நிறைவான கலைஞர்கள் வாழும் பகுதியென குறிப்பிடலாம். மஞ்சத்தடி அருணகிரிநாத சிவசுப்பிரமணியர் ஆலயம் மிகுந்த அருள் வெளிப்பாடு உடைய போற்றுதற்குரிய ஆலயம் ஆகும்.

இப்பதியிலே அருளாளர் வாழ்ந்து வழிகாட்டியதுடன் அவருடைய சமாதி பிரதிஷ்டை செய்யப்பட்டு வழிபாடு செய்யப்படும் ஆலயமாகும். இவ்விடத்தில் ஒரு கருத்தை பதிவிட விரும்புகின்றேன். அருளாளர்களின் சமாதி இருக்கும் ஆலயங்களில் அருள் வெளிப்பாடு அளப்பரியது என்பதனை இந்துக்கள் எல்லோரும் ஏற்றுக்கொள்வர்.

இவ் ஆலயத்தில் வாழ்ந்த சன்னியாசிரியரின் நெறிப்படுத்தலில் உலகப் பெருமஞ்சம் உருவாக்கப்பட்டமையும் சிறப்புக்குரியது. இப் புனிதமான ஆலயத்தைப் புனரமைத்து மூன்று வாயில்களுடன் கூடிய இராஜ கோபுரங்கள் அமைக்கப்பெற்று நடைபெறும் மகா கும்பாபிஷேகம் எல்லா ஜீவராசிகளினதும் இறை அருள் வெளிப்பாட்டிற்கும் அருமருந்தாக அமைய வேண்டும் என இறைவன் திருவருளை பிரார்த்தித்து, மலரும் கும்பாபிஷேக சிறப்பு ம்லர் மலர்ந்து அடியவர்களுக்கு அருள் சுரக்க வழிகாட்ட வேண்டும் என வாழ்த்தி கும்பாபிஷேகம் சிறக்க என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.

நா. வேதநாயகன்
அரசாங்க அதிபர், மாவட்ட செயலாளர்
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.

### அருளாசிச் செய்தி



இணுவில் அருணகிரிநாத சுவாமிகள் திருக்கோவில் மகா கும்பாபிஷேகம் குறித்து வாழ்த்துவதில் மிகவும் ஆனந்தம் அடைகின்றேன். மஞ்சத்தடி என்று அழைக்கப்படுகின்ற மகிமைமிக்க மண்ணில் உலகப் பெருமஞ்சத்தை உருவாக்கிய உத்தம ஞானி. மகான் பெரிய சந்நியாசிரியரின் சமாதியின் மேல் தோன்றிய இத்திருக்கோவில் பெருமையை அறியாதவர் களில்லை. இத்திருக்கோவில் திருப்பணியை இளைய சமூகம் பொறுப்பேற்று நன்முறையில் நிறைவேற்றியுள்ளது. பல கோடி ரூபா செலவில் மூன்று திசையும் கோபுர அமைப்புடனும், மணிமண்டப வாயிலோடும் அற்புதமாகத் திருப்பணி நிறைவேற்றப்பட்டுள்ளது. முருகப்பெருமான் திருவருளால் புதுப்பொலிவு பெற்றுள்ள மஞ்சத்தடியான் திருவருளை அனைவரும் வாழ்த்தக் கடமைப்பட்டுள்ளோம். இத்திருப்பணிக்காக உழைத்த ஆலய நிர்வாக சபையினருக்கும், திருப்பணிக்கு உதவிய அடியவர்களுக்கும் எனது இதயபூர்வமான ஆசிகளைச் சமர்ப்பித்து. மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

"வேலுண்டு வினையில்லை"

கலாநிதி ஆறு. திருமுருகன், தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை.
தலைவர், சிவபூமி அறக்கட்டளை

### மகா கும்பாபிஷேகம் மலர் சிறக்க வாழ்த்துச் செய்தி



இணுவில் பதியிலே பழம் பெருமை வாய்ந்த பல்வேறு பிரமாண்டமான ஆலயங்களும், கட்டிடக்கலைகளையும் தன்னகத்தே கொண்டு அழகுக்கலை ததும்பப் பரிணமிக்கின்றது. ஒருவன் தன்னையறிந்து இன்பமுறும் தந்திரத்தை அறிய வழிகாட்டுபவர் இறைவனே. விளக்கு எரிதற்குத் தேவையான எண்ணெய், திரி அனைத்தும் இருப்பினும் தீபம் தானாகவே தோன்றி எரியமாட்டாதன்றோ. தீக்குச்சைத் தட்டி, விளக்கை ஏற்ற ஒரு கர்த்தா வேண்டும். அது போலவே தாகத்தை மிகுவித்துச் சாதனைகளைப் பயிற்றுவித்து ஞான தீபத்தைப் பிரகாசிக்கச் செய்வதற்கு இறைவனின் வழிகாட்டுதல் இன்றியமையாதது அவ்வாறான ஒரு வழிகாட்டுதலை இறையுணர்வோடு வழிகாட்டி சமாதியடைந்த பெரிய சந்நியாசிரியரின் சமாதியில் அமைந்த இவ்வரலாற்றுப் பிரசித்தி பெற்ற இவ்வாலயம் அடியார்களினதும், இளைஞர்களினதும் முழுமையான பங்களிப்பும் ஒத்திசைவுடனும் இன்று மூன்று இராஜ கோபுரங்களுடன் புதுப்பொலிவு பெற்று மக்களின் மனங்களை பண்படும் அளவுக்கு இறை பக்தியை பிரகாசிக்க செய்யும் வகையில் புதுப்பொலிவு பெற்றுள்ளது போற்றுதற்குரியது.

மனிதன் பந்த பாசத்துட் சிறைப்பட்டுத் திண்டாடுகிறான். அவன் அப்படியே இருந்து விடுவதில்லை. துன்பத்துள் உழலும் போது தெய்வ சிந்தனை உண்டாகின்றது. இறைவனிடம் அடைக்கலம் புகுந்து விடுதலை வேண்டுகிறான். வினைப்பயன் தொலைய ஞானம், வைராக்கியம் என்ற இறக்கைகள் தோன்றுகின்றன. தன்னை பந்தப்படுத்திய வாழ்வை விடுத்து தெய்வீக வாழ்வு வாழ்வதற்கு இறைவனின் திருத்தலங்களில் தொண்டுப் பணிகளை நிறைவேற்றி சுதந்திர புருஷனாய் ஆனந்தமாய் வாழ்வதற்கு ஆலயங்களை புனரமைப்பு செய்தல் புதிய இராஜ கோபுரங்கள் அமைத்தல்.மணி மண்டபங்கள் அமைத்தல் என்கின்ற தொண்டுகளைப் புரிந்து பேரின்ப வாழ்வுதனை அடையும் பொருட்டு அடியவர்களும், நிர்வாக சபையும் இணைந்து இறைஞான குழாத்துடன் பாரியதொரு திருப்பணியை இவ்வாலயத்தில் நிறைவேற்றி மகா கும்பாபிஷேகத்தை நிகழ்த்துவதனை இட்டு ஒத்துழைத்த அனைத்து உள்ளங்களுக்கும் இறையருள் என்றும் கிடைக்க வேண்டுமென முருகப்பெருமானை வேண்டுவதுடன் திருப்பணிகள் மேலும் சிறந்தோங்க வேண்டி கும்பாபிஷேக மலர் சிறப்புறவும் முருகப்பெருமானின் பாதங்களைப் பணிந்து வாழ்த்துகின்றேன். வாழி!.

திரு. தியாகராஜா சந்திரகாசன்
செயலாளர் ஆலய பரிபாலன சபை. மஞ்சத்தடி இணுவில்

### ஆசிச் செய்தி

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் சிவபூமியாகிய ஈழநாட்டிலே வடபால் யாழ்ப் பாணத்திலே இன்றும் சைவப் பாரம்பரி யத்தை தம் வாழ்வியலோடு பின்னிப்பிணைந்து ஒழுகும் மக்கள் வாழும் இணுவில் கிராமத்திலே எம் பெருமான் அமர்ந்து அருள்பாலித்துக் கொண்டுள்ளார்.

கடந்த மூன்று வருடங்களாக ஆலய புனருத்தாரண வேலைகள் கோபுர நிர்மாண வேலைகள் இடம்பெற்று இவ் ஆலயம் புதுப்பொலிவுடன் காட்சிதருவதை காணக்கிடைக்கையில் எமது மனங்களில் பக்தி தானாவே தோற்றம்பெறுவதோடு மனதில் மகிழ்ச்சிவெள்ளம் ஊற்றெடுத்து பாய்கின்றது.

உலகப் பெருமஞ்சத்தின் புகழ் உலகறிந்தமை போன்று இவ் ஆலயத்தின் புகழும் உலகறிந்ததொன்று. இவ் உலகு உள்ளவரை இவ் ஆலயத்தின் புகழ் நிலைத்திருக்கும் என்பது கண்கூடு. இவ் ஆலய புனருத்தாரண வேலைகள் கோபுர நிர்மாணங்களிற்கு நன்கொடைகளை வாரி வழங்கிய அடியவர்களிற்கும், அறங்காவலர் சபையினருக்கும் எனது நன்றிகளை தெரிவிப்பதோடு விழா சிறப்பாக நடைபெறுவதற்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"

B.K.கபிலன், கிராம அலுவலர்,
கோண்டாவில் வடமேற்கு, நல்லூர்.

### குடமுழுக்கு விழாக் காண வாரீர்.



இலங்கையின் சிகரமாக விளங்கும் யாழ்ப்பாணத்தின் இணுவில் மஞ்சத்தடி கிராமத்தில அமைந்துள்ள ஸ்ரீ அருணகிரிநாத சிவசுப்பிரமணியத் திருக்கோயிலில் அமர்ந்திருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் முருகப்பெருமானுக்கும் வள்ளிதெய்வானைக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் பெருஞ்சாந்தி விழாவாகிய குடமுழுக்கு நடைபெறுவதையிட்டு இக் கிராமமே விழாக்கோலம் பூண்டுள்ளது. இவ் வேளையில் வெளிவரும் இச்சிறப்புமலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைவதுடன் இப் பெருஞ்சாந்திப் பெருவிழா எம் கிராமத்தில் காணக்கிடைப்பதை பெரும் பேறாகக் கருதுகின்றேன். இப் புண்ணிய கைங்காரியத்தில் பங்குகொண்ட திருப்பணிச் சபையினருக்கும் இவ்வூர்வாழ் மக்களுக்கும் வெளிநாடுவாழ் இவ்வூர் மக்களுக்கும் தொண்டினில் ஈடுபட்ட இளைஞர்களுக்கும் பெரியோர்களுக்கும் எல்லாம் வல்ல எம்பெருமானின் அருட்கடாட்சமும் நாட்டுமக்கள் அனைவருக்கும் சுபீட்சமான வாழ்வும் கிடைக்கவேண்டும் எனவும் எம்பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.

கணேசு முருகையா
ஓய்வுநிலை கிராம அலுவலர்.

**இணுவில் மஞ்சத்தடி** **ஆலய பரிபாலன சபை**

# யாழ். திருநெல்வேலியில் முற்றிலும் நவீனமயப்படுத்தப்பட்ட யாழ் வைத்தியசாலை

**24 மணிநேர சேவை**

## தற்போது அதிநவீன வசதிகளுடன் கூடிய சத்திர சிகிச்சைக் கூடம்

✓ **General Surgeries**

- -**Vericosevein** (வரிகோஸ் சத்திரசிகிச்சை)
- -**Hernina** (ஹேணியா சிகிச்சை)
- -**Appendectomy** (அப்பண்டிஸ் சத்திரசிகிச்சை)
- -**Thyroidectomy** (தைரொட்டு சுரபி அகற்றல்)
- -**Parotidectomy** (உமிழ் நீர் சுரப்பி அகற்றல்)
- -**Anal Fissure**
- -**Anal Fistula**
- -**Haemorrhoids (Piles) Surgery**

**Laser Surgeries**

- -**Laser Vericose Surgery** (வரிகோஸ் சத்திரசிகிச்சை)

**Eye Laser Treatment**

நீரிழிவு நோயாளர்களுக்கான லேசர் சிகிச்சை

✓ **Laproscopy Surgery** (வீடியோ மூலம் சத்திரசிகிச்சை)

- -**Hernia** (ஹேணியா)
- -**Appendectomy** (அப்பன்டிஸ் சத்திரசிகிச்சை)
- -**Hysterectomy** (கருப்பை அகற்றல்)
- -**Cholecystectomy** (பித்தப்பை அகற்றல்)
- -**Lap & Dye Examination**

✓ **E.N.T சத்திர சிகிச்சை**

- -**Nasal** (மூக்கு)
- -**Septoplasfy** (மூக்கு சீராக்கள்)
- -**Ear.** (காது)
- -**Myringoplasy** (காது சௌவு துவாரம் அடைத்தல்)
- -**Mastoidectomy**
- -**Thyroidectomy** (தைரொட்டு சுரபி அகற்றல்)
- -**Parotidectomy** (உமிழ் நீர் சுரப்பி அகற்றல்)

✓ **Endocopy** (அதிநவீன என்டர்ஸ்கொப்பி)

அக்ரகாரா, அரச/ ETF தனியார் நிறுவனங்களின் காப்புறுதி அங்கீகாரம் பெற்றது.

- வெளிநோயாளர் பிரிவு O.P.D
- மருந்தகம் Pharmacy
- ஆய்வுக்கூட சேவை Laboratory



மேலே குறிக்கப்பட்ட கட்டணங்கள் அனைத்தும் வைத்திய சாலை, வைத்திய நிபுணர், ஒரு நாள் இணைந்த குளியளறையுடனான தங்கும் விடுதி அனைத்தம் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(நிபந்தனைக்குட்பட்டது)

315, பலாலி வீதி, பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 021 222 3533, 021 222 1011, 0777 781 005

மேலதிக தகவல்களுக்கு: 077 310 7685


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னை மடியில் 02 . 07 . 1966



ஆண்டவன் அடியில் 05 . 06 . 2018

### திருமதி யோகானந்தசிவம் செல்வநாயகம்

கடந்த 05.06.2018 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவியின் மறைவுச் செய்தி அறிந்து ஓடோடிவந்து உதவிகள் ஒத்தாசைகள் புரிந்த அஞ்சலி ஆறுதல் தெரிவித்த மற்றும் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதல்களை தெரிவித் துக்கொள்வதுடன், இன்று (05.07.2018) வியாழக்கிழமை காலை 7.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெறும் அந்தியேட்டிக்கிரியைகளிலும் நாளை மறுதினம் (07.07.2018) சனிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் ஆவரங்கால் சிவசக்தி மணி மண்டபத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை மற்றும் மதிய போசன நிகழ் விலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் குடும்பத்தினர் சகிதம் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

**குடும்பத்தினர்,**
**கே.செல்வநாயகம்**
**(செல்வா ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ், ஆவரங்கால்)**

**சந்தை வீதி,**
**ஆவரங்கால், புத்தூர்.**

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை செல்லத்துரை



தோற்றம் 12.03.1925

மறைவு 03.07.2018

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மற்றும் அன்னச்சத்திர ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை செல்லத்துரை 03.07.2018 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை ஆச்சிமுத்து தம்பதியரின் சிரேஸ்டபுத்திரனும் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து சின்னாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற தெய்வானைப் பிள்ளையின் அன்புக்கணவரும் தேவராணி (ஓய்வு நிலை ஆசிரியை), பாரதிதாசன், காலஞ்சன்ெற சண்முகதாசன் (நிறுவுனர், அல்டிஎலக்ரோனிக்ஸ், யாழ்ப்பாணம்) மற்றும் கோகிலராணி, மோகனதாசன், கண்ணதாசன், முருகதாசன், ஐங்கரதாசன், யமுனாராணி ஆகியோரின் அன்புத்தந்தையும் காலஞ்சென்றவர்களான மனோன் மணி, பகவதி, கணேஷ், குமாரசாமி, பரிபூரணம் மற்றும் தங்கம்மா ஆகியோரின் அன்புச்சகோதரரும் , காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் சர்வேஸ்வரி, காலஞ்சென்றவர்களான சொர்ணகாந்தி, கந்தசாமி, சிவஞானம், காலஞ்சென்றவர்களான நாகம்மா, நாகரத்தினம் மற்றும் அன்னம்மா காலஞ்சென்ற சிவபாக்கியம் மற்றும் அருளானந்தம், தேவராசா ஆகியோரின் மைத்துனரும் தியாகராசா, வரதராணி, ஜெயரஞ்சினி, பேரின்பநாதன், வாசுகி, அமரலக்ஸ்மி, கிருசாந்தி, ரஜனி, குணேந்திரன் ஆகியோரின் அன்பு மாமனும் ராகுலன், நளாயினி, சுகந்தன், பிரசாந்தன், மயூரதன், திவ்வியா, திவாஸ்கர், நிரோஸ், சோபிகா, நிஷா, கஜேந்திரன், மயூரி, ஜனனி, தேனுஷா, நிவேதிதா, நஜீஸ்கன், அபிஷேக், மிதுஷேக், தனுஷேக், வினோத், வினோபா, வினோஜன், அமேசா, நவீன், பிரவீன் ஆகியோரின் அன்புப்பேரனும் பவந்தி, அரவின், லியானா, அபிலாஸ், ராகித்தியன், தரணிகா ஆகியோரின் அன்புப்பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.07.2018) வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**51/3, அன்னச்சத்திர ஒழுங்கை,**
**கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**
**077 103 2484, 076 194 8756**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# தேசத்தின் புயலான நெருப்பு மனிதர்கள்

தமிழ்நம்பி

**"மற்றவர்கள் இன்புற்றிருக்க வேண்டும் என்பதற்காகத் தன்னை இல்லா தொழிக்கத் துணிவது தெய்வீகத் துறவறம். அந்தத் தெய்வீகப் பிறவிகள்தான் கரும்புலிகள்."**

***தேசியத் தலைவர்***

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றின் ஞாபகப் பக்கங்களுள், தமிழ் மக்கள் மறந்திருக்க முடியாத சாவுக்கு விலங்கிட்ட மனிதர்களின் நினைவுகளை தந்த மாதம் ஜூலை.பல சம்பவங்கள் நினைவாக நீண்டு விரிக்கின்ற போதும் 1987 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 05 ஆம் திகதி, ஒப்பற்ற திருநாளாய் விளங்கி, தேசப் புயல்களின் வீர வரலாற்றை கண்ணீர் பூக்களால் சுகந்தம் செய்கின்றது. கரும்புலி கப்டன் மில்லரின் உயிர் தியாகம் தனை விடுதலையின் சொரூபமாக்கி உரிமை வேட்கையின் தரிசனங்களை தாய் தேசமெங்கும் சூட்டுகின்றன.

**இராணுவ ஆக்கிரமிப்பு**

1987 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தமிழர் தேசமெங்கும் சிங்கள இராணுவத்தின் பிரசன்னம் அதிகமாக இருந்தது. கொடுங்கோல் ஆட்சியின் வழி எங்கும் தீராத அராஜகங்கள் நிகழ்ந்தன. வடமராட்சி நெல்லியடி மகாவித்தியாலத்திலும் சிங்களப்படையினர் குவிக்கப்பட்டிருந்தனர். வடமராட்சியில் மேற்கொள்ளப்பட்ட 'லிபரேசன் ஒப்பிரேசன்" இராணுவ நடவடிக்கை மூலம் தாம் பெற்றுக்கொண்ட வெற்றியின் குதூகலிப்பில் சிங்களம் திழைத்திருந்தது. வடமராட்சி வாழ் மக்கள் அகதிகளாக வெளியேறியிருந்தனர். இதற்குச் சமாந்தரமாக சிங்களத் தலைமைகள் 2009 களில் பெற்ற களிப்பினை போன்ற தான ஓர் வெற்றி முழக்கத்தை கொழும்பிலும் இனவாத வெறித்தனத்தின் சாட்டுதலாய் கொண்டாடி மகிழ்ந்திருந்தனர்.

**நெல்லியடிப் படைத்தளம் மீதான தாக்குதல்**

இந்த சந்தர்ப்பத்திலே நெல்லியடிப் படைத்தளத்தை அழித்து இந்த ஈனப் பிறவிகளின் இறுமாப்பை தகர்த்தெறிய வேண்டும், எமது உறுதியை நிலைநாட்ட வேண்டும் என்ற தீர்மானத்தை தேசியத்தலைவர் கொண்டிருந்தார்.அந்த விருப்பம் தேசப்புயலாக மாற்றம் கொண்டது. தியாகம் எனும் நற்பணி செயலுருவம் பெற்றது.

நெல்லிய்டிப் படைத்தளம் மீதான தாக்குதல் குறித்த அனைத்து தயார்படுத்தல்களும் நிறைவுறுகின்றன.

தேசப்புயலாக, விடுதலையின் வீரனாக கப்டன்மில்லர் தேர்வு செய்யப்பட்டான். ஜூலை மாதம் 5ஆம் திகதி இரவு 7.00மணி 3 நிமிடங்கள், கந்தக மேனியனாய் வெடி மருந்துகளை சுமந்தபடி கப்டன் மில்லர் பயணித்த வாகனம் இராணுவ முகாமிற்குள் பாய்ந்தது. தியாகம் எனும் சுதேசம் எங்கும் வீசியது. விடியலின் சுகந்தம் தனை தேசத்திடம் பரிசளித்தது. நூற்றுக்கணக்கான இராணுவத்தினரை அழித்தொழித்து பலநூறு படையினரை விழுப்புண் அடையச் செய்து ஆணவத்தின் மாயையை தீயிட்டுக்கொளுத்தியது. விடுதலையின் பயணத்தில் புதிய வரலாற்றுப் பக்கங்களை உருவகித்தது.

இப்போதும் தியாகத்தின் சுவாசமாய் அந்த நினைவுகள் எங்கும் பரந்து கிடக்கிறது. நல் மனிதங்களிடை சிந்தனையின் ஒளிர்வாய் சுடர்விடுகின்றது. விடுதலையின் எண்ணம் தனை நித்திய சாதகம் செய்கிறது.

ஆம், போரியல் வரலாற்றிலே இவ்வாறான தாக்குதல் ஒன்று முதன் முதலாக நிகழ்த்தப்பட்டது இதுவே முதல் தடவை. மில்லர் கரும்புலித் தாக்குதல் நடத்தி இன்றுடன் 31 ஆண்டுகள் கடந்துவிடுகின்றது. விடுதலை உணர்வோடு நடந்துகொள்ளப் பணிக்கிறது. ஞாபகங்களிடை மீளாத வசந்தங்களை வசந்தனாக, அந்த நாமம் சூடிக் கொண்ட புனிதமாக (தி)யாகம் செய்கிறது.

**வாழ்கைப் பயணம்**

யாழ்ப்பாணம் கரவெட்டி பிரதேசத்தை சேர்ந்தவன் கப்டன் மில்லர். இவனுடைய இயற்பெயர் வல்லிபுரம் வசந்தன். தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் ஒரு முக்கிய உறுப்பினராக விளங்கினான். 1966 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தாய் மண்ணில் தவழ்ந்த இவன் விடுதலை இலட்சியத்தில் முதல் கரும்புலியாக மாற்றங் கொண்டான். விடுதலைப் போராட்ட வரலாற்றின் திருப்புமுனையாக அமைந்து விட்டான்.

மில்லர் குடும்பத்திலே இரண்டாவது மகன். துடியாட்டமானவன். வாகனங்களை ஓட்டுவதில் திறமையானவன். தகப்பனார் வல்லிபுரம் இலங்கை வங்கியின் ஊழியராக கடமை புரிந்தவர்.

**விடுதலைப் பயணம்**

தேசத்தின் மீது கொண்ட பற்றுறுதியால் விடுதலைப் பயணத்திலே தன்னையும் ஓர் அங்கத்தவனாக இணைத்துக் கொண்டான் மில்லர். குறிப்பாக தமிழ் மக்களின் மூலதனமான கல்வியின் திருச் சொரூபமான, அறிவூட்டத்தின் பொக்கிசமான யாழ்ப்பாணம் பொது நூலகத்தின் மீதான தீயிடல் சம்பவம், அதே போன்று தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட இனக் கலவரம் என்பன அவனை முற்றாக தமிழ் மக்களின் விடுதலையின் பால் ஈர்த்து விட்டது. அதற்கான இலட்சிய உறுதி கொண்ட திடமான பாதையிலே அங்கத்துவனாக சேர்ப்பித்தது.

தாய் மண்மீதும் தன் மக்கள் மீதும் கொண்ட அளவற்ற பாசம் என்பதும், தன் இன விடுதலையின் மீதான நேசம் என்பதும் முகம் மறைத்து முகவரி மறைத்து எத்தனையோ பெரும் தாக்குதல்களை நடத்தி சாதனை படைக்கவும், தமிழன் என்ற வீரத்தின் நிமிர்வினை உலக நாடுகளின் மத்தியிலே அற்புதம் செய்திடவும் ஆரம்பமாக அமைந்துவிட்டது இவனது தற்கொடையெனும் தியாகம். இதனை தமிழராய் நினைவுகொள்ளும் இந்த நன்நாள் புனிதமானது.

**கரும்புலிகளின் தியாகம்**

அந்தவகையிலே விடுதலைப் போராட்டத்தின் ஒவ்வொரு திருப்புமுனைகளிலும் கரும்புலிகளின் தியாகம் உயர்ந்து நிற்கின்றது. இவர்களின் தியாகப் பாதைகள் என்பது 2000 ஆம் ஆண்டு கட்டுநாயக்கா வான்படைத்தளம் மீதான தாக்குதலாக, தென்பகுதியில் பல நிழற் கரும்புலிப் பாய்ச்சலாக, 2007 ஆம் ஆண்டு அனுராதபுரம் வான்படைத்தளம் மீது எல்லாளன் வடிவமாக, 2009 ஆம் ஆண்டு வானோடி கரும்புலிகளின் பறத்தலாக சிறந்திருக்கிறது. தமிழீழ வரலாற்றிலே தமிழனின் வீரத்தை உரிமையின் மீதான பற்றுதலாக சாட்டுதல் செய்து நிற்கின்றன.

**விடியலின் பாதைகளைச் சீர் செய்ய முன்னகர்வோம்**

ஆக, தமிழர் விடுதலைப் போராட்டத்தின் தடைநீக்கிகளாக, உயிராயுதமாக, இலட்சியத்தின் இரும்பு மனிதர்களாக உடலோடு கந்தகம் சுமந்து எதிரியின் ஆணவத்தை தகர்த்தழித்த இந்த மனிதர்களை மறந்துவிட முடியாது. இவர்கள் புரிந்த சாதனைகளை நினைந்து அற்புதம் காண வேண்டும். அழியாத சுடர்கள் எங்கும் ஒளிர்கின்றன. திருமுக தரிசனம் தருகின்றன. நினைவு கூர்ந்து விடியலின் பாதைகளை சீர் செய்ய முன்னகர்வோம். இவர்களின் வீரமும், தியாகமும் ஒவ்வோர் ஈழத் தமிழர்களிடத்தேயும் உள் நின்று ஒளிரும் சக்தியாக, விடுதலையின் ஊன்றுகோலாக, இயங்கு நிலைதரும் பெரும் விடுதலைச் சுவாசமாக உயிர்தரும் என்பதில் ஐயமில்லை.

ராசி அதிர்ஷ்டம்
திகதி 04.07.2018 | வெற்றி வாரம் 2324 | வர்ணம் பச்சை
துலாம்
வெற்றி இலக்கங்கள் 13 23 61 62
வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 57, 22, 264/=
2018.07.06ம் திகதி வெள்ளிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 3052 | திகதி: 2018.07.04 | புதன்கிழமை | ஊதா
வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 08 10 24 60 U
போனஸ் இலக்கம்: 54
அடுத்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்: 31,173,205/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 301
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2018.07.04
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 79,729,045/-
வெற்றி இலக்கங்கள் 03 23 47 51
ஆங்கில எழுத்து S
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## மரண அறிவித்தல்



தோற்றம் 23 . 05 . 1959
மறைவு 02 . 07 . 2018

**கணேசன் இராஜபூபதி**

நாவற்குழி கிழக்கு, தச்சன் தோப்பை பிறப்பிடமாகவும் கைதடி தெற்கு, கைதடியை வசிப்பிடமாகவும் கொண்ட கணேசன் இராஜபூபதி 02.07.2018 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பூபாலசிங்கம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பூபாலசிங்கம் மற்றும் இராஜேஸ்வரி தம்பதியரின் பெறாமகளும், காலஞ்சென்ற சிவலை மற்றும் குஞ்சி தம்பதியரின் அன்பு மருமகளும், கணேசனின் அன்பு மனைவியும், கௌஜியாந் (லண்டன்), கனுஷா (லண்டன்), பிரதீப், ஜென்ஷா ஆகியோரின் பாசமிகு தாயாரும், பிரபாகலேந்திரன் (லண்டன்), கனோஜமதி (லண்டன்), பிரபு ஆகியோரின் அன்பு மாமியும், அக்ஷன் (லண்டன்), சுஜீனா (லண்டன்), சுயாந் (லண்டன்), நிதுஜா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், கமலாம்பிகை, வசந்திமாலா (ஜேர்மனி), சந்திரசேகரம் (அப்பன்), குலசேகரம் (பவுண் - பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், மணி, சின்னம்மா, பரமேஸ்வரி, இரத்தினம், தவமணி, நாகேந்திரம் (பிரான்ஸ்), மல்லிகாதேவி, செல்வமலர் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (05.07.2018) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஊரியான் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கைதடி தெற்கு,**
**கைதடி.**
075 017 4747


**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(ஏ.17992) (13.17)



# பம்பரம்

சொக்கன் விட்ட பம்பரம்
சுற்றிவிட்ட பம்பரம்
தலையை ஆட்டிச் சுற்றுது
தரையில் நின்று சுற்றுது
சாட்டை கொண்டு
சுற்றினால்
தத்தித் தத்திச் சுற்றுமே
அழகு வண்ணப் பம்பரம்
ஆறு காசு பம்பரம்




# அச்சுக்கலை தோன்றியிராவிட்டால்....



அச்சுக்கலை தோன்றியிராவிட்டால் நாம் இன்றும் பனையோலைச் சட்டங்களில் எழுதிக்கொண்டிருப் போம். எமது சிறுவர் தமிழ் எழுத்துக்களை எழுதிப் பழக நீண்டகாலம் எடுத்திருக்கும். 'அறம் செயவிரும்பு' ஆறுவது சினம் என்பவை போன்ற அமுத வாசகங்களை ஓலைச் சுவடிகளில் எழுதி எழுதி அவர்களின் பெருவிரல் தேய்ந்து போயி ருக்கும். பிறநாட்டின் துணியிலும், மரப் பட் டைகளிலும் தாழை மடலிலும் எழுதிச் சலித்திருப்பர்.

அறிவு வெள்ளம் இன்றுபோல பெருகியிருக்காது. அறிவுத் துறை ஆமை வேகத்தில் அசைந்துகொண்டிருக்கும். குறிப்பிடக்கூடிய அளவு சிறு தொகையினரான மக்கள் மட்டும் பயன் பெற்றிருப்பர். செய்தித் தாள்கள், சிறுகதைகள், நெடுங்கதை கள் அறிவியல் நூல்கள் என் பவை மிக மிகக் குறைந்த அளவில் ஆங்காங்கு தோன்றி மறைந்திருக்கும்.

கற்றோர் கூட்டத்தை உலகளா விய நிலையில் கண்டிருக்க முடியாது. பிறநாட்டு நல்லறிஞர் நூல்கள் எமது நாட்டில் நுழைய வாய்ப்பு இருந்திருக்காது. ஆரம்பப் பள்ளிகள், கல்லூரிகள், பாட நூல்கள் என்பவை இன்று நாம் காண்பதுபோன்று



பல்கலைக்கழகங்கள் எங்கோ ஒரு நாட்டில் ஒன்றி ரண்டு மட்டும் இருந்திருக்கலாம். பெரும்பாலானோர் புதிய நோக்குகளையும் விஞ்ஞான விந்தைகளையும் தெரிந்துகொள்ள முடியாதவர்களாக பரமார்த குரு வின் சீடர்களாக இருந்திருப்பர். புதிய புதிய விஞ்ஞா னக் கண்டுபிடிப்புக்கள் உலகின் பல பகுதிகளுக் கும் பரவியிருக்க முடியாது. வீதி யெங்கும் பழைய மாட்டு வண்டி யும் குதிரை வண்டியும் கடகட என்று சத்தமிட்டு ஓடிய வண்ணம் இருக்கும். துவிச்சரக்கர வண்டி முதல் துரித விமானம் வரையி லான சாதனங்கள் நடைமுறைக்கு வந்திருக்கமாட்டா.

வானொலி, தொலைபேசி, தொலைக்காட்சி மற் றும் மின்னியக் கரு விகளின் பயன்பாடு களை அனைத்து லக மக்களும் அனு பவிக்க முடியுமா? உணவு உற்பத்தித் துறையிலே புதிய கண்டு பிடிப்புக்கள் தோன்ற வும் வழி இல்லை. பசியும் பட்டினியும் மனித குலத்தை வாட்டி வதைத்திருக்கும். துன்பமும் துயரும், நோயும் தொடர்ந்திருக் கும். தமிழறிஞர் பலர் பழைய நூல்களின் ஏட்டும் பிரதிகளை அச்சிடுவதற்குத் தேடித் சென்றதும் சரியென பல கறையா னுக்கு உணவாகிக் கழிந்ததும் அவர்கள் கண்ணீர் வடித்த தும், கிடைத்த நூல்கள் சிலவற்றை அரிதின் முயன்று அச்சேற்றி மகிழ்ந்ததும் நாடு அறிந்த கதை.

நாம் பழைய நூல்களைக் காணப்படிக்க பாராட்டப்பட்ட அச் சுக்கலையன்றோ உதவியது வாழிய அச்சுக்கலை.

இன்றைய நாகரீக உலகின் உயிர் அச்சுக்கலை என்று கூறின் அது மிகையாகாது. இன்று கல்விச்சாலைகள், நூல கங்கள், மன்றங்கள், மற்றும் இடங்களிலெல்லாம் நூல்கள் நிறைந்து கிடக்கின்றனவே. அச்சுக்கலையின் அபாரமான சாதனையின் பயன் அன்றோ அவை.

அச்சுக்கலையின் வளர்ச்சி குருத்தோலைக்கிருந்த அவசி யத்தை வெகுவாகக் குறைந்துள்ளது. குருத்தோலை ஏற்று மதியால் கிடைக்கும் அன்னியநாட்டு செலாவணியைக் கெடுத்துவிட்டது.

எழுத்தாணி உற்பத்தியை, உலைக்களங்களின் தொழில் வளர்ச்சியைப் பின்தக்கவைத்து விட்டது என்று சிலர் குறை சொல்லக்கூடும். உண்மைதான். எனினும் அறிவுத்துறை யிலே அபாரமான வளர்ச்சியை உண்டாக்கி 'கண்ணுடை யர் என்போர் கற்றோர்' என்ற உயரிய நிலைக்கு உலகை உயர்த்தியசாதனையைப்போற்றாமல் இருக்க முடியுமா?

# திருடனுக்குப் புதிய கிண்ணம்


புத்தர் ஒரு தடவை சீடர்களுடன் காட்டில் தங்கினார். அவரும் அவருடைய சீடர்களும் அயர்ந்து உறங்கிக் கொண்டி ருந்த சமயம், ஒரு திருடன் அங்கிருந்த கிண்ணம் ஒன்றைத் திருடிக்கொண்டு ஓடிவிட்டான்.

தற்செயலாக விழித்துக்கொண்ட ஒரு சீடன் திருடன் கிண்ணத்துடன் ஓடுவ தைக் கண்டு புத்தரை எழுப்பி அந்த விடயத்தைக் கூறினான்.


புத்தர் கிண்ணம் இருந்த இடத்தைப் பார்த்தார்.

"அடடா அவன் ஓட்டைக் கிண்ணத்தை அல்லவா தூக்கிக்கொண்டு ஓடுகிறான். நீ உடனே ஓடிச்சென்று அவனைக்கண்டு பிடித்து இந்த நல்ல கிண்ணத்தைக் கொடுத்துவிட்டு வா" என்றார்.

சீடனும் நல்ல கிண்ணத்துடன் ஓடித் திருடனைக் கண்டுபிடித்து புத்தர் கூறிய விசயத்தைக் கூறி நல்ல கிண்ணத்தை அவனிடம் கொடுத்தான். புத்தரின் இந்தச் செயல், அவர் கூறிய வார்த்தைகள் திருடனின் மனதை மாற்றிவிட்டன. அவன் அந்த நல்ல கிண்ணத்துடன் திரும்பி வந்து புத்தரின் சீடனாகி விட்டான்.




குறள்–இன்னா
செய்தாரை ஒறுத்தல்
அவர்நாண
நன்னயம்
செய்துவிடல்



## 29 ஆவது பிறந்த தின வாழ்த்துக்களும் 7 ஆம் ஆண்டுகள் கடந்த நினைவுகளும்



**மகேந்திர செல்வம் சுரேன்**

மலர்வு
05.07.1989

உதிர்வு
14.05.2011

தொலை தூரம் நீ இருந்தாலும் எங்கள் சந்தோசத்தை பகிர்ந்திடவும்
உன்னை பிரிந்து கவலையில் வாடும் பொழுதும் தவறாமல் எங்களுள்
வருவது உன் நினைவுகள் தான் சிறகுகள் இல்லை எங்களிடம்
உன்னைத் தேடி வருவதற்கு ஆனால் இதயம் இருக்கின்றது என்றும்
உன்னை நினைத்து வாழ்ந்திட எங்கள் மனதில் சித்திரமாய்
மட்டும்மல்ல சரித்திரமாயும் வாழ்கின்றாய் நீ

38/4, மணல்தறை லேன்,
கந்தர் மடம், யாழ்ப்பாணம்.

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.

## ஏழாம் ஆண்டு இதய அஞ்சலி

தோற்றம்
29 . 07 . 1925



மறைவு
22 . 06 . 2011

திருவாட்டி அமரர் **மகேஸ்வரி இராசேந்திரம்** (சம்பந்தர்மிஸ்)

அன்னையாம் பேய்ச்சி ஆச்சி அடியிணை மறவா வாழ்ந்த
அன்னையாம் மகேஸ்வ ரித்தாய் அகிலமேர் வாழ்வு நீத்துப்
பொன்றியோர் ஆண்டு ஏழு போயினும் மறவா தெங்கள்
சென்மமே யுள்ள மட்டும் செகமதில் நினைத் திருப்போம்

இல.30, நெல்சன்பிளேஸ்,
வெள்ளவத்தை கொழும்பு -06.

**கலாநிதி இ. செந்தில்நிதி.**

## வகுப்புக்கள்

தரம் 1 முதல் 11 வரையான மாணவர் களுக்கான சிங்களம், ஆங்கிலம் சிறப்பான முறையில் கற்பித்து கொடுக்கப்படும்.

**தொடர்பு - 076 469 7959**

## தேவை

01) கூலி வேலை செய்யக்கூடியவர்கள்
02) கொப்பறா, தேங்காய் கொள்வனவு செய்யப்படும்.

**தொடர்பு - 076 822 7536**

## நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு

1 1/2 மாதம் நிரம்பிய ஊசி போட்ட Rich Back Labrado குட்டிகள் விற்பனைக்குண்டு.
14, ஸ்ரீவேங்கடேசன் வீதி, யாழ்ப்பாணம்.

**தொடர்பு - 077 7730 567**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



கடந்த 06.06.2018
புதன்கிழமை இறைபதம் எய்திய
குடும்பத்தலைவி
**அமரர்**
**திருமேனிப்பிள்ளை மாணிக்கரத்தினம்**

மண்ணில்
19.09.1943

விண்ணில்
06.06.2018

அன்புக்கோர் இலக்கணம் வகுத்து
அனைவரையும் ஈர்த்த தாயவளே!
என்புருக்கி எங்கள் அனைவரையும் காத்து
ஏற்றம் பெறவும் வைத்த பெற்றவளே!
வன்மம் நெஞ்சினுள் இருந்ததும் இல்லை
வாய் தவறியும் இழிசொல் நீ பேசியதும் இல்லை!
துன்பம் என்னவென அறியாதும் வளர்ந்து - இன்று
துயரக் கடலினுள் மூழ்கவும் வைத்தே நீ மறைந்ததும்
ஏனோ தாயே!

வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (06.07.2018) வெள்ளிக்கிழமை காலை எமது இல்லத்தில் நடைபெறும். ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப் பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆலடி வீதி,
வல்வெட்டித்துறை.

(cs.17884) (13.17)

குடும்பத்தினர்.
077 917 3549

## கண்ணீர் அஞ்சலி

அல்டி எலக்ரோனிக்ஸ்
நிறுவுனராகிய
**அமரர் சண்முகதாசன்**
அவர்களின்
அன்புத்தந்தையார்



**வேலுப்பிள்ளை செல்லத்துரை**
அவர்களின் பிரிவினால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரது
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**அல்டி எலக்ரோனிக்ஸ், முகாமையாளர், ஊழியர்கள்**
**யாழ்ப்பாணம்.**

## வேலை வாய்ப்பு

சுன்னாகத்தில் இயங்கிவரும் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு விற்பனைப் பிரதிநிதிகள் தேவை.

**தொடர்பு - 077 3867 696**

## சிறுநீரகம் தேவை

48 வயதுடைய சிறுநீரக நோயாளி ஒருவருக்கு O + இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடன் தேவை

**தொடர்பு - 077 383 4349**

## மரண அறிவித்தல்

### திருமதி பாக்கியலட்சுமி செல்லமுத்து



பாடசாலை வீதி, ஆறுகால்மடம், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியலட்சுமி செல்லமுத்து கடந்த (01.07.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சண்முகம் செல்லமுத்துவின் அன்பு மனைவியும் கமலதாஸ் (இத்தாலி), மகிந்தன் (இத்தாலி), யோனித்திரா ஆகியோரின் பாசமிகு தாயாரும் மேரி ஜொனிற்றாவின் (இத்தாலி) அன்பு மாமியாரும் றோசல்யா, றோசியன் (இத்தாலி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.07.2018) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தாவடி, கல்வாரி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாடசாலை வீதி, ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## கலைஞர்களை ஊக்குவிக்கும் செயற்திட்டம்

சிறந்த குரல் வளமுடைய மேடை அனுபவம் இல்லாத பாடகர்கள் /பாடகிகள் இசைக்கருவி விற்பன்னர்களை ஊக்குவிக்கும் வகையில் எமது நிறுவனம் ஒரு செயற்திட்டத்தினை முன்னெடுக்கவுள்ளது. இச் செயற்திட்டத்தில் இணைய விரும்புவோர் விண்ணப்பிக்க.

தொடர்பு - 076 5541 472, 021 222 2478
இல. 140, பலாலி வீதி, திருநெல்வேலி.
Email : theepam2018@yahoo.com

## கண்ணீர் அஞ்சலி

சங்க உறுப்பினர் **திருமதி இதயறஞ்சினி காண்டீபன்**
அவர்களின் அன்புத்தாயார்
திருமதி **வள்ளியம்மை ஐயாத்துரை**
அவர்கள் (02.07.2018) திங்கட்கிழமை காலமானார்.
அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்ம சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

**சாவகச்சேரி பிரதேசசபை ஊழியர் நலன்புரிச்சங்கம், கொடிகாமம்.**

## அத்திபார காட்டுக்கல்

மலிவு விற்பனையில் உடன் அகற்ற வேண்டும்.

**யாழ். பாடி**
49 - 51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
021 222 6868, 077 736 0353




## கட்டடம் வாடகைக்கு தேவை

அண்ணளவாக 3000 சதுரஅடி கொண்ட கட்டடம் அரச பாடசாலை ஒன்றிற்கு தேவை.

PASS CONSULTING
075 9360 370

Server and Router Configuration

## கணினி திருத்தம்

உங்கள் அலுவலகங்கள், வீடுகளில் கணினி, மடிக்கணினி (Laptop) பழுதடைந்து விட்டதா? உங்கள் இருப்பிடத்திற்கே வந்து திருத்தித் தரப்படும்

ALM COMPUTER SYSTEM
077 243 8537 / 077 510 1506

# 17 ஆம் ஆண்டு நினைவுகளில்



மண்ணில் 17.05.1977

விண்ணில் 05.07.2001

## நடராஜா உதயராஜ்

(விசுவமடு மேற்கு, விசுவமடு)

ஆண்டுகள் பதினேழு கடந்துவிட்டாலும்
நீ எம்மோடு உறவாடிய பொழுதுகள்
என்றும் எம் முன்பே
உதயா நீ உறங்குகிறாய் நாமோ உன்
நினைவுகளுடன் வாழ்கின்றோம்.

என்றும் அழியாத உன் நினைவுகளுடன்

**செல்வம் ஹாட்வெயார் and செல்வம் சைக்கிள் றேடர்ஸ்**
**விசுவமடு.**

# கண்ணீர் அஞ்சலி

ரில்கோ விருந்தினர் விடுதியில்
(Tilko Jaffna City Hotel) இல்
கடமையாற்றும்
திரு. யூட் ஜெயக்குமார் அவர்களின்
தாயாராகிய

**திருமதி ஆசீர்வாதம்**
**மரியமாகிறேட் (பேபி)**



பிறப்பு 04.05.1950

இறப்பு 04.07.2018

அவர்கள் நேற்று (04.07.2018)
புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் குடும்பத்தாருக்கு ரில்கோ நிறுவனம் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**ரில்கோ உரிமையாளரும், பணியாளர்களும்.**

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 19 - 10 - 1937



மறைவு 05 - 07 - 2015

## அமரர் சு.பொ. நடராசா

(அண்ணா தொழிலக ஸ்தாபகர்)

சுந்தர வதனமும் சுகம் தரும் பேச்சும்
மந்திரப்புன்னகையும் மகிழ்வுடன் தந்தீர்
எந்தையே எமைவிட்டு ஏன் பிரிந்திட்டீர்
சிந்தையில் வைத்து என்றும் சேவித்து வாழ்வோம்.

குடும்பத்தினரும்,
அண்ணா தொழிலகம்,
அண்ணா இன்றநசனல் NTK இன்டஸ்ரீஸ் ஊழியர்களும்.

## தேவை

அரைக்கும் ஆலைக்கு வேலை தெரிந்தவர், பயிலுனர் மேலும் பொதியிடல், பில்கிளாக், உதவியாளர், சமையல் என்பவற்றுக்கு பெண்கள் தேவை.

**தொடர்பு - 077 174 6101**

## பைக்கோ வாடகைக்கு விடப்படும்

குளம், கிணறு, குழி வெட்டுதல், கல்லுடைத்தல் போன்ற வேலைகள் செய்து தரப்படும்.

**லைரா போட்டோ கொப்பி**
**ஆவரங்கால். 077 2769 715**

## வேலை வாய்ப்பு

யூஸ் பைக்கற்றுக்களை பொதி செய்வதற்கு வேலையாள்கள் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

அம்மா யூஸ் இல. 28, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.

T. P : 077 758 7079, 077 711 1530

# திறப்புவிழா அழைப்பிதழ்

Jaffna matrimony

அன்புடையீர்,

நிகழும் 2018-ம் ஆண்டு ஜீலை 5ம் திகதி வியாழக்கிழமை
காலை 10.59 மேல் 12.45 வரையுள்ள கன்னி லக்கின
சுபமுகூர்த்த நன் நாளில்

நல்லூர் ஆயை தெற்கு வீதியில்
எங்களால் ஆரம்பிக்கப்படவுள்ள
Jaffna Matrimony நிறுவனத்தினை

**திரு.கு.விக்னேஸ்**
Director/CEO, IIS City Campus

அவர்கள் திறந்து சிறப்பிக்கின்றார்.

தாங்கள் சுற்றம் சூழ வருகை தந்து விழாவினை சிறப்பித்து
நல்லாதரவு நல்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் அன்புள்ள,
Jaffna Matrimony (Pvt) Ltd
நிறுவனத்தினர்.

590/ 2, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
தொடர்பு : 0212224662
0770222272

# மரண அறிவித்தல்

## திருமதி இராசம்மா வரப்பிரகாசம்



முள்ளியவளையைப் பிறப்பிடமாகவும், கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா வரப்பிரகாசம் நேற்று (04.07.2018) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அண்ணாவியார் எலியாஸ் வரப்பிரகாசத்தின் அன்பு மனைவியும் யுஸ்ரினா, யுனைற்கிங்சிலி (பிரான்ஸ்) காலஞ்சென்ற யுஸ் ரீபன் ஆகியோரின் அன்புத்தாயும் ஸ்ரலின், யசோதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் சசிக்கா, செலஸ்ரினா, சதிஸ்ரன் - ஜீவிதா, றொசான், நிசான், ஸ் ரீபன், ஜினோஜன், ஜனுயன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் சாதுஜன், டினுஸ்ரன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஞானம்மா, அம்மார்த்தினம் ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்றவர்களான குருசுமுத்து, ஞானப்பு, பொன்னுத்துரை, நேசமணி ஆகியோரின் அன்புமைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (05.07.2018) வியாழக்கிழமை பி.ப. 3 மணிக்கு அவரின் இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு கொழும்புத்துறை புனிதசெபமாலைஅன்னைஆலயத்தில்இரங்கல்திருப்பலிஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.






# பாராட்டி வாழ்த்துகின்றோம்

திரு.
மருதையினார்
தர்மசீலன்

National Dip. in Teach.(merit),B.A
PGDE(Dic),M.A(2nd class),
MED.(1st class)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 33வது பட்டமளிப்பு விழாவில் முதுகல்விமாணிப்பட்டத்தைப்பெற்றதோடு, இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் வகுப்பு III ற்கான பதவியுயர்வையும் பெற்றுச் சென்ற எமது பாடசாலை அதிபரைப் பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் பல பட்டங்கள் பெற்று வாழ்வில் உயர வாழ்த்துகின்றோம்

பாடசாலைச் சமூகம்
யா/சரசாலை ஸ்ரீ கணேச வித்தியாலயம்

# வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கும் முன்னணி Hotel இற்கு பின்வரும் பணியாளர்கள் தேவைப்படுகின்றார்கள்.

- **சமையல் கலை பயிலுனர்கள்** - Trainee Chef
  **சர்வதேச அனுபவம்மிக்க Chef இனால் பயிற்சி வழங்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும்.**
- **உணவு பரிமாறுபவர்கள் (பயிலுனர்கள்)** - Trainee waiters
  **பயிற்சிக் காலத்தின் போது சம்பளம் வழங்கப்படும்.**
- **சமையல் அறை உதவியாளர்கள்** - Kitchen helper

உணவு மற்றும் தங்குமிட வசதிகள் செய்து தரப்படும்.
தங்களது சுயவிவரக் கோவையை 10.07.2018 இற்கு முன்னர் நேரில் அல்லது கீழ்காணும் முகவரிக்கு அனுப்புமாறு கேட்டுகொள்ளப்படுகின்றீர்கள்.

**தொடர்புகளுக்கு - 077 769 6443**
**077 762 8320**
Tilko Jaffna City Hotel.
70/6, K.K.S. Road, Jaffna.

## மரண அறிவித்தல்

# சுப்பையா நாகேந்திரன்

(ஓய்வுபெற்ற லிகிதர், பெருந்தோட்ட கூட்டுத்தாபனம்)



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 14.06.1938 | 03.07.2018 |

கைதடி வடக்கைப் பிறப்பிட மாகவும் கைதடி மேற்கை வசிப்பிட மாகவும் தற்போது இல.12, அம்மன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா நாகேந்திரன் 03.07.2018 செவ்வாய்க்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்க ளான சுப்பையா - இலச்சுமிப் பிள்ளை தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்றவர்களான சுப்பிர மணியம், தங்கம்மா தம்பதியரின் மருமகனும், மகேஸ்வரியின் அன் புக் கணவரும், மிதிலா (தேசிய சேமிப்பு வங்கி, வடபிராந்தியம்) டர்ஷன் (கொழும்பு), சஷிதரன் (Brunai) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மயூரன் (முகாமையாளர், தேசிய சேமிப்பு வங்கி - காரைநகர்) சிவாஜினி (ஆசிரியை, கொழும்பு), பிரபாலினி ஆகியோரின் மாமனும், காலஞ்சென்ற வர்களான இராமலிங்கம், சரஸ்வதிதேவி மற்றும் சிவ பாக்கியம் ஆகியோ ரின் பாசமிகு சகோதரனும்,காலஞ்சென்றவர்களான கோடீஸ்வரன், சறோ ஜினிதேவி மற்றும் யோகேஸ்வரன் (கனடா), செல்வராசா (ஓய்வுபெற்ற கிராம அலுவலகர்), கமலாஜனிதேவி ஆகியோரின் மைத்துனரும், அக் ஷயா, அஷ்னிகா, காருண்யா, வருணிகா, பிருந்திகா, சதுஷ்ரிகா, சிருஷ்ரிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.07.2018) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.12, அம்மன் வீதி,**
**கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

## வடக்கு...

வித்து நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு மாகாண அமைச்சராக இருந்த பா.டெனீஸ்வரனை அமைச்சுப் பதவியிலிருந்து நீக்குவதாக கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அறிவித்திருந்தார். அவரது இந்த நடவடிக்கைக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் டெனீஸ்வரன் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கு மீதான தீர்ப்பு கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டது.

டெனீஸ்வரன் அமைச்சராகத் தொடர்கின்றார் எனவும், அவரது அமைச்சுப் பொறுப்புக்களைப் பங்கிட்டு புதியவர்களுக்கு வழங்கி வெளியிட்ட அரசிதழ் இல்லாமல் செய்யப்படுவதாகவும் மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலத் தீர்ப்பு வழங்கியது.

இந்தத் தீர்ப்புக்கு அமைவாக தனது அமைச்சு மற்றும் செயலரை தருமாறு கோரி அமைச்சர் பா.டெனீஸ்வரன் ஆளுநருக்கு கடிதம் அனுப்பியிருந்தார். வடக்கு மாகாண ஆளுநர் குரே, டெனீஸ்வரனை உள்ளடக்கிய புதிய அமைச்சரவைப் பட்டியலைத் தருமாறு வடக்கு முதலமைச்சருக்கு கடிதம் அனுப்பியிருந்தார்.

இந்த நிலையில், அமைச்சர் பதவியில் டெனீஸ்வரன் தொடர்வதற்கு இடையூறு விளைவிக்கக் கூடாது என்று இடைக்காலத் தீர்ப்பு வழங்கப்பட்டும் அது இன்னமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இது நீதிமன்ற அவமதிப்பாகும். இதனடிப்படையில் வழக்குத் தாக்கல் செய்வதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன. (5)

## மரண அறிவித்தல்கள்

# செல்லப்பா நவரத்தினம்

(இளைப்பாறிய உதவிக் கணக்காய்வாளர் நாயகம்)



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 02.06.1929 | 02.07.2018 |

யாழ்ப்பாணம் சாவகச்சேரி கல்வயல் 2 ஆம் கட்டையைப் பிறப்பிடமாகவும், நீராவியடி மற்றும் கொழும்பு - 06, வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட செல்லப்பா நவரத்தினம் 02.07.2018 கொழும்பில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - அம்மணிப்பிள்ளை தம்பதியரின் ஏகபுதல்வனும், நீராவியடியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - இராசம்மா தம்பதியரின் மருமகனும், மகேஸ்வரியின் (பேபி) பாசமிகு கணவரும், வாசுகி, குகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஐங்கரனின் அன்பு மாமனும், பிரணவனின் ஆருயிர் பேரனும், இரத்தினம்பாளின் உடன் பிறவா சகோதரனும், இராஜரத்தினத்தின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம், இராஜலக்சுமி, இராஜேந்திரன் மற்றும் கமலேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக இன்று (05.07.2018) வியாழக்கிழமை பொரளை ஜெயரத்ன மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு அன்று பிற்பகல் ஒரு மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி மாலை 4.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பொரளை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**543 / 7, காலி வீதி,**
**கொழும்பு - 06.**
**011 250 3300 / 071860 9293**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 18 | 04 |
| 11 | 07 |
| 1943 | 2018 |



# சரவணை குணரத்தினம்

யாழ். கூழாவடி ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சரவணை குணரத்தினம் நேற்று (04.07.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணை சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி மாணிக்கம் தம்பதியரின் அன்புமருமகனும் செல்வராணி (ராணி)யின் அன்புக்கணவரும் குகன். நிஷா, தீபன் ஆகியோரின் அன்புத்தந்தையும் சுகந்தி, மதன் ஆகியோரின் அன்புமாமனும் றுபிக்ஷன்,றுபிக்ஷா ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னரரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.07.2018) வியாழக் கிழமை பி. ப. 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காக்கைதீவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## வடக்குக்...

யாழ்ப்பாணம், ஜூலை 5

வடக்குக் கடலில் 'வயலர்ஸ்' கருவியைப் பயன்படுத்தலாம். அதற்கு எந்தத் தடையும் இனி இருக்காது. இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட இராணுவத் தளபதி தர்சன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனத்தினருக்கும், யாழ்ப்பாண மாவட்ட இராணுவத் தளபதிக்கும் இடையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி முதல் 11 மணி வரையில் சந்திப்பு நடைபெற்றது. இந்தச் சந்திப்பிலேயே, இராணுவத் தளபதி மேற்கண்டவாறு தெரிவித்ததாக, சம்மேளனத்தினர் தெரிவித்தனர். இந்தச் சந்திப்புத் தொடர்பில் சம்மேளனத் தலைவர் வே.தவச்செல்வம் மேலும் தெரிவித்ததாவது:

வெளிச்ச வீட்டுக் கோபுரங்கள் கடற்படையினரின் ஆக்கிரமிப்பில் உள்ளன. அவற்றை விடுவிக்க வேண்டும். படையினரின் ஆக்கிரமிப்பிலுள்ள கடற்றொழிலாளர்களின் காணிகள்விடுவிக்கப்படவேண்டும். கடற்றொழிலாளர்கள் 'வயலர்ஸ்' கருவியைப் பயன்படுத்த அனுமதிக்க வேண்டும். கடற்றொழிலில் இராணுவத்தினரின் தலையீடு நிறுத்தப்படவேண்டும். இந்தக் கோரிக்கைகளை இராணுவத் தளபதியிடம்முன்வைத்தோம். அதற்கு அவர், கடற்படை அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி, வெளிச்சவீடுகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும். கடற்றொழிலாளர்களுக்கு இராணுவத்தினர் இடையூறு விளைவிக்கமாட்டார்கள். 'வயலர்ஸ்' கருவி வடக்குக் கடலில் பயன்படுத்த இதுவரையும் தடை விதிக்கப்பட்டிருந்தது. இனிமேல் அந்தத் தடை இருக்காது என்றார் (5,113)

# பாசையூர் அன்ரனிஸ் வித்தியாலயம் பளுதூக்கலில் தேசியத்தில் மகுடம்






யாழ்ப்பாணம், ஜீலை 5
கந்தளாய் அக்கிரபோதி தேசிய பாடசாலையில் நடைபெற்ற பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட பளுதூக்கல் தொடரில் 17 வயதுப் பெண்கள் பிரிவில் பாசையூர் சென். அன்ரனிஸ் றோமன் கத்தோலிக்க மகளிர் வித்தியாலயத்துக்கு 3 தங்கப்பதக்கங்கள், ஒரு வெண்கலப் பதக்கம் கிடைத்துள்ளது. இதையடுத்து அந்தப் பாடசாலை அணி தேசியத்தில் சம்பியனாகவும் மாறியது.
திருகோணமலை கந்தளாய் அக்கிரபோதி தேசிய பாடசாலையில் இந்தப் போட்டிகள் இடம் பெற்றன. பாசையூர் சென். அன்ரனிஸ் றோமன் கத்தோலிக்க மகளிர் வித்தியால யத்தைப் பிரதிநிதித்துவம் செய்த திசாளினி 48 கிலோ எடைப்பிரிவில் சினெச் முறையில் 42 கிலோ பளுவையும், கிளின் அன்ட் ஜக் முறையில் 50 கிலோ பளுவையும் என மொத்தமாக 92 கிலோ பளுவைத் தூக்கி தங்கப்பதக்கத்தையும், ஆன் பியூலா சினெச் முறையில் 42 கிலோ பளு, கிளின் அன்ட் ஜக் முறையில் 50 கிலோ எடை என மொத்தமாக 92 கிலோ பளுவைத் தூக்கி தங்கப்பதக்கத்தையும், சுகன்யா 75 கிலோ எடைப்பிரிவில் சினெச் முறையில் 55 கிலோ பளு, கிளீன் அன்ட் ஜக் முறையில் 65 கிலோ பளு என்று மொத்தமாக 120 கிலோ பளுவைத் தூக்கி தங்கப் பதக்கத்தையும் கைப்பற்றினர். ஸ்ரெலா 53 கிலோ எடைப்பிரிவில் சினெச் முறையில் 32 கிலோ பளுவையும், கிளீன் அன்ட் ஜக் முறையில் 45 கிலோ பளுவையும் என்று மொத்தமாக 77 கிலோ பளுவைத் தூக்கி வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றினார். (ம-23)



## ஆவரங்கால் இந்து இளைஞர் கரப்பந்தாட்டத்தில் சாதித்தது

அச்சுவேலி விக்னேஸ்வரா சனசமூக நிலையம், அச்சுவேலி விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம் இணைந்து நடத்திய பொ.பாலகிருஸ்னன் ஞாபகார்த வெற்றிக் கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டத் தொடரில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி சம்பியனானது.
அச்சுவேலி விக்னேஸ்வரா மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி மோதியது. 5 செற்களைக் கொண்டாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 25:14 என்ற புள்ளிகளின் அடிப்படையில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி வென்றது. தனது அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஆவரங்கால் இந்து இளைஞர் அணி அடுத்த மூன்று செற்களையும் முறையே 25:22, 25:21, 25:23 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றிப்பெற்று கிண்ணம் வென்றது. (ம-23)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜ_லை 5
**வசந்தசிறி வி.க. தாச்சித் தொடர்**
சண்டிலிப்பாய் வசந்தசிறி விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் கண்ணகி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவலர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
இரவு 8.15 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சீத்தி விநாயகர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சாந்தை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**கூடைப்பந்தாட்டம்**
யாழ்ப்பாணம் கூடைப்பந்தாட்டச் சங்கத்தால் நடத்தப்படும் பெண்களுக்கான. கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் பழைய பூங்காவில் அமைந்துள்ள கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை மாலை இடம்பெறும் ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பட்டபிளை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

# தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி கால்பந்தாட்டத்தில் சம்பியனானது




யாழ்ப்பாணம், ஜ_லை 5
நெஸ்லே லங்கா நிறுவனமும், இலங்கைப் பாடசாலைகள் கால்பந்தாட்டச் சங்கமும் இணைந்து நடத்திய வடமாகாணப் பாடசாலைகளைச் சேர்ந்த 12 வயதுப்பிரிவு அணிகளுக்கான தொடரில் பெண்கள் பிரிவில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி கிண்ணம் வென்றது.
யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணியை எதிர்த்து இராமநாதபுரம் கிழக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அணி மோதியது. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியின் ஆறாவது நிமிடத்தில் மகாஜனாவின் கோலைப் பதிவு செய்தார் லயன்சிகா. முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி. (ம-23)

## வென்றது வைகறை

சண்டிலிப்பாய் வசந்தசிறி விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சித் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் வைகறை அணி வெற்றிபெற்றது. வசந்தசிறி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாவலர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வைகறை விளையாட்டுக் கழக அணி மோதிய ஆட்டத்தில் 7:2 என்ற புள்ளிகளின் அடிப்டையில் வைகறை விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)


## காளியம்பாள் அதிரடி

யாழ்ப்பாணம், ஜீலை 5
சண்டிலிப்பாய் வசந்தசிறி விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சித் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் தாவடி காளியம்பாள் அணி அபார வெற்றிபெற்றது.
வசந்த சிறி விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இரவு 8 மணிக்கு இடம் பெற்ற ஆட்டத்தில் மயிலிட்டிபாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழக அணி மோதிய ஆட்டத்தில் 10:5 என்ற புள்ளிகளின் அடிப்டையில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)

# காலிறுதியில் இங்கிலாந்து

உலகக்கிண்ணத் தொடரில் நேற்று முன்தினம் நள்ளிரவு நடைபெற்ற காலிறுதிக்குத் தகுதிபெறும் ஆட்டத்தில் கொலம்பியாவை வெற்றிபெற்று காலிறுதிக்குத் தகுதி பெற்றது இங்கிலாந்து.
இங்கிலாந்தின் அணித் தலைவரும் இந்த உலகக்கிண்ணத் தொடரில் அதிக கோல்களைப் பதிவுசெய்தவர்களின் பட்டியலில் முதலிடத்தில் உள்ள வருமான ஹரி கேன் மீதுதான் கொலம்பியாவின் கவனம் இருந்தது. அவரை எப்படியாவது கட்டுப்படுத்தி விடவேண்டும் என்பதில் கொலம்பியர்கள் தீவிரம் காட்டினார்கள். இதனால் கொலம்பியாவின் முன்வரிசையில் தொய்வு நிலையே இருந்தது.
இந்தத் தொய்வுநிலை இங்கிலாந்து கொலம்பியாவின் பகுதிக்குள் அதிகளவான நேரம் பந்துடைமையைக் கொண்டிருக்க காரணமாக அமைந்தது. முதல் பாதியில் இங்கிலாந்து கொலம்பியாவின் கோல் கம்பங்களை நோக்கி 7 உதைகளையும், கொலம்பியா இங்கிலாந்தின் கோல் கம்பங்களை நோக்கி 9 உதைகளையும் மேற்கொண்டிருந்தன. எனினும் கோல் எதுவும் பதிவாகவில்லை.
57ஆவது நிமிடத்தில் ஹரி கேனை முறையற்ற விதத்தில் கொலம்பிய வீரர் தடுத்ததால் பெனால்டி வாய்ப்பு இங்கிலாந்தைத் தேடி வந்தது. அதைக் கோலாக மாற்றினார் ஹரி. பின்னர் 90ஆவது நிமிடங்கள் வரையில் இங்கிலாந்தே ஆதிக்கம் செலுத்தியது.
ஆனால் கொலம்பியாவுக்கு சிறு வாய்ப்பேனும் கிடைக்கவில்லை என்று சொல்லுவதற்கில்லை. சுமார் 5 தடவைகள் இங்கிலாந்தின் கோல் கம்பங்களுக்கு மிகவும் நெருக்கமாகச் சென்று ஏமாற்றமடைந்தனர் கொலம்பிய வீரர்கள். 93ஆவது நிமிடத்தில் ஜெரி மில்னே கொலம்பியாவின் கோலைப் பதிவுசெய்து கோல் கணக்கை 1:1 என்றாக்கினார். வழங்கப்பட்ட மேலதிக நிமிடங்களில் கோல் எதுவும் பதிவாகவில்லை.
சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 4:3 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றது. (ம)





## ஹரி 6 கோல்கள்

கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடரில் தனது ஆறாவது கோலைப் பதிவு செய்தார் இங்கிலாந்து அணியின் தலைவர் ஹரி கேன்.
கொலம்பியாவுக்கு எதிராக நேற்று முன்தினம் நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் இங்கிலாந்து வெற்றிபெற்றது. ஆட்டத்தின் 57ஆவது நிமிடத்தில் ஹரி கோலொன்றைப் பதிவுசெய்தார். இந்தக் கோல் நடப்பு வருட உலகக்கிண்ணத் தொடரில் ஹரி கேன் பதிவுசெய்த ஆறாவது கோலாக அமைந்தது.
நடப்பு வரு உலகக்கிண்ணத் தொடரில் அதிக கோல்களைப் பதிவுசெய்தவராகவும் ஹரி கேன் உள்ளார். இரண்டாவது இடத்தில் 4 கோல்களுடன் போர்த்துக்கல் அணியின் தலைவர் ரொனால்டோ உள்ளார். (ம)



## கால்பந்து உலகக்கிண்ணம் காலிறுதியிலுள்ள அணிகள்




உலகக்கிண்ண கால்பந்துத் தொடர் ரஷ்யாவில் தற்போது நடைபெற்று வருகிறது. காலிறுதிச் சுற்றுக்குத் தகுதிபெற்றுள்ள அணிகளின் விவரங்கள் நேற்றுமுன்தினத்துடன் முழுமை பெற்றுள்ளன.
இதன்படி காலிறுதிச் சுற்றுக்கு பிரேசில், பிரான்ஸ், சுவீடன், பெல்ஜியம், உருகுவே, இங்கிலாந்து, ரஷ்யா, குரோசியா ஆகிய அணிகள் தகுதி பெற்றுள்ளன.
நாளை இரண்டு காலிறுதி ஆட்டங்கள் இடம்பெறவுள்ளன. இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் காலிறுதி ஆட்டத்தில் உருகுவேயை எதிர்த்து பிரான்ஸ் மோதவுள்ளது. இரவு 11.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது காலிறுதியில் பிரேசிலை எதிர்த்து பெல்ஜியம் மோதவுள்ளது.
நாளை மறுதினம் இரண்டு காலிறுதி ஆட்டங்கள் நடைபெறவுள்ளன. இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் மூன்றாவது காலிறுதி ஆட்டத்தில் சுவீடனை எதிர்த்து இங்கிலாந்து மோதவுள்ளது. இரவு 11.30 மணிக்கு இடம்பெறும் நான்காவது காலிறுதி ஆட்டத்தில் ரஷ்யாவை எதிர்த்து குரோசியா மோதவுள்ளது.
பிரான்ஸ் ஆர்ஜென்ரீனாவை வீழ்த்தியும், உருகுவே போர்த்துக்கலை வீழ்த்தியும், ரஷ்யா ஸ்பெய்னை வீழ்த்தியும், குரோசியா டென்மார்க்கை வீழ்த்தியும், பிரேசில் மெக்சிக்கோவை வீழ்த்தியும், பெல்ஜியம் ஜப்பானை வீழ்த்தியும், சுவீடன் சுவிற்சர்லாந்தை வீழ்த்தியும், இங்கிலாந்து கொலம்பியாவை வீழ்த்தியும் காலிறுதிக்குத் தகுதி பெற்றன.
(ம)

# இங்கிலாந்தைப் புரட்டியது இந்தியா

இங்கிலாந்து இந்தியா அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக்கொண்ட ரி-20 தொடரில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு நடைபெற்ற ஆட்டத்தில் இந்திய அணி அபார வெற்றிபெற்றது. இங்கிலாந்தின் மைதானத்தில் வைத்து அந்த அணியையே புரட்டியெடுத்தது இந்திய அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரி மாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 159 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக பட்லர் 69 ஓட்டங்களையும், றோய் 30 ஓட்டங்களையும், வில்லி 29 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் குல்தீப் யாதவ் 5 இலக்குகளையும், உமேஸ் யாதவ் 2 இலக்குகளையும், ஹார்டிக் பாண்டியா ஓர் இலக்கையும் கைப்பற்றினார்.



பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணி 10 பந்துகள் மீதமிருக்க 2 இலக்குகளை மாத்திரம் இழந்து அபார வெற்றிபெற்றது. தவான் 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றிய போதிலும் ராகுல் ஆரம்பம் முதல் அதிரடியாக விளையாடினார். அவர் 54 பந்துகளில் 101 ஓட்டங்களைக் குவித்து இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்து இந்திய அணியின் வெற்றிக்கு வித்திட்டார். ராகுல் ஆட்டநாயகனாகவும் தெரிவானார்.

இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது ரி-20 ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது. (ம)


ஷாம்சனின் SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
ஆசிரியர்கள், அரச தனியார் அலுவலர்கள்
பட்டதாரிகள், உயர்கல்வி மாணவர்கள்
வெளிநாடுசெல்வோர், இளைஞர் யுவதிகள்
சனி, ஞாயிறு பிரிவுகள் - 07. 07. 2018
சனி, ஞாயிறு 3 மாத பயிற்சி
பிரிவு1: 08-10 பிரிவு2: 03-05
செவ், வியாழன் பிரிவுகள் - 10. 07. 2018
செவ், வியாழன் 3 மாத பயிற்சி
பிரிவு1: 08-10 பிரிவு2: 10-12
ஒரு பிரிவில் 20 பேர் மட்டும்
SAAMSON 279,வெலிங்டன் சந்தி, யாழ்நகர். 077 1570 486 021 3203313

A/L - ICT
வகுப்புக்கள்
2019-A/L & 2020-A/L
- With Smart Class Rooms
DMI COMPUTER EDUCATION
Practical + Theory
ஆரம்பம் 07-07-2018
DMI COMPUTER EDUCATION
M. M. V வீதி (நந்திய மகாவித்தியாலயம் அருகில் காளி கோவில் முன்பாக)
021 226 2470 நெல்லியடி 0777 17 35 17

மணமகள் தேவை
யாழ்ப்பாணம் இந்து குடும்பத்தைச் சேர்ந்த மணமகனுக்கு மணமகள் தேவை.
1981இல் பிறந்தவரும் தற்போது வெளிநாட்டில் வசிப்பவரும்
(வெளிநாட்டு பிரஜை உரிமையுடையவர்) படித்த நற்குணமுடைய 28 - 33 வயது உடைய மணமகளைத் தேடுகின்றோம்.
(தரகர்மாரும் தொடர்பு கொள்ளலாம்)
தொடர்புகளுக்கு:
நிரந்தர இலக்கம் : 004178 690 4093 (தாய், தந்தை)
(Viber, Whats app, imo)
தற்காலிக இலக்கம் : 076 193 2816
(3 Week மட்டும்)
(AKN 9276/15/17)

குருபட்டம் தரித்தல்
(ஆச்சார்ய அபிஷேக விஞ்ஞாபனம்)
நிகழும் மங்களகரமான விளம்பி வருடம் ஆனி மாதம் 21 ஆம் நாள் (05.07.2018) வியாழக்கிழமை சப்தமி திதியும் உத்தரட்டாதி நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபதினத்தில் பகல் 10.59 முதல் 12.40 வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்



நெடுந்தீவு சிவஸ்ரீ தியாகராஜாக் குருக்கள்
ஸ்ரீமதி சுந்தரம்மா தியாகராஜாக் குருக்கள்
தம்பதிகளின் பௌத்திரனும்,
நாயன்மார்கட்டு சிவஸ்ரீ ஸ்கந்ததாஸ சாம்பசிவ சிவாச்சாரியார்
தம்பதிகளின் தௌகித்திரனும்,
நெடுந்தீவு சிவஸ்ரீ தியாகராஜா பத்மநாதக் குருக்கள்
ஸ்ரீமதி பங்கஜவல்லி பத்மநாதக் குருக்கள் தம்பதிகளின்
கனிஷ்ட புத்திரனுமாகிய
ப்ரம்ம ஸ்ரீ
பத்மநாதக் குருக்கள்
சனக்குமார சர்மா
அவர்களுக்கு கரமத்தை ஸ்ரீ கந்தசுவாமி, நெழுவினி சித்தி விக்னேஸ்வர சுவாமி முகத்துவாரம்' சர்வார்த்த சித்தி விக்னேஸ்வர சுவாமி
நாயன்மார்கட்டு ராஜராஜேஸ்வரி அம்பாள்
திருவருளோடும் பெரியோரின் நல்லாசியுடனும்
ஆச்சார்ய அபிஷேகம் நடைபெற
திருவருள் பாலித்துள்ளது.
இடம்:-
ஆனைக்கோட்டை உயரப்புலம் உத்துங்க விநாயகர் ஆலயம்
தீக்ஷா குரு:- "ஊரெழு" வாகீஸ்வர சிவாச்சாரியார்
சுபமஸ்து
சிவஸ்ரீ ப.சனக்குமார குருக்கள்.
075 019 9277, 075 648 0755

விஸ்டம்
தொழில் நுட்பக் கல்லூரி
இல63 சிவன் வடக்கு வீதி வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம்.
இம் முறை உயர்தரப் பரீட்சை எழுதவிருக்கும்
தொழினுட்பப்பிரிவு மாணவர்களுக்கான
தொழினுட்பச் செயலமர்வு
- 6ஆம், 7ஆம், 8ஆம், 9ஆம், 10ஆம், 12ஆம், 13ஆம், 14ஆம் திகதிகளில்
- தொழினுட்பப்பிரிவில் அனைத்துப் பாடங்களும்
- அனைத்து மாணவர்களும் பங்கு பற்றலாம்
- இறுதிச் சந்தர்ப்பம் தவறவிடாதீர்கள்
மேலதிக விபரங்களுக்கு 077 2487774

FLC FRENCH LANGUAGE CENTRE
பிரெஞ்சு
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.
V. ஜெகன் (Trained in France- 2007)
40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 14.07.18 சனி 1 மணி.
181, பிரதான வீதி, நெல்லியடி. 021 320 2973 ஆரம்பம் :16.07.18 மாலை 3.30 மணி
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1, Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

A/L மாணவர்களுக்கான
கருத்தரங்கு
கொழும்பு றோயல் கல்லூரி ஆசிரியரின்
வழிகாட்டலில் இலவச இறுதிக் கருத்தரங்கு - 2018
பாடங்கள் - பௌதிகவியல் மற்றும் இரசாயனவியல்
இடம் - யாழ்.இந்துக் கல்லூரி (ஆண்களுக்கு)
யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி (பெண்களுக்கு)
காலம் - 06.07.2018
நேரம் - காலை 8.00 மணிமுதல்
(CS/17866)(11,17)
பதிவுகளுக்கு:- 076 601 8862, 071 377 4860

ALLIANCE FRANCAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.
www.ambafrancelk.org
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

விசேட கருத்தரங்கு
July 14 இல் நடைபெறவுள்ள முகாமைத்துவ உதவியாளர் சேவை தரம் III மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை
காலம்:
07/07/2018 08/07/2018 Sat, Sun 9.00 - 4.00 PM
நுண்ணறிவு P.கமல்தாசன்
விசேட வளவாளர் S.சத்தியமூர்த்தி
நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்.நகர்.
T.P. 077 469 6695


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.07.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.